REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஜூன் 21 வெள்ளிக்கிழமை

# தினகரன்
THINAKARAN
தினகரன்
92 1932–2024 ANNIVERSARY

வரு. 92 இல. 147 | Friday 21, June, 2024 | 16பக்கங்கள் | 50/-




வரலாற்று சிறப்புமிக்க யாழ்ப்பாணம், நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவ தேர்த்திருவிழா நேற்று நடைபெற்றபோது பிடிக்கப்பட்ட படம். கடந்த 07ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான மகோற்சவம் தொடர்ந்து 14 நாட்கள் நடைபெற்று நேற்றைய தினம் தேர்த்திருவிழா நடைபெற்றது. இன்று வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவுடன் மாலை துவஜாவரோஹனத்துடன் மகோற்சவம் நிறைவு பெறும். (படம்: யாழ். விசேட நிருபர்)



## இன்று பொசன் பௌர்ணமி தினம் நாடு முழுவதும் 322 பொசன் வலயங்கள்


### ஹோமாகம பொசன் வலயத்தில் விசேட ஏற்பாடுகள்

பொசன் பௌர்ணமி தினம் இன்று. இதனை முன்னிட்டு, நாடு முழுவதும் 322 பொசன் வலயங்கள், 296 அலங்கார தோரணங்கள் மற்றும் 4,600 அன்னதான சாலைகள் அடங்கலாக 6,000 நிகழ்வுகள் நாடளாவிய ரீதியில் நடைபெறவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, நாடளாவிய ரீதியில் 11,100 விகாரைகளில் பல்வேறு சமய நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ்

06

## இலங்கையின் கடன்பேண் தன்மைக்கு தொடர்ந்தும் ஆதரவு



இலங்கையின் பொருளாதார சமூக அபிவிருத்திக்கும் கடன்நிலைத் தன்மைக்கும் தொடர்ந்தும் ஆதரவளிக்கப்போவதாக சீனா தெரிவித்துள்ளது.

சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் லின் ஜியான் இதனை தெரிவித்துள்ளார்.

சீனாவின் எக்ஸிம் வங்கி மற்றும் சீனாவின் அபிவிருத்தி வங்கிகள் என்பன இலங்கையுடன் இறுதி உடன்பாட்டை எட்டும் விடயத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்த

06

### இலங்கை – இந்திய உறவில் மைல்கல்லை அடையாளப்படுத்தும்

# அபிவிருத்தித் திட்டங்கள் 03 மக்களிடம் கையளிப்பு



### இந்திய வீடமைப்பு திட்டத்தின் கீழ் கண்டி, மாத்தளை, நுவரெலியாவில் 106 வீடுகள் திறப்பு

இந்திய வெளிவிகார அமைச்சர் கலாநிதி. எஸ்.ஜெய்சங்கர் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கிடையிலான சந்திப்பு நேற்று (20) ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது.

இந்தியாவில் புதிய ஆட்சி அமைத்திருக்கும் இச்சந்தர்ப்பத்தில் அந்நாட்டு பிரதிநிதியொருவர் வெளிநாட்டுக்கு மேற்கொள்ளும் முதலாவது விஜயமாக இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு வருகை தந்துள்ளார். ஜனாதிபதி மாளிகைக்கு வருகை தந்த இந்திய வெளிவிவகார அமைச்சருக்கு, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவினால் வரவேற்பளிக்கப்பட்டது.

இதையடுத்து இந்திய வெளிவிவகார அமைச்சர் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கிடையிலான சந்திப்பு ஆரம்பமானது. இரு நாடுகளுக்கிடையில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் மீளாய்வு செய்யப்பட்டதன் பின்னர் இருதரப்பு பேச்சுவார்த்தை ஆரம்பமாகியது.

இதன்போது, இலங்கை இந்திய உறவின் மைல்கல்லை அடையாளப்படுத்தும் வகையில் முன்னெடுக்கப்பட்ட 03 அபிவிருத்தித் திட்டங்கள், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சரினால் மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது.

இந்திய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் கண்டி, நுவரெலியா, மாத்தளை பிரதேசங்களில் அமைக்கப்பட்ட 106 வீடுகளின் டிஜிட்டல் பெயர்ப் பலகையையும் ஜனாதிபதியும், இந்திய வெளிவிவகார அமைச்சரும் இணைந்து திறந்து வைத்தனர். கொழும்பு மற்றும் திருகோணமலையில் அமைக்கப்பட்ட இரண்டு மாதிரிக் கிராமங்களில் தலா 24 வீடுகளை ஜனாதிபதியும், இந்திய வெளிவிவகார அமைச்சரும் மக்கள் பாவனைக்காக கையளித்தனர்.

இந்தியாவின் 06 மில்லியன் நிதி உதவியில் ஆரம்பிக்கப்பட்ட இலங்கையில் சமுத்திர மீட்பு தொடர்பாடல் மையமும் Maritime Rescue Coordination Centre (MRCC) ஜனாதிபதி

06

### இலங்கை – இந்திய கூட்டு அபிவிருத்தி திட்டங்களை துரிதப்படுத்துவதில் கவனம்

# சம்பூர் சூரிய மின் உற்பத்தி திட்ட நிர்மாணப் பணிகள் ஜூலையில்



இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையிலான எரிசக்தித் துறை தொடர்பான கூட்டுத் திட்டங்களை துரிதப்படுத்துவது குறித்து குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

### எரிசக்தித் துறையில் ஒத்துழைப்பை அதிகரிக்க முன்னுரிமை அளிக்கவும் சந்திப்பில் இணக்கம்

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர், கொழும்பு கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்தார். இந்தச் சந்திப்பில் நடைபெற்ற இருதரப்புக் கலந்துரையாடலில் இந்த விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டன.

எரிசக்தி இணைப்பு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையின் மேம்பாடு, எல்.என்.ஜி விநியோகம், இரு நாடுகளுக்கு இடையே அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள எரிபொருள் விநியோகக் குழாய், எரிபொருள், எரிவாயு ஆய்வுத் திட்டங்கள் குறித்தும் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

சம்பூர் சூரிய மின் உற்பத்தி நிலையத்தின் நிர்மாணப் பணிகள் 2024ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கையில் பால் உற்பத்தியை ஊக்குவிக்க, இந்திய அரசாங்கத்தின் ஆதரவுடன் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களின் செயல்திறன் மற்றும் உர உற்பத்தி தொடர்பான திட்டங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

திருகோணமலையின் அபிவிருத்திக்காகவும், காங்கேசன்துறை துறைமுகத்தின் விரிவாக்கத்திற்காகவும் இந்திய அரசாங்கத்தின் அனுசரணையுடன் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இந்திய அரசாங்கத்தின்

06

## 'உறுமய' வேலைத்திட்டத்தை விரைவுபடுத்த நாடளாவிய ரீதியில் நடமாடும் சேவைகள்

### எதிர்வரும் 26 முதல் 30 வரை நடத்த தீர்மானம்

நாட்டில் 20 இலட்சம் பேருக்கு காணி உறுதிகளை வழங்குவதற்கான "உறுமய" தேசிய வேலைத் திட்டத்தை துரிதப்படுத்தும் வகையில், இம்மாதம் (26) முதல் (30) வரையில் நாடளாவிய ரீதியில் நடமாடும் சேவையை நடத்த ஜனாதிபதி அலுவலகம் தீர்மானித்துள்ளது.

இதன்படி காணி உறுதிகளை வழங்குவதற்கான சகல துறைசார் அதிகாரிகளையும் கிராமங்களுக்கு அனுப்பி அவர்கள் ஊடாக விரைவாக

06



## பெண்கள் வலுவூட்டல் சட்டமூலம் திருத்தங்களுடன் நிறைவேற்றம்

லோரன்ஸ் செல்வநாயகம்



பெண்கள் வலுவூட்டல் சட்டமூலம் திருத்தங்களுடன் நேற்று சபையில் நிறைவேற்றப்பட்டது. எதிரணி சுயாதீன உறுப்பினர்களான விமல் வீரவன்ச, கெவிந்து குமாரதுங்க, சந்திம வீரக்கொடி ஆகியோர் சட்டமூலத்தின் சில ஏற்பாடுகளுக்கு திருத்தங்களை முன்வைத்தனர். அந்த வகையில் ஆளும் கட்சி எம்.பி சரத் வீரசேகர திருத்தங்களுக்கு ஆதரவாக வாக்களித்தார்.

06

## ஜப்பான் சதை உண்ணும் STSS பக்டீரியா நாட்டுக்குள் வரும் ஆபத்து கிடையாது

### எனினும் விமான நிலையத்தில் முன்னெச்சரிக்கை

லோரன்ஸ் செல்வநாயகம்



மனித சதையை உண்ணும் 'ஸ்ட்ரேப்டொகோகல் டொக்சிக் சொக் சின்ட்ரோம்' (treptococcal toxic shock syndrome) என்ற நோயை உருவாக்கும் பக்டீரியா, நாட்டுக்குள் வரும் ஆபத்து கிடையாதென சுகாதார இராஜாங்க அமைச்சர் விசேட மருத்துவ நிபுணர் சீதா அரம்பேபொல பாராளுமன்றத்தில் தெரிவித்தார். இந்த பக்டீரியா நாட்டுக்குள் வரும் நிலை

06

## அரச, தனியார் துறை உயர் பதவிகளில் பெண்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்



லோரன்ஸ் செல்வநாயகம்

அரச மற்றும் தனியார் துறைகளில் உயர் பதவிகளில் பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென, வேலுசாமி இராதாகிருஷ்ணன் எம்.பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார். நாட்டின் மொத்த ஊழியர்களில் பெண்களின் பங்களிப்பு வரையறுத்ததாகவே

06

## வடக்கு, கிழக்கு காணி முரண்பாடுகளுக்கு தீர்வு; பாதிப்பு ஏற்படாத வகையில் உரிய நடவடிக்கை

லோரன்ஸ் செல்வநாயகம்



வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள காணிகள் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டு பொதுமக்களின் அனுமதியுடனேயே அளவீடு செய்யப்படுவதாக அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

காணி சுவீகரிப்பினால் அப்பகுதியில் வாழும் மக்களின் வாழ்வாதாரத்திற்கும் ஏனைய செயற்பாடுகளுக்கும் எவ்வித பாதிப்புக்களும் ஏற்படாது என்பதையும் சபையில்

06

## பொசன் பௌர்ணமி தினம் அநுராதபுரத்துக்கு விசேட ரயில், பஸ் சேவைகள்



பொசன் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு அநுராதபுரத்துக்கு நேற்று முதல் விசேட பஸ் மற்றும் ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து அநுராதபுரத்துக்கு வரும் பக்தர்களின் போக்குவரத்தை இலகுபடுத்தும் வகையில், இந்த இலவச சேவைகள் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களத்தின் பிரதிப் பொது முகாமையாளர் என்.ஜே. இந்திபொலகே மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் லலித் டி அல்விஸ் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

## எலிக்காய்ச்சல் தீவிரம்: ஐந்து மாதங்களில் 5,000 பேருக்கு தொற்று

### மழை, வெள்ளத்தால் பரவும் அபாயம்




இலங்கையில் லெப்டோஸ்பிரோசிஸ் (Leptospirosis) எனப்படும் எலிக்காய்ச்சலால் அதிகளவு பெண்கள் பாதிக்கப்படுவதாக, சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் தொற்றுநோயியல் பிரிவின் வைத்திய நிபுணர் துஷானி தபரேரா தெரிவிக்கையில், விவசாயம், கால்நடை வளர்ப்பு மற்றும்

06

## 2025 முதல் தரம் 01 மாணவர் அனுமதி சுற்றறிக்கை திருத்தம்செய்ய தீர்மானம்

### அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது



2025 ஆம் ஆண்டு முதல் பாடசாலைகளில் தரம் ஒன்றுக்கு மாணவர்களை அனுமதிப்பது தொடர்பில் தற்போதைய சுற்றறிக்கை அறிவுறுத்தல்களில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர், அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார். அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (20)

06

## தனியார் பல்கலை மாணவர்களுக்கு விரைவில் வங்கிக் கடன் வசதிகள்

லோரன்ஸ் செல்வநாயகம்



தனியார் பல்கலைக்கழக மாணவர்களுக்கான வங்கிக் கடன் தாமதத்தை நிவர்த்தி செய்வதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்படும் என, கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இது தொடர்பில் இலங்கை வங்கியின் தலைவர் மற்றும் முகாமையாளருடன் தனிப்பட்ட ரீதியிலும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகவும் அவர் சபையில்

06



தினகரன் வாரமஞ்சரியுடன் அரசாங்க வர்த்தமானி ஞாயிற்றுக்கிழமை வெளிவருகிறது.

# அமைச்சரவை முடிவுகள்

***2023.06.19 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்***

**வங்காள விரிகுடாவை அண்டிய நாடுகளில் பல்துறைசார் தொழிநுட்ப பொருளாதார தொடக்க முயற்சிகளுக்கான கூட்டணி (BIMSTEC) உறுப்பு நாடுகளில் கடல்வழிப் போக்குவரத்து தொடர்பான ஒப்பந்தம்**

வங்காள விரிகுடாவை அண்டிய நாடுகளில் பல்துறைசார் தொழிநுட்ப பொருளாதார தொடக்க முயற்சிகளுக்கான கூட்டணியால் (BIMSTEC) உறுப்பு நாடுகளுக்கிடையே கடல்வழிப் போக்குவரத்து ஒத்துழைப்புக்கள் தொடர்பான ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கான ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுதல் தொடர்பான முன்மொழிவு. 2024.01.08 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் துறைமுகங்கள், கப்பல் துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட குறித்த யோசனை தொடர்பான மேலதிக விடயங்களை ஆராய்வதற்காக அலுவலர் குழுவொன்று நியமிக்கப்பட்டது. ஜனாதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்ட குறித்த அலுவலர் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விதந்துரைகளைக் கருத்தில் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள கடல்வழிப் போக்குவரத்து தொடர்பான ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக அமைச்சரவையின் உடன்பாடு வழங்கப்பட்டுள்ளது.

**வேர்ஜீனியா துறைமுக அதிகார சபை மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கும் இடையிலான ஒத்துழைப்பு**

இலங்கைக்கான அமெரிக்க தூதரகம் மற்றும் கொழும்புத் திட்டமும் ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்படும் ‘துறைமுகங்கள், சமுத்திரவியல் நிபுணத்துவ அபிவிருத்தி வேலைத் திட்டத்தின்’ கீழ் துறைமுகங்களுக்கிடையே நிபுணத்துவ பரஸ்பர பரிமாற்ற ஒத்துழைப்புக்களுக்காக வேர்ஜீனிய துறைமுக அதிகாரசபை மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபை என்பனவற்றுக்கு இடையில் ஒத்துழைப்பு ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்கு இருதரப்புக்கும் இடையிலான உடன்பாடுகள் எட்டப்பட்டுள்ளன.

அதற்கான ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**கொழும்பு சர்வதேச திரைப்பட விழா – 2024**

இலங்கையின் சினிமா தொழிற்துறையில் எழுச்சியை உருவாக்கி உலகளாவிய சினிமாவில் எமது நாட்டைப் பிரபலப்படுத்துவதற்கும், சுற்றுலாத்துறையில் அதிகளவில் கவர்ந்திழுப்பதற்கும் இலங்கையை தெற்காசியாவின் சுற்றுலா மையமாக மாற்றும் நோக்கில் (கொழும்பு சர்வதேச திரைப்பட விழா) இவ்வாண்டு ஜூலை மாதம் 08 ஆம் திகதி தொடக்கம் 14 ஆம் திகதி வரை கொழும்பில் நடத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திரைப்பட விழாவின் மூலம் ஈரான், பிரான்ஸ், இந்தியா, தென்கொரியா, சீனா, ஜப்பான் மற்றும் ஜேர்மன் உள்ளிட்ட பல நாடுகளில் உள்நாட்டு மற்றும் சர்வதேச விருதுகளைப் பெற்ற திரைப்படங்களை பார்வையிடுவதற்கு இலங்கை இரசிகர்களுக்கு வாய்ப்புக் கிடைப்பதுடன், சினிமாத்துறை மாணவர்களுக்கு உலகளாவிய சினிமாத்துறை தொடர்பான விரிவான அறிவையும் அனுபவங்களையும் பெற்றுக் கொள்வதற்கான அரிய வாய்ப்புக்களும் கிடைக்கும். அதற்கமைய, குறித்த திரைப்பட விழாவை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் தலைமையில் நடத்துவதற்காக வெகுசன ஊடக அமைச்சர், சுற்றுலா மற்றும் காணி அமைச்சரும் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**அபிவிருத்தி லொத்தர் சபைக்கு கணனிமயப்படுத்தப்பட்ட லொத்தர் சீட்டுக்களை அச்சிட்டு விநியோகிப்பதற்கான பெறுகை**

அபிவிருத்தி லொத்தர் சபைக்கு கணனிமயப்படுத்தப்பட்ட லொத்தர் சீட்டிழுப்புக்காக லக்ன வாசனாவ, அத கோட்டிபதி, சனிதா, சுப்பர் போல், ஜயோதா, கப்றுக மற்றும் சசிரி போன்ற




லொத்தர் சீட்டுக்களை அச்சிட்டு விநியோகிப்பதற்காக தேசிய போட்டித்தன்மையான விலைமனுக் கோரல் முறை கடைப்பிடிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தரப் பெறுகைக் குழு மற்றும் பெறுகை மேன்முறையீட்டு சபையின் விதந்துரைகளுக்கமைய ஒரு வருட காலத்திற்காக லொத்தர் சீட்டுக்களை அச்சிட்டு விநியோகிப்பதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**கொழும்பு துறைமுகத்தின் ஜய கொள்கலன் முனையம் V தளத்தை கருங்கற்கள் நிரப்பி தாரிடல் கருத்திட்டம்**

இலங்கை துறைமுக அதிகார சபை கொழும்பு துறைமுகத்தின் ஜய கொள்கலன் முனையம் V தளத்தில் கருங்கற்கள் நிரப்பி தாரிடல் பணிகளுக்குரிய திட்டத்தைத் தயாரித்துள்ளது. அதற்கமைய, இப்பணிகளுக்காக தேசிய போட்டி விலைமனுக் கோரல் மூலம் பொருத்தமான நிறுவனமொன்றைத் தெரிவு செய்வதற்காக துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**2015 2019 காலப்பகுதியில் ‘செமெட்ட செவன’ வீடமைப்பு வேலைத்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டு இடைநிறுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டங்களை மீண்டும் அமுலாக்கல்**

2015 2019 காலப்பகுதியில் தேசிய வீடமைப்பு அதிகாரசபை மூலம் செமெட்ட செவன’ வீடமைப்பு வேலைத்திட்டத்தின் கீழ் வீட்டு வசதிகளுக்கான தேவையைக் கொண்டுள்ள மற்றும் வீட்டு நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு வேலைகள் பூர்த்தி செய்வதற்கு இயலாமற் போன குறைந்த வருமானங் கொண்ட சமூகங்களை இலக்கு வைத்து மாதிரிக் கிராம வேலைத்திட்டம், கிராமசக்தி கடன் உதவித்திட்டம், விருசுமிதுறு, சிறுநீரக நோயாளர்களுக்கான வீடமைப்பு உதவித்திட்டம் மற்றும் வெள்ள அனர்த்த வேலைத்திட்டம் போன்ற வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. குறித்த வேலைத்திட்டத்தின் கீழ் கட்டுமானங்களை ஆரம்பித்துள்ள 387,520 வீட்டு அலகுகளில் 229,580 வீட்டு அலகுகள் கட்டுமானங்களை இடைநிறுத்தியுள்ளதுடன், அரச சார்பற்ற நிறுவனங்கள், பல்வேறு உதவித் திட்டங்கள் மூலமும் மற்றும் பயனாளிகளாலும் குறித்த வீட்டு அலகுகளில் ஒருபகுதி நிர்மாணிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

இதுவரை வீட்டுக் கட்டுமானங்களைப் பூர்த்தி செய்யாத 45,117 வீட்டு அலகுகளின் கட்டுமானப் பணிகளை தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் தலையீட்டில் முன்னுரிமை அடிப்படையில் கட்டம் கட்டமாகப் பூர்த்தி செய்வதற்கு தேவையான நிதியை ஒதுக்கீடு செய்வதற்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**தேசிய அடையாள அட்டையை அச்சிடுவதற்காக, முன் அச்சிடப்பட்ட பொலிகாபனேற் அட்டைகளைக் கொள்வனவு செய்தல்**


ஆட்பதிவுத் திணைக்களத்திற்கு தேசிய அடையாள அட்டையை அச்சிடுவதற்குத் தேவையான 05 மில்லியன் முன் அச்சிடப்பட்ட பொலிகாபனேற் அட்டைகளைக் கொள்வனவு செய்வதற்கான பெறுகை தொடர்பாக அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள பெறுகைக் குழு மற்றும் அதுகுறித்து பெறுகை மேன்முறையீட்டு சபையின் விதந்துரைகளைக் கருத்தில் கொண்டு குறித்த பெறுகையை இரத்துச் செய்வதற்கு 2024.06.05 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன், தேசிய அடையாள அட்டை விநியோகச் செயன்முறையை தங்குதடையின்றி மேற்கொண்டு செல்வதற்கு இயலுமாகும் வகையில், புதிய பெறுகையை நடைமுறைப்படுத்தி பொருத்தமான விநியோகத்தர் ஒருவரைத் தெரிவு செய்யும் வரைக்கும், தேவையானளவு முன் அச்சிடப்பட்ட பொலிகாபனேற் அட்டைகளை மாத்திரம் முன்னைய விநியோகத்தர்களிடமிருந்து மீண்டும் பெற்றுக் கொள்வதற்காக குறித்த அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அமைச்சரவையால் பேச்சுவார்த்தை உடன்பாட்டுக் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. குறித்த குழுக்களின் விதந்துரைகளுக்கமைய முனனைய விநியோகத்தரான Just In Time Technologies (Pvt) Ltd இடமிருந்து மீண்டும் 2.3 மில்லியன் முன் அச்சிடப்பட்ட பொலிகாபனேற் அட்டைகளைக் கொள்வனவு செய்வதற்காக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

2024 சிறுபோகத்திற்கான நெற் கொள்வனவுக்காக சலுகை வட்டி வீதத்தில் வங்கிகள் மூலம் கடன் திட்ட முறையை நடைமுறைப்படுத்தல்2023/24 பெரும்போகம் மற்றும் 2024 சிறுபோக நெற் கொள்வனவுக்காக சலுகை வட்டி வீதத்தின் கீழ் வங்கிகள் மூலம் கடன் வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 2024.01.08 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன்கீழ் 2024 சிறுபோகத்தில் நெற் கொள்வனவுக்காக கடன்திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்ற பொறிமுறை தொடர்பாக திறைசேரி பிரதிச் செயலாளரின் தலைமையில் ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அரச மற்றும் தனியார் வங்கிகளின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளது. குறித்த கலந்துரையாடலில் எட்டப்பட்ட உடன்பாடுகளுக்கமைய 2024 சிறுபோகத்தில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்கள், நெற் களஞ்சிய உரிமையாளர்கள் மற்றும் மொத்த நெல் கொள்வனவாளர்களுக்கு வங்கிகள் மூலம் 6,000 மில்லியன் கடன் தொகையினை சலுகை வட்டி வீதத்தில் வழங்குவதற்கும், அதுதொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக, ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## அரபுத் தமிழ் யுக தந்தை; மகான் சேகு முஸ்தபா வலியுல்லாஹ் (றஹ்) அவர்கள்



பேருவளை விஷேட நிருபர்

ஆன்மிக ஞானியும் காதிரியதுன் நபவீய்யா தரீக்காவின் ஸ்தாபகருமான சங்கைக்குரிய அஷ் ஷெய்க் முஸ்தபா நாயகம் (றஹ்) அவர்களின் ஞாபகர்த்த தினம் இத்தரீக்காவைப் பின்பற்றும் நாட்டிலுள்ள 18 ஊர்களில் நாளை 22ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அரபு – தமிழ் யுக புருஷர் என்று போற்றப்படும் அவரது ஞாபகர்த்த கத்தமுல் குர்ஆன் மஜ்லிஸ் நாளை 22 ஆம் திகதி வரலாற்றுப் பிரசித்தி பெற்ற பேருவளை மாளிகாச்சேனை பைத்துல் முபாரக் வதாருல் முஸ்தபா புகாரித் தக்கியாவில் இஷாத் தொழுகையைத் தொடர்ந்து இடம்பெறும்.

காதிரியதுன் நபவிய்யா தரீக்காவின் ஆன்மிகத் தலைவர் அல் ஆலிமுல் பாழிழ் வஷ் செய்ஹ_ காமில் சங்கைக்குரிய நாயகம் அஷ் ஷெய்க் அஹமத் பின் முஹம்மத் ஆலிம் காதிரியதுன் நபவி இந்த மஜ்லிஸுக்கு தலைமை வகிப்பார்.

இலங்கை முஸ்லிம்களின் வரலாறு புனித பேருவளை நகரிலிருந்து தான் ஆரம்பமானது என்பதை எவரும் மறுக்கவோ மறைக்கவோ மாட்டார்கள். இந்த பேருவளை நகரில் மூத்த குடியில் ஆதம் மரைக்காரின் புதல்வரான சங்கைக்குரிய மாகான் சேகு முஸ்தபா வலியுல்லாஹ் பிறந்தார். இந்த நாட்டின் சமய வரலாற்றில் அன்னார் ஓர் உயர்ந்த ஸ்தானத்தை பிடித்துக்கொண்டார். அன்னார் இஸ்லாமிய சட்ட திட்டங்கள், அரபு இலக்கண, இலக்கிய, பிக்ஹ_ சட்டதிட்டங்கள் போன்ற இஸ்லாமிய அறிவியல் துறையில் பாண்டித்தியம் பெற்றுத் திகழ்ந்தார். இந்தியாவில் உள்ள காயல் பட்டணத்தில் இத்துறையில அறிவு பெற்று நாடு திரும்பி பேருவளை மாளிகாச்சேனை

பைத்துல் முபாரக் முஸ்தபவியா புகாரித் தக்கியாவை தனது தலைமை ஸ்தானமாகவும், ஆய்வுகூடமாகவும் அமைத்து இஸ்லாமிய பணிபுரியும் காலத்தில் சங்கைக்குரிய முபாரக் மௌலானா என்ற பெரியாரின் சகவாசம் கிடைத்தது.

சங்கைக்குரிய செய்கு முஸ்தபா (றஹ்) அவர்களின் சேவைக்கு இவர்கள் துணை புரிந்து சிறிது காலத்தில் முபாரக் மௌலானா தென்னிலங்கையில் காலி நகரில் இறையடி சேரவே, யெமன் நாட்டைச் சேர்ந்த அஹ்தலி மௌலானா அவர்களின் சகவாசம் கிடைத்து பேருவளை மாளிகாச்சேனை புஹாரித் தக்கியாவில் புஹாரி மஜ்லிஸை ஆரம்பிக்கும் பாக்கியம் கிடைத்தது. சேகு முஸ்தபா (றஹ்) அவர்களினால்

அறிமுகப்படுத்தப்பட்ட காதிரியதுன் நபவிய்யா முஸ்தபவீயா எனும் ஆன்ம ஞானவழி (தரீக்கா) இன்றும் இலங்கையின் சுமார் இருபது ஊர்களில் பின்பற்றப்பட்டு வருவது சுன்னத் ஜமாத் கொள்கைகளுக்கு உயிரூட்டக்கூடிய விடயமாகும். சேகு முஸ்தபா (றஹ்) அவர்கள் மெய்ஞானியாகவும் புலவராகவும் திகழ்ந்தார். அன்னாரினால் இயற்றப்பட்ட மீசான் மாலை அரபுத்தமிழ் கவிதை புகழ் பெற்றது.

அவர் பல இஸ்லாமிய பத்வா நூல்கள், இஸ்லாமிய சட்ட திட்டங்கள், முனாஜாத்துக்கள் போன்றவற்றை அரபியிலும், அரபுத்தமிழிலும் வெளியிட்டார். அஹ்காமுல் இகம் என்ற பெயரில் அரபுத் தமிழ் அச்சுக்கூடத்தை நிறுவி அதன் மூலம் அபுத் தமிழில் பல ஆக்கங்களை வெளியிட்டார்.





கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அமைச்சுக்கான புதிய செயலாளர் நிசாந்த விக்கரமசிங்க நேற்று முந்தினம் சம்பிரதாய பூர்வமாக அமைச்சின் செயலாளராக பதவியேற்றுக் கொண்டார். அவர் கோவை பத்திரத்தில் கையொப்பம் இடுவதையும் அருகில் அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் தயானந்தாவையும் நிகழ்வில் கலந்துகொண்ட சிவஸ்ரீ பாபுசர்மா இராமச்சந்திர குருக்களுடன் சமயப் பெரியார்களையும் காணலாம்

## கல்வி, சமூக, பொது சேவைகளை முன்னெடுக்கும் 'சீனன்கோட்டை முத்துக்கள்' வட்சப் குழுமத்தின் ஒரு வருட பூர்த்தி





(பேருவளை விசேட நிருபர்)

பேருவளை சீனன்கோட்டைப் பகுதியில் கல்வி, சமூக, பொது சேவைகளை முன்னெடுக்கும் இலக்குடன் ஆரம்பிக்கப்பட்ட "சீனன் கோட்டை முத்துக்கள்" வட்சப் குழுமத்தின் ஒரு வருட பூர்த்தியும், புனித ஹஜ் பெருநாள் ஒன்று கூடலும் மற்றும் மூத்த சமூக சேவையாளர்கள் கௌரவிப்பும் கடந்த 18ஆம் திகதி பேருவளை அக்கர தஹ அட்ட (இறப்பர் தோட்ட வரவேற்பு மண்டபத்தில்) குழுமத்தின் தலைவர் ராமிஸ் நாஸிம் தலைமையில் நடைபெற்றது.

சீனன் கோட்டை ஸக்காத் குழு தலைவரும் பிரபல சமூக சேவையாளருமான ஏ.ஐ.எம் பாக்கிர், சீனன் கோட்டை முத்துக்கள் குழுமத்தின் மூத்த உறுப்பினரும் சமூக சேவையாளருமான ஜே.எம்.எம் முஹம்மத் ஸாலி ஆகிய இருவருமே நிகழ்வில் கௌரவிக்கப் பட்டவர்கள் ஆவர்.

நிகழ்வில் இந்த இரு சமூக சேவையாளர்களின் பணிகளைக் குழுமத் தலைவர் ராமிஸ் நாஸிம், மற்றும் அஸ்வர் வபா ஆகியோர் பாராட்டிப் பேசினர்.

நிகழ்வில் பிரபல சமூக சேவையாளர்களான எம்.எப்.எம் ஹாரூன், ஸலீம், ரிஸ்வி உட்பட குழுமத்தின் உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர். இது முழு நாள் நிகழ்வாக இடம்பெற்றது. உறுப்பினர்களின் பல்வேறு கலை, கலாசார நிகழ்வுகளும் இடம் பெற்றமை குறிப்பிடத் தக்கது.

பிரதேசத்தின் முன்னேற்றத்திற்காக எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டியுள்ள திட்டங்கள் குறித்து இந்த ஒன்று கூடலில் ஆராயப் பட்டது.

பிரதேசத்தில் உள்ள வறிய பாடசாலை மாணவர்கள் தமது கல்வியை இடையூறின்றி தொடர கற்றல் உபகரணம் வழங்கல், தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கும், க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கும் தோற்றும் மாணவர்களுக்கு இலவச கல்வி கருத்தரங்குகளையும் நடத்தியதோடு பல சமூக, கல்வி, பொதுப் பணிகளையும் இந்த வட்சப் குழுமம் செய்துள்ளமை குறைப்பிடத்தக்கதாகும்.

தினகரன் விளம்பரம் 0112429367

விற்பனை பிரிவு 0112429444, 0112429378

ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

# தினகரன்

THINAKARAN



**தொழுகை நேரம்**

சுபஹ் - 04.33
லுஹர் - 12.14
அஸர் - 03.41
மஃரிப் - 06.29
இஷா - 07.45

**இன்றைய சுபதினம்**

குரோதி வருடம் ஆனி 07

ராகுகாலம் : காலை : 10.24 - 11.54வரை
சுபநேரம் : மாலை : 5.24 - 7.24வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி






நாட்டுக்கு வருகை தந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் டொக்டர் ஜெய்சங்கரை விமான நிலையத்துக்குச் சென்று கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண டமான் வரவேற்றார். பின்னர் அலறி மாளிகைக்குச் சென்ற இந்திய வெளிவிவகார அமைச்சர் அங்கு பிரதமர் தினேஷ் குணவர்தனவையும் சந்தித்துப்பேசினார்.

## தினகரன் 92 வருடங்களுக்கு முன் தினகரன்

**இன்று 21 ஜூன் 1932**



அரசாங்க சபை

அரசியல் திட்டத்தை திருத்தி யமைக்க வேண்டுகோள்.

இன்றைய விவாதம்.

திரு. ஈ. டப்ளியூ. பெறோரா வின் பிரேரணைகள்.

இன்று அரசாங்கசபை ஆரம்பிக் கும். இற்றைக்கு ஒரு ஆண்டுக்கு முன், திரு. ஈ. டப்ளியூ. பெறோரா அவர்கள் அரசியல் திட்டத்தைத் திருத்தியமைக்க வேண்டுமென்று சில பிரேரணைகள் ஆலோசனைக்கென அனுப்பியிருந்தார். அப்பிரேரணை கள் சம்பந்தமான விவாதம் இன்று நடைபெறும்.

### அரசாங்க சபை

**அரசியல் திட்டத்தை திருத்தி யமைக்க வேண்டுகோள்**

**இன்றைய விவாதம்**

**திரு. ஈ. டப்ளியூ. பெறோரா வின் பிரேரணைகள்.**

இன்று அரசாங்கசபை ஆரம்பிக் கும். இற்றைக்கு ஒரு ஆண்டுக்கு முன், திரு. ஈ. டப்ளியூ. பெறோரா அவர்கள் அரசியல் திட் டத்தைத் திருத்தியமைக்க வேண்டுமென்று சில பிரேரணைகள் ஆலோசனைக் கென அனுப்பியிருந்தார். அப்பிரேரணைகள் சம் பந்தமான விவாதம் இன்று நடைபெறும்.

(அனுசரணை: லேக் ஹவுஸ் ஊடக நூலகம்)

## டெங்கு; ஒரு நாளில் 161 நோயாளர் பதிவு



நாட்டில் கடந்த 24 மணி நேரத்தில் 161 டெங்கு நோயாளர் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது. கடந்த 20 நாட்களில் 2,044 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். இதேவேளை, மே மாதத்தில் 2,647 டெங்கு நோயாளர் பதிவாகியுள்ளனர்.

2024இன், இதுவரையான காலப் பகுதியில் 26,964 நோயாளிகள் பதிவாகியுள்ளனர். அவர்களில், அதிகளவான நோயாளர்கள் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வருடத்தில் இதுவரை டெங்கு நோயினால் 09 பேர் உயிரிழந்துள்ளதாகவும் பதிவாகியுள்ளது.

# இ.போக்குவரத்து சபையில் சேவை யாப்பின் அடிப்படையில் பதவி உயர்வுகள்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

இலங்கை போக்குவரத்து சபையில் பதவிகளை உருவாக்குவது தொடர்பில் வரலாற்றில் முதல் தடவையாக, சேவை யாப்பு உருவாக்கப்பட்டு , நிலவிய சிக்கல்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாக போக்குவரத்து மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் பதவிகள் தொடர்பில்,இனி சிக்கல்கள் ஏற்படாது. தகைமைகளுக்கு இணங்க நியமனங்கள் மற்றும் பதவி உயர்வுகளை சேவை யாப்பின் மூலம் வழங்க முடியும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சக்தி எம்பி கபீர் ஹாசிம் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்;

யாப்பு ஒன்று இல்லாத நிலையிலேயே இலங்கை போக்குவரத்து சபை செயற்பட்டு வந்துள்ளது.அது விந்தையானது. எனினும் உண்மை இதுவே.



தேர்தல் ஒன்று நடைபெற்று முடிந்ததும் முதலாவது தாக்குதல் இலங்கை போக்குவரத்து சபை மீதே மேற்கொள்ளப்படும்.

வெற்றி பெற்றவர்கள் பதவியில் அமர்வர்.

பதவி வழங்களில் பதவி உயர்வு உள்ளிட்ட எந்த ஒன்றுக்கும் முறையான திட்டமொன்று கிடையாது. அதனால் தகைமை உள்ளவர்கள் பதவிகளுக்கு நியமிக்கப்பட மாட்டார்கள். தொழிற்சங்கங்களே இங்கு செயல்படும். வேலை நிறுத்தப்போராட்டம் இல்லாமல் இலங்கை போக்குவரத்து சபையின் கோரிக்கைகளை சாத்தியமாக்குவதால், மிக மோசமான பாதிப்புகளை எனக்கு எதிர்நோக்க நேர்ந்தது.

இதற்காகவே நான் சேவை யாப்பு ஒன்றை தயாரித்தேன். அரசாங்கத்தின் நடவடிக்கைகள் தொடர்பில் தெரிவுக் குழு காணப்படுகிறது. அதில் நான் அங்கம் வகிக்கிறேன். பிரச்சினையை நான் சபைக்கு கொண்டு வந்தேன். ஜனாதிபதியின் வழிகாட்டலின் கீழ், இந்த பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கு திட்டமிட்டு வருவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## வேதாந்தியின் சிறுகதைகள் நூல் வெளியீட்டு விழா இன்று

(ஏ.ஜீ.எம்.தௌபீக்)

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தவிசாளரும் முன்னாள் ஊடக பிரதியமைச்சருமான எம்.எச். ஷேகு இஸ்ஸதீனின் (வேதாந்தி) சிறுகதைகள் நூல் வெளியீட்டு விழா இன்று (21) வெ ள்ளிக்கிழமை இடம்பெறுகிறது.

அக்கரைப்பற்று கடற்கரை வளாகத்தில் இவ்வெளிட்டு விழா நடைபெறும். இந்நிகழ்வில், கலை மற்றும் கலாசார நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. சிறப்பு அதிதிகளாக பிராந்தியத்தின் இலக்கிய பிரபலங்கள் பங்கேற்கின்றனர். அரசியல், சமூகவியல், ஆத்மீகம் மற்றும் இலக்கிய துறைகளை உள்ளடக்கிய பல சிறுகதைகளை இந்நூல் சுமந்து வருகிறது.

06




## இலங்கை – இந்திய உறவை பலப்படுத்த இ.தொ.கா உறவுபாலமாக செயற்படும்

**இந்திய வெளிவிவகார அமைச்சருடனான சந்திப்பில் இ.தொ. கா உறுதி**

ஹற்றன் சுழற்சி நிருபர்

இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மலையக மக்களுக்கு தேவையான உதவிகளை இந்தியா தொடர்ந்து வழங்குமென இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் இ.தொ.கா. பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளதாக இ.தொ.காவின் தவிசாளரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன் தெரிவித்தார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கருக்கும், இலங்கை தொழிலாளர்

06



## பல்கலைக்கழகங்களுக்கு தெரிவான மாணவர்களுக்கு விசேட புலமைப்பரிசில்

கடந்த ஆண்டு கல்வி பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்கு தோற்றி பல்கலைக்கழகங்களுக்கு தெரிவான மாணவர்களுக்கு திறன் ஒத்துழைப்பு நலன் திட்டம் எனும் விசேட புலமைப்பரிசில் திட்டமொன்றை ஊழியர் சேமலாபா நிதியம் அறிமுகப்படுத்தியுள்ளது.

தேசிய தொழில் தகைமை (NVQ) மட்டம் 3, 4 மற்றும் 5 அங்கீகாரமுள்ள தெரிவுசெய்யப்பட்ட 100 பாடநெறிகளில் ஒரு பாட நெறிக்கு மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற தொழிற்பயிற்சி நிறுவனங்கள் மூலம் நடாத்தப்படும் உயர்கல்வி திட்டத்திற்கு ரூபாய் 50,000 வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

புலமைப்பரிசிலின் விண்ணப்பத்தினை தகுதியுடையவர்கள் எதிர்வரும் ஆகஸ்ட் 16ஆம் திகதி வரை சமர்ப்பிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கை – சவூதிக்கிடையே நேரடி முதலீட்டு ஊக்குவிப்புகள்

**உடன்படிக்கைக்கு அனுமதி**

இலங்கை, சவூதிக்கிடையில் நேரடி முதலீட்டு ஊக்குவிப்புக்களை மேற்கொள்ளும் ஒத்துழைப்பு ஒப்பந்தத்தை மேற்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி தலைமையில் நேற்று முன்தினம் (19) நடைபெற்ற அமைச்சரவைக்கூட்டத்தில் இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

கொள்கை மற்றும் சட்ட மறுசீரமைப்புக்கள், உயர்வானதும், ஒருங்கிணைந்த வகையிலுமான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கல், செயன்முறை மீள் உருவாக்கம் போன்றவற்றின் மூலம் நாட்டுக்கு நேரடி முதலீடுகளைக் கவர்ந்திழுக்கும் நோக்கில் இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்படவுள்ளது.

சவூதி அரபு இராச்சியத்தின் தலைநகர் ரியாத்தில் 2024.04.28 மற்றும் 29 ஆம் திகதிகளில் நடைபெற்ற உலக பொருளாதார மன்றத்தின் விசேட கூட்டத்தில், இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் வெளிவிவகார அமைச்சர் கையொப்பமிட்டிருந்தார்.

இதற்கு அமைவாக, நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின், போது முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரம் கருத்தில் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பொசன்; கைதிகளை பார்வையிட அனுமதி

பொசன் தினத்தை முன்னிட்டு, கைதிகளைப் பார்வையிடுவதற்கு உறவினர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக (OPEN VISIT) சிறைச்சாலை ஆணையாளர் காமினி பி. திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதற்கமைய இன்று (21), கைதிகளுக்கு போதுமான உணவு மற்றும் சுகாதாரப் பொருட்களை வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சுகாதார வழிகாட்டுதல்களுக்கு அமைவாக பார்வையாளர்களை அனுமதிக்கும் நடவடிக்கைகள் சகல சிறைச்சாலைகளிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## கண்டி – யாழ்ப்பாணம் வீதியில் லொறி, பௌசர் கோர விபத்து

**சாரதி, உதவியாளர் படுகாயம்**

கண்டி யாழ்ப்பாணம் வீதியில் மிஹிந்தலை, பலுகஸ்வெவ பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில், இருவர் படுகாயமடைந் துள்ளதாக மிஹிந்தலை பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்து நேற்று (20) வியாழக்கிழமை அதிகாலை 3.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து மரக்கறி வகைகளை ஏற்றிக் கொண்டு தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தை நோக்கிப் பயணித்த லொறியொன்று, வீதியில்

06

## மூன்று ஜனாதிபதி வேட்பாளர்களும் மாகாண சபைத் தேர்தலை நடத்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

நாட்டின் முக்கிய மூன்று ஜனாதிபதி வேட்பாளர்களும் மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என, தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்பி தர்மலிங்கம் சித்தார்த்தன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார். மாகாண சபை முறைமையை தொடர்வதற்கு இம்மூவரும் இணங்கியுள்ளதால், இந்த சந்தர்ப்பத்தில் திருத்தத்தைக் கொண்டு வந்து மாகாண சபைத் தேர்தலை நடத்தி அச்சபைகளை இயங்கச்



செய்ய வேண்டும் என்றும் அவர் சபையில் தெரிவித்தார். இதற்கான நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொண்டால் மட்டுமே, ஜனாதிபதித் தேர்தலின் போது தமிழ் மக்கள் அவர்களுக்கு ஆதரவளிப்பார்கள் என்றும் அவர் சபையில் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற குறைநிரப்பு மதிப்பீடு மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், தேர்தல் முறைமை மாற்றப்பட்டு மாகாண சபைத் தேர்தல்கள் மிக நீண்ட காலமாக நடைபெறாமல் உள்ளன.

06

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் ஆனி மாதம் 06ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 துல்ஹிஜ்ஜஹ் பிறை 14

### குறள் தரும் சிந்தனை



இனிய உளவாக இன்னாத கூறல்
கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று

இனிமையான சொற்கள் இருக்கும்போது அவற்றை விடுத்துக் கடுமையாகப் பேசுவது கனிகளை ஒதுக்கி விட்டுக் காய்களைப் பறித்துத் தின்பதற்குச் சமமாகும்.

## மாணவரின் எதிர்கால நலனில் ஜனாதிபதியின் அதிக கரிசனை

உலக நாடுகளை எடுத்து நோக்கும் போது இலவசக் கல்விக்காக பெருந்தொகை நிதியைச் செலவிடுகின்ற நாடு இலங்கை ஆகும். மாணவர்களின் கல்விக்காக மாத்திரமன்றி, அவர்களது கல்விசார்ந்த அடிப்படை வசதிகளுக்காகவும் அரசாங்கம் பெருமளவு நிதியைச் செலவிட்டு வருகின்றது.

உலகில் வேறெந்த நாட்டிலும் இலவசக் கல்விக்காக இலங்கையைப் போன்று இத்தனை வசதிகள் செய்து கொடுக்கப்படுவதில்லை. எதிர்காலத் தூண்களாக விளங்கப் போகின்ற இன்றைய மாணவர்களின் நலனில் அரசாங்கம் அதிக அக்கறை கொண்டு இவ்வாறு அதிக தொகை நிதியைச் செலவிட்டு வருவதுடன், மாணவர்களின் ஒவ்வொரு விடயத்திலும் கரிசனை செலுத்தி வருகின்றது.

எமது நாட்டின் மாணவர்கள் தரம்_1 தொடக்கம் பல்கலைக்கழகக் கல்வியைப் பூர்த்தி செய்யும்வரை இவ்வாறான உதவிகளை அவர்களுக்கு அரசாங்கம் வழங்கி வருகின்றது. இலவசக் கல்விக்காக அரசாங்கம் செலவிடுகின்ற இத்தகைய பெருந்தொகையான உதவிகள் குறித்து எமது நாட்டின் பிரஜைகளில் பலர் அறிந்திருப்பதில்லை என்பது வேதனைக்குரியதாகும்.

நாட்டில் கொவிட் தொற்று பரவியதையடுத்து மாணவர்களின் கல்வி பெருமளவில் பாதிக்கப்பட்டது. கல்வித்துறையானது வீழ்ச்சியில் இருந்து படிப்படியாக மீண்டெழுந்து கொண்டு வருகையில், இலங்கையில் பொருளாதார நெருக்கடி தலைதூக்கியது. அதன் காரணமாகவும் மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டது. குடும்பத்தின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்திருக்கையில், பெற்றோர் தமது பிள்ளைகளின் கல்விக்காக எவ்வாறு பணத்தைச் செலவிட முடியும்?

நாட்டின் தலைமைப் பொறுப்பை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்ற பின்னரே பொருளாதாரம் அபிவிருத்தியடையத் தொடங்கியது. பொருளாதாரம் படிப்படியாக அபிவிருத்தியடையத் தொடங்கியதும், மாணவர்களின் கல்வி அபிவிருத்தியிலும் ஜனாதிபதி அதிக அக்கறை செலுத்தி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

மாணவர்களின் கல்வியில் கூடுதல் அக்கறை செலுத்தினாலேயே எதிர்காலத்தில் அம்மாணவர்கள் சிறந்த பிரஜைகளாக முடியுமென்பதே ஜனாதிபதியின் எண்ணக்கரு ஆகும். அந்த வகையில் மாணவர்களின் முன்னேற்றத்துக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆரம்பித்துள்ள சிறந்ததொரு திட்டமே 'ஜனாதிபதி கல்வி புலமைப் பரிசில் திட்டம்'என்பதாகும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கருத்திட்டத்திற்கு அமைய, நாடளாவிய ரீதியில் 10,126 பாடசாலைகளை உள்ளடக்கி தரம் 1 முதல் தரம் 11 வரை கல்வி கற்கும் மாணவர்களுக்கு இந்த புலமைப்பரிசில் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

ஒவ்வொரு பாடசாலையிலும் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஒவ்வொரு பாடசாலைக்கும் வழங்கப்படும் புலமைப்பரிசில் தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதன்படி ஒரு பாடசாலைக்கு வழங்கப்படும் குறைந்தபட்ச புலமைப்பரிசில் 04 என்பதோடு, அதிகபட்ச புலமைப்பரிசில் 22 ஆகும். ஏப்ரல் 2024 முதல் 12 மாதங்கள் வரை, ஒரு மாணவருக்கு மாதம் ரூ.3000.00 வீதம் ஒரு இலட்சம் மாணவர்களுக்கு ஜனாதிபதி நிதியிலிருந்து கல்வி உதவித்தொகை வழங்கப்படும்" என்று நேற்றுமுன்தினம் புலமைப்பரிசில் வழங்கும் திட்டத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார்.

வசதி குறைந்த மாணவர்களைப் பொறுத்தவரை இந்த புலமைப்பரிசில் திட்டமானது மிகவும் பயன் தரும் என்பது உண்மை. அதாவது வறுமையானது மாணவர்களின் கல்வியைப் பாதிக்கச் செய்து விடலாகாது என்பதை ஜனாதிபதி கருத்தில் கொண்டுள்ளார் என்றே கூற வேண்டும். கடந்த கொவிட் தொற்று காலத்திலும், பொருளாதார நெருக்கடி காலத்திலும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் அனுபவித்த கஷ்டங்களை இவ்விடத்தில் நாம் நினைத்துப் பார்க்க வேண்டியது அவசியம்.

"கடந்த 3 வருடங்கள் நம் அனைவருக்கும் கடினமான காலமாக அமைந்தது. நாங்கள் அனைவரும் அவதியுற்றோம். உணவு இருக்கவில்லை. மாணவர்களுக்கு பாடசாலைக்குச் செல்வதற்குப் போக்குவரத்து வசதி இருக்கவில்லை. இப்போது அந்த நிலைமை இல்லை. ஜனாதிபதி என்ற வகையில் இந்த நாட்டின் பிள்ளைகள் துன்பப்படுவதற்கு இடமளிக்காதிருக்கத் தீர்மானித்தேன். அதன்படி இந்த நாட்டை பொருளாதார ரீதியாக மீட்பதற்குத் தேவையான வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து விடுவிக்கத் தேவையான திட்டத்தை செயல்படுத்தியுள்ளோம். அதன் மூலம் அடுத்த 5_10 ஆண்டுகளில் பிள்ளைகளுக்கான சிறந்த நாட்டை உருவாக்குவதே எங்கள் நோக்கமாகும்" என்று நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டிருந்தார்.

மாணவர்களின் சிறந்த எதிர்காலத்துக்காக இவ்வாறான சிறந்த திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்ற இவ்வேளையில், சிறார்களின் கல்வியைக் கருத்தில் கொண்டு ஆசிரியர்களும் அர்ப்பணிப்புடன் பணியாற்றுவது அவசியமாகின்றது. பெற்றோர் தமது பிள்ளைகளின் நலன் கருதி அவர்களை ஆசிரியர்களிடமே ஒப்படைக்கின்றனர். இவர்களில் வறிய பெற்றோரும் உள்ளனர்.

எனவே மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு சிறப்பான முறையில் கல்வியை ஊட்ட வேண்டியது ஆசிரியர்களின் கடமையாகும். கல்வியறிவுள்ள சமூகத்தினாலேயே நாடு அபிவிருத்தியடையும் என்பதை அனைத்துத் தரப்பினரும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

editor.tkn@lakehouse.lk

# சைவமங்கையர் கழகத்தில் இன்று புத்தகக் கண்காட்சி ஆரம்பம்


## இன்றைய காலத்திற்கும், இளைய தலைமுறைக்கும் தேவையானதொரு கூட்டுச் சமூகப் பங்களிப்பு என்கின்றார் ஏற்பாட்டாளர் எம். பௌசர்

நாங்கள் ஜூன் மாதம் (21,22,23) கொழும்பில் ஏற்பாடு செய்கின்ற புத்தகக் கண்காட்சி புத்தகங்கள், வாசிப்பு, எழுத்து, பரவலாக்கம் என்கின்ற ஒரு நீண்டகால செயல்திட்டமாகும். பாடசாலை மட்டத்தில் இருந்து வாசிப்பின் மீதான ஆர்வத்தினையும் ஈடுபாட்டினையும் ஏற்படுத்துவதற்கான அடிப்படைச் சூழலை படிப்படியாக கட்டியெழுப்புவதே எமது நோக்காகும். மாணவர்கள், பாடசாலை நிர்வாகம், ஆசிரியர்கள், பெற்றோர், சமூக சக்திகள் என அனைவரதும் பங்களிப்பு அவசியமாகும்.














எங்கள் இந்த செயல்திட்டம் தமிழ்ப் பிரதேசங்களில் உள்ளோரின் ஆதரவில்தான் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மற்றும் மலையகம், தென்னிலங்கைப் பிரதேசங்கள் என்பன இதன் செயற்பாட்டுத் தளமாகும். இப்பிரதேசங்கள் இந்த எமது செயற்திட்டத்தினை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதற்கான தேவையையும், அவசியத்தையும் கொண்டிருக்கின்றன. இத்திட்டத்தின் சமூகப் பெறுமானமும், முக்கியத்துவமும் கருதி இதற்கு ஆதரவும், பங்களிப்பும் வழங்க வேண்டியவர்களாக புலம்பெயர் நாடுகளில் வாழ்கின்றவர்களும், சமூக சக்திகளும் இருக்கிறார்கள்.

அறிவு வளர்ச்சி, ஆரோக்கியமான சமூக உருவாக்கத்தில் அக்கறை கொண்ட அனைவரும் இந்த செயற்திட்ட நடைமுறை இயக்கத்தில் பூரணமாக பங்காற்றுவது இன்றைய காலகட்டத்தில் நாம் கூட்டாக இணைந்து ஆற்றும் ஒரு மகத்தான பணியாகவும், பங்களிப்பாகவும் அமையும். இந்த வகையில் இலங்கையரும் வெளிநாடுகளிலும் வாழும் கல்வியியலாளர்கள், சமூக அறிவு, பண்பாட்டுத்துறை சார்ந்தோர், சமூக செயற்பாட்டாளர்கள் இதன் மற்றுமொரு பங்களிப்பு பகுதியினராவர். செயற்பாட்டுத் திட்ட முன்னெடுப்பாளர்களாக செயலூக்கத்துடன் முன்வந்து பொறுப்புகளை எடுத்துச் செயல்படுத்துமாறு இச்சந்தர்ப்பத்தில் அனைவரையும் வேண்டுகிறோம். இது ஒரு கூட்டுச் செயற்பாடாகும். சமூக அபிவிருத்தி, மானிட வளர்ச்சியுடன்,மக்களையும், சமூகங்களையும், பிரதேசங்களையும் ஒன்றிணைத்து நமது சமூகத் தளத்தில் ஒருபடி முன்செல்ல நமக்கான இன்னுமொரு வாய்ப்பை இத்திட்டம் கொண்டிருக்கிறது.

இம்மாதம் 21, 22, 23 ஆம் திகதிகளில் பாரியளவில் இத்திட்டம் மூன்று நாள் நிகழ்வாக வெள்ளவத்தை சைவமங்கையர் கழக மண்டபத்தில் நடைபெறுகிறது. புத்தகக் கண்காட்சி, ஆய்வரங்குகள், உரைகள், கலை நிகழ்வுகள் என 'புத்தகங்கள், வாசிப்பு, எழுத்து, பரவலாக்கம்' எனும் கருத்தாக்கத்தினை இந்த நிகழ்வுகள் முன்னிறுத்தவுள்ளன.

புத்தகக் கண்காட்சியில், தமிழகத்திலுள்ள பல பதிப்பகங்களும். இலங்கை பதிப்பகங்களும் கலந்து கொள்கின்றன. ஈழத்து எழுத்தாளர்களுக்கான தனி அரங்கும் உள்ளது. இந்த அரங்கில் ஈழத்து எழுத்தாளர்கள், ஆய்வாளர்கள் தமது நூல்களை காட்சிப்படுத்தவும் விற்பனை செய்யவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் தமிழகத்தில் இருந்து பேச்சாளர் கதை சொல்லி பவா செல்லதுரை, எழுத்தாளர் பெருமாள் முருகன், கர்நாடக இசைக் கலைஞர் டி.எம். கிருஷ்ணா, உலகறிந்த தமிழாய்வாளர் முனைவர் இரா. வெங்கடாசலபதி, பதிப்பாளர் கண்ணன் சுந்தரம் மற்றும் இலங்கையிலுள்ள கல்வியாளர்களும் கலந்துக்கொள்கின்றனர்.

ஆய்வரங்குகளில், தமிழக ஆய்வாளர்களும், எழுத்தாளர்களும் கலைஞர்களும் பதிப்பாளர்களும் கலந்து கொள்ளும் அதேநேரம், இலங்கையின் கல்வியியலாளர்களும், எழுத்தாளர்களும் பங்கு கொள்கின்றனர். நாட்டின் பல பகுதிகளைச் சேர்ந்தோரும் தம்பிரதேச நிலை பற்றியை ஆய்வுக்கட்டுரைகளை சமர்ப்பிக்கின்றனர்.

லண்டனில் பதிவுசெய்யப்பட்ட சமூக நிறுவனமான மானுடம் அமைப்பு இத்திட்டத்தினை முன்னெடுக்கிறது. மதகு அமைப்பு இதனை ஒருங்கிணைக்கிறது. இலங்கையிலுள்ள ஏனைய அமைப்புகளும், தனிநபர்களும் இத்திட்டத்துடன் இணைந்து செயற்பட முடியும். இத்துறை சார்ந்து ஆர்வமுள்ள அனைத்து தரப்பினரையும், இந்த மூன்று நாள் நிகழ்வில் கலந்து கொள்ள அழைக்கிறோம். நமது தமிழ் மொழித்தளத்தில், நீண்ட காலத்தின் பின் நடைபெறவுள்ள முக்கியமாக அறிவியல், பண்பாட்டு ஒன்றுகூடுகை இதுவாகும்.



எச்.எச். விக்கிரமசிங்க

# சூழல்நேய கழிவு மீள்சுழற்சியில் சமகால தொழில்நுட்பங்கள்

நாடுகளின் வருமானம் அதிகரிக்கும் போது உலகளவில் கழிவுகளின் பெருக்கமும் அதிகரிக்கும். அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் சனத்தொகைப் பெருக்கம் மற்றும் நகரத்துறை சார்ந்து மக்களின் இடம்பெயர்வு என்பன கழிவுகளின் அதிகரிப்புக்குக் காரணமாக அமைகின்றன.

மேலும் மக்களிடம் காணப்படுகின்ற கழிவு முகாமைத்துவம் தொடர்பான அறிவின்மையினால் கழிவுகள் இடத்திற்கிடம் பரவலாகக் குவிந்து காணப்படுகின்றன. உலகளவில் சராசரியாக 2.01 பில்லியன் தொன் திண்மக்கழிவுகள் காணப்படுவதாகவும் 2025ஆம் ஆண்டளவில் 2.2 பில்லியன் தொன் திண்மக்கழிவுகள் அதிகரிக்கும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.





கழிவு முகாமைத்துவமின்மையால் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படுவதுடன், பொருளாதார வளர்ச்சியும் கேள்விக்குறியாகின்றது. தற்காலத்தில் கழிவு முகாமைத்துவம் என்பது நாடுகளினால் பின்பற்றப்படுகின்ற வினைத்திறனான செயற்பாடாகக் காணப்படுகின்றது. கழிவுகளைச் சேகரித்து அவற்றைத் தரம் பிரித்து மீள்சுழற்சிக்கு உட்படுத்தும் அல்லது அழிக்கும் செயற்பாடு கழிவு முகாமைத்துவம் எனப்படும். கழிவுகளை பிரதானமாக திண்மக்கழிவுகள், திரவக்கழிவுகள் எனப் பாகுபடுத்தலாம். திண்மக் கழிவுகளின் வகையினுள் விவசாயக் கழிவுகள், நகரசபைக் கழிவுகள், தொழிற்சாலைக் கழிவுகள், வீட்டுத்துறைக் கழிவுகள் மற்றும் விசேட கழிவுகள் என்பன உள்ளடங்கும். இவ்விசேட கழிவுகளில் *Ewaste, Medical waste, Plastic waste and Construction waste* என்பன உள்ளடங்கும்.

உலகளவில் 10 வீதத்தை விடக் குறைந்தளவான கழிவு மீள்சுழற்சியினை மேற்கொள்ளும் நாடுகளாக தென்னாசியா, கிழக்காசிய நாடுகள், மத்திய கிழக்கு மற்றும் வடஆபிரிக்க நாடுகள் காணப்படுகின்றன.

மாறாக ஜப்பான், ஜேர்மனி, பிரான்ஸ், பிரித்தானியா, இத்தாலி, அமெரிக்கா, கனடா, பிரேசில், துருக்கி, சீனா போன்ற உயர்வருமானமுடைய நாடுகளில் கழிவு முகாமைத்துவம் சிறப்பாக மேற்கொள்ளப்படுகின்றன.

உலகளவில் திண்மக் கழிவு முகாமைத்துவத்தினை இந்நாடுகள் முறையாகக் கடைப்பிடிக்கின்றன.





19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உலகமயமாக்கலைத் தொடர்ந்து ஜப்பான் அதிகரித்த கழிவுகளினால் பாரிய சூழல் பிரச்சினைகளை எதிர்கொண்டது. 20ஆம்நூற்றாண்டுகாலப்பகுதியில் கைத்தொழில் மயமாக்கல் மற்றும் அதிகரித்த பொருளாதார வளர்ச்சி என்பன கழிவுகளின் அளவை பாரியளவில் அதிகரித்தன. கழிவு முகாமைத்துவத்தினை மேற்கொள்வது தொடர்பான முதலாவது சட்டம் 1900 இல் *'Waste Cleaning Act'* எனும் பெயரில் அறிமுகப்படுத்தப்பட்டது.

20ஆம் நூற்றாண்டுகளில் அதிகரித்த கழிவுகளை முகாமை செய்வதற்கு 3R (*Reduce, Reuse, Recycle*) மையப்படுத்திய கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது. ஜப்பான் நாட்டில் கடைப்பிடிக்கப்படுகின்ற வேறுபட்ட கழிவு முகாமைத்துவ கொள்கைகளை பின்வருமாறு வகைப்படுத்தலாம்:

*Technology Efficient Waste Transport* – கழிவுகளை சேகரித்து உரிய இடத்திற்கு கொண்டு செல்வதற்கான செலவை குறைப்பதற்காக விசேட திட்டம் ஜப்பானில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. விசேட வகை வாகனங்கள் வடிவமைக்கப்பட்டு அவற்றினூடாக ஒரே தடவையில் அதிகளவுகழிவுகள் கொண்டு செல்லப்படுகின்றன.

இவ்வாறான முறையில் கழிவுகளை முகாமை செய்வதுடன் சூழல் பாதுகாப்பினையும் மேம்படுத்த முடியும். அபிவிருத்தியடைந்த நாடுகள் இத்தகைய நவீன தொழினுட்பங்களைப் பயன்படுத்தி கழிவு முகாமைத்துவ நடவடிக்கையில் முன்னேற்றமடையும் அதேவேளை, அபிவிருத்தியடைந்து வரும் குறைந்த வருமானமுடைய நாடுகள் கழிவு முகாமைத்துவத்தினை சீராக பின்பற்றாமையினால் சூழல் பாதிப்பினை எதிர்கொள்கின்றன.

வடிவேல் வசந்தலா
கலை, கலாசார பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம்

# சட்டவிரோத மதுபானத்தினால் தமிழ்நாடு கள்ளக்குறிச்சியில் 34 பேர் பரிதாப மரணம்!

தமிழ்நாட்டின் கள்ளக்குறிச்சியில் சட்டவிரோத மதுபானம் (கசிப்பு) அருந்தியதால் பாதிக்கப்பட்ட 100 இற்கும் மேற்பட்டோர் கள்ளக்குறிச்சி, சேலம், புதுச்சேரி, விழுப்புரம் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் 34 பேர் நேற்றுக் காலை வரை உயிரிழந்திருப்பதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது. அடுத்தடுத்து பலர் உயிரிழந்து விட்டதால் அப்பகுதியெங்கும் அச்சம் நிலவுகின்றது.

இறந்தவர்களின் உடல்கள் உடற்கூறு ஆய்வு செய்யப்பட்டு குடும்பங்களிடம் ஒப்படைக்கப்பட்டு வருகின்றன. உடற்கூறு ஆய்வை விரைவாக செய்வதற்காக பிற மாவட்டங்களில் இருந்து மருத்துவ நிபுணர்கள் வரவழைக்கப்பட்டுள்ளனர். மேலும் சிகிச்சையில் இருக்கும் நபர்களின் உயிரை காப்பதற்கு திருச்சி சேலம் உள்ளிட்ட அருகில் உள்ள மாவட்ட அரசு மருத்துவமனைகளில் இருந்து உயர் சிறப்பு மருத்துவர்கள் வந்துள்ளனர்.



பாதிக்கப்பட்டவர்களை மருத்துவமனைக்கு கொண்டு செல்ல கூடுதல் அம்புலன்ஸ்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

தமிழக அரசு இந்த விவகாரம் தொடர்பாக ஓய்வு பெற்ற நீதிபதி கோகுல்தாஸ் தலைமையில் ஒரு நபர் விசாரணை ஆணையம் அமைத்துள்ளது. இந்த ஆணையம் தனது விசாரணை அறிக்கையை மூன்று மாதங்களுக்குள் சமர்ப்பிக்கும்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.10 இலட்சமும், பாதிக்கப்பட்டு சிகிச்சைப் பெறுவோருக்கு தலா ரூ.50 ஆயிரமும் வழங்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. நான்கு கிராமங்களைச் சேர்ந்த, மது அருந்திய பலர் அதிக வயிற்றுப்போக்கு, கை கால் மரத்துப் போதல் போன்ற பிரச்சினைகளுக்காக கள்ளக்குறிச்சி மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேரத் தொடங்கினர்.

கள்ளக்குறிச்சி பஸ் நிலையம் பகுதியில் இருந்து கள்ளக்குறிச்சி மாவட்ட அரசு கல்லூரி மருத்துவமனை வரை 20 இற்கும் மேற்பட்ட அம்புலன்ஸ்கள் ஒரே நேரத்தில் பாதிக்கப்பட்டவர்களை ஏற்றிக் கொண்டுஅரசுமருத்துவமனைக்குவந்தன. அவர்களை மருத்துவர்கள் உடனடியாக பரிசோதனை செய்து அதிக பாதிப்பு உள்ளவர்களை சேலம், புதுச்சேரி, விழுப்புரம் அரசு மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைத்தனர்.

தமிழக அமைச்சர்கள் எ.வ.வேலு, மா.சுப்பிரமணியன் ஆகியோர் கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைப் பெறும் நபர்களை நேரில் பார்த்து நலம் விசாரித்தார்கள். தொடர்ந்து உயர்தரமான சிகிச்சை வழங்குமாறு மருத்துவர்களுக்கு அவர்கள் அறிவுறுத்தினர்.

கள்ளக்குறிச்சியில் கள்ளச்சாராயம் விற்பனை செய்ததாக கன்னுக்குட்டி என்ற கோவிந்தராஜ், அவரது தம்பி தாமோதரன் ஆகிய இருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். இருவரிடம் கள்ளக்குறிச்சி பொலிசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை மேற்கொண்ட மருத்துவர்களிடம் விசாரித்ததில், அவர்கள் அனைவரும் மெதனோல் என்னும் திரவத்தை அருந்தியிருப்பது கண்டறியப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது பொலிஸ்துறையின் கவனக்குறைவால் நடந்திருப்பது கண்டறியப்பட்டு, கள்ளக்குறிசி பொலிஸ் அத்தியட்சகர் உள்ளிட்ட 10 பொலிஸ் அதிகாரிகள் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இதில் தொடர்புடைய அனைவரும் கைது செய்யப்பட்டு, தண்டனை கிடைக்க வழிவகை செய்யப்படும். யாருக்கும் அரசு பரிவு காட்டாது என்று மாநில அரசு தரப்பில் கூறப்பட்டுள்ளது.

கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய உயிரிழப்புகள் பற்றிய வழக்கு சி.பி. சி. ஐ. டிக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும், இந்தச் சம்பவம் குறித்த விரிவான அறிக்கை அரசுக்கு சமர்ப்பிக்கப்படும் என்றும் மாவட்ட ஆட்சியர் பிரசாந்த் கூறினார்.

விஷ சாராயம் குடித்து அதிகமானோர் உயிரிழந்த கருணாபுரம் பகுதியில் பாதுகாப்பு கருதி 200 இற்கும் மேற்பட்ட பொலிசார் குவிக்கப்பட்டுள்ளனர்.

கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய உயிரிழப்புகள் அதிகரித்து வரும் நிலையில், அம்மாவட்ட ஆட்சியர் ஷ்ரவன்குமார் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார். அவருக்கு பதிலாக எம். எஸ். பிரசாந்த் ஆட்சியராக பணியமர்த்தப்பட்டுள்ளார். மாவட்ட பொலிஸ் கண்காணிப்பாளர் சமய்சிங் மீனா பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். புதிய அத்தியட்சகராக ரஜத் சதுர்வேதி நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆட்சியர், எஸ்.பி. மட்டுமின்றி மேலும் 9 அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மதுவிலக்கு அமுலாக்கப் பிரிவு காவல்துறை துணை கண்காணிப்பாளர் தமிழ்ச்செல்வன் மற்றும் ஆய்வாளர் கவிதா, திருக்கோவிலூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவு காவல் நிலைய ஆய்வாளர் பாண்டிசெல்வி மற்றும் உதவி ஆய்வாளர் பாரதி,கள்ளக்குறிச்சி பொலிஸ் ஆய்வாளர் ஆனந்தன் மற்றும் உதவி ஆய்வாளர் சிவசந்திரன், பொலிஸ் நிலைய எழுத்தர் பாஸ்கரன், சிறப்பு உதவி ஆய்வாளர் மனோஜ் ஆகியோர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோத மதுபானத்தை பலரும் அருந்தியிருப்பதால் உயிரிழப்புகள் அதிகரித்து வருகின்றன.

கள்ளக்குறிச்சி நகர்ப்பகுதியைச் சேர்ந்த கருணாபுரம் பகுதியில் கண்ணுக்குட்டி என்ற பட்டப்பெயர் கொண்ட நபர் ஒருவர் கள்ளச்சாராயம் விற்பனை செய்து வந்துள்ளார். பல முறை சிறை சென்றுள்ள இவர் மீண்டும் மீண்டும் கள்ளச்சாராய விற்பனையை தொடர்ந்து வந்துள்ளார்.

அரசு மதுபானக் கடையான டாஸ்மாக்கில் மதுபானங்கள் விலை அதிகம் என்பதால், கருணாபுரம் பகுதியை ஒட்டிய பகுதிகளில் வசிப்பவர்கள் கள்ளச்சாராயத்தை நாடி வந்துள்ளனர். அவர்களே மரணமடைந்துள்ளனர்.

# எமது நாட்டின் பிள்ளைகளுக்கென உகந்ததொரு நாடு உருவாக்கப்படும்

## எந்தவொரு பிள்ளையும் பாதிக்கப்படக் கூடாது!

## உயர்தர மாணவர்கள் 6,000 பேருக்கும், தரம் 1 முதல் தரம் 11 வரையான 100,000 மாணவர்களுக்கும் புலமைப் பரிசில்கள் வழங்கும் திட்டத்தை ஆரம்பித்து வைத்து ஜனாதிபதி உரை

ஜனாதிபதி என்ற வகையில் இந்த நாட்டில் எந்த ஒரு பிள்ளையும் பாதிக்கப்படக் கூடாது என தீர்மானித்துள்ளதாகவும், இரண்டு வருட குறுகிய காலத்தில் பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதற்காக தன்னை அர்ப்பணித்துள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

ஜனாதிபதி புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் அலரி மாளிகையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

மக்களுக்கு வருமானம் வழங்குவதற்காக 'அஸ்வெசும' வேலைத்திட்டமும் காணி உரிமையை வழங்க உறுமய வேலைத்திட்டமும் அமுல்படுத்தப்பட்டதாக தெரிவித்த ஜனாதிபதி, பிள்ளைகளுக்கு கல்விஅறிவை வழங்குவதற்காக 'ஜனாதிபதி கல்வி புலமைப் பரிசில் திட்டம்' ஆரம்பிக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

"2022 ஆம் ஆண்டில் (2023), உயர்தரம் கற்கும் 60 மாணவர்களைத் தெரிவு செய்து 100 வலயங்கள் உள்ளடங்கும் வகையில் ஒரு மாணவருக்கு மாதாந்தம் 6000 ரூபா வீதம் 6000 மாணவர்களுக்கு 02 வருடங்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்படும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கருத்திட்டத்திற்கு அமைய, நாடளாவிய ரீதியில் 10,126 பாடசாலைகளை உள்ளடக்கி தரம் 1 முதல் தரம் 11 வரை கல்வி கற்கும் மாணவர்களுக்கு இந்த புலமைப்பரிசில் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

ஒவ்வொரு பாடசாலையிலும் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஒவ்வொரு பாடசாலைக்கும் வழங்கப்படும் புலமைப்பரிசில் தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதன்படி ஒரு பாடசாலைக்கு வழங்கப்படும் குறைந்தபட்ச புலமைப்பரிசில் 04 என்பதோடு அதிகபட்ச புலமைப்பரிசில் 22 ஆகும். ஏப்ரல்



2024 முதல் 12 மாதங்கள் வரை, ஒரு மாணவருக்கு மாதம் ரூ.3000.00 வீதம் ஒரு இலட்சம் மாணவர்களுக்கு ஜனாதிபதி நிதியிலிருந்து கல்வி உதவித்தொகை வழங்கப்படும்" எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.





புலமைப் பரிசில்கள் வழங்கும் திட்டத்தை அடையாளப்படுத்தும் வகையில் 5108 மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள் மற்றும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சில மாணவர்களுக்கு அடையாளமாக புலமைப் பரிசில்களை வழங்கினார்.

புலமைப்பரிசில் பெற்ற மாணவர்கள் இருக்கும் இடத்திற்குச் சென்ற ஜனாதிபதி அவர்களின் விபரங்களைக் கேட்டறிந்தார்.

இந்நிகழ்வில், உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறியதாவது:

"இந்நாட்டுப் பிள்ளைகளுக்கு இன்று மிகவும் மகிழ்ச்சியான நாள். முதலில், இந்த உதவித்தொகை பெறுவதற்கு உங்கள் அனைவருக்கும் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்தின் கீழ் ஒரு இலட்சம் உதவித்தொகை வழங்கப்படும். உயர்தரம் கற்கும் மாணவர்களுக்கு 6,000 ரூபா உதவித்தொகையும் வழங்கப்படுகிறது. இந்த புலமைப்பரிசில்களை வழங்க ஜனாதிபதி நிதியத்தில் இருந்து 04 பில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளோம்.

கடந்த 3 வருடங்கள் நம் அனைவருக்கும் கடினமான காலமாக அமைந்தது. நாங்கள் அனைவரும் அவதிப்பட்டோம். உணவு இருக்கவில்லை. மாணவர்களுக்கு பாடசாலைக்குச் செல்வதற்குப் போக்குவரத்து வசதி இருக்கவில்லை. இப்போது அந்த நிலைமை இல்லை. ஜனாதிபதி என்ற வகையில் இந்த நாட்டின் பிள்ளைகள் துன்பப்படுவதற்கு இடமளிக்காதிருக்கத் தீர்மானித்தேன். அதன்படி இந்த நாட்டை பொருளாதார ரீதியாக மீட்பதற்குத் தேவையான வேலைத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டது.

நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து விடுவிக்கத் தேவையான திட்டத்தை செயல்படுத்தியுள்ளோம். அதன் மூலம் அடுத்த 510 ஆண்டுகளில் பிள்ளைகளுக்கான சிறந்த நாட்டை உருவாக்குவதே எங்கள் நோக்கமாகும்.



கடந்த பொருளாதார நெருக்கடியால், பலர் தங்கள் வருமான வழிகளை இழந்துள்ளனர். அதன்படி, அஸ்வெசும திட்டத்தின் மூலம் 24 இலட்சம் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க ஏற்பாடு செய்துள்ளோம். அத்துடன், மக்கள் வாழும் காணியின் சட்டபூர்வ உரிமையை மக்களுக்கு வழங்க உறுமய வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. மேலும், நகர்ப்புற அடுக்குமாடி குடியிருப்புகளில் வசித்த



மக்களுக்கு அந்த வீட்டின் உரிமை இருக்கவில்லை. எனவே, அரச காணியில் வசித்த, அரசுக்குச் சொந்தமான நிலத்தில் விவசாயம் செய்த, அரச அடுக்குமாடி குடியிருப்புகளில் வசித்த அனைவருக்கும் அதற்கான உரிமை வழங்கப்படுகிறது. மேலும், நாட்டின் பிள்ளைகளின் கல்வியில் கவனம் செலுத்தி, உங்கள் அனைவருக்கும் இந்த உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, மக்களுக்கு வருமானம் அளிக்கவும், உரிமைகளை வழங்கவும் பிள்ளைகளுக்கு கல்வி வழங்கவும் நடவடிக்கை எடுத்துள்ளோம். எனவே இப்பிள்ளைகள் இந்த உதவித்தொகையை சரியான முறையில் பயன்படுத்தி தங்கள் கல்வியை மேம்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்." இவ்வாறு ஜனாதிபதி தெரிவித்தார்.

பிரதமர் தினேஷ் குணவர்தன, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன, இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன், பாராளுமன்ற உறுப்பினர்களான வஜிர அபேவர்தன, மேஜர் பிரதீப் உடுகொட, மேல் மாகாண ஆளுநர் மார்ஷல் ஒப் எயார் போர்ஸ் ரொஷான் குணதிலக்க, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் பிரதீப் யசரத்ன, ஜனாதிபதி நிதிய செயலாளரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளருமான டபிள்யூ.ஏ.சரத் குமார உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

**(ஜனாதிபதி ஊடகப் பிரிவு)**

# 'கந்துகர தசகய' திட்டத்தின் கீழ் 9,622 மில்லியன் ரூபா செலவில் 97 பிரதேச செயலகப் பிரிவுகளில் 14,088 அபிவிருத்தி வேலைகள்

## நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ. எஸ் சத்யானந்த

'கந்துகர தசகய' பத்து சிறப்பு ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 97 பிரதேச செயலகங்களில் 14,088 வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், அதற்காக இவ்வருடம் 9,622 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ. எஸ் சத்யானந்த தெரிவித்தார்.

மேலும், யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்களின் வீட்டுத் தேவைகளில் 89 வீதமானவை 2023 இறுதிக்குள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், மொத்தமான மீள்குடியேற்ற வேலைத்திட்டத்தில் இதுவரை 275,127 குடும்பங்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்றுமுன்தினம் (19) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அவர் குறிப்பிட்டதாவது:

"நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் முக்கிய துறைகள் நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாணப் பணிகள் ஆகும். 2023 ஆம் ஆண்டின் இறுதிக்குள், யுத்தத்தினால் இடம்பெயர்ந்தவர்களுக்கு 151,662 வீடுகளை எமது அமைச்சு நிர்மாணித்துள்ளது.

உள்நாட்டு நிதிக்கு மேலதிகமாக, இந்திய உதவிகள், உள்நாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் ஆதரவுடன் இந்த வீடுகள் நிர்மாணிக்கப்பட்டன. இதன்படி, யுத்தத்தினால் இடம் பெயர்ந்தவர்களின் வீட்டுத் தேவைகளில் 89% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

மொத்தமான மீள்குடியேற்ற வேலைத்திட்டத்தின்படி, இதுவரை மீள்குடியேற்றப்பட்ட குடும்பங்களின் மொத்த எண்ணிக்கை 275,127 ஆகும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த ஆண்டு, மீள்குடியேற்றத்தை துரிதப்படுத்துவதற்காக 500 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளார்.

## கடந்த அரசாங்கங்களால் பூர்த்தி செய்யப்படாமல் இருந்த அனைத்து வீட்டுத் திட்டங்களின் பணிகளும் உடனடியாக முடிக்கப்படும் - தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ரஜீவ் சூரியாராச்சி

பல சிறப்புத் திட்டங்கள் நமது அமைச்சின் கீழ் இயங்கி வருகின்றன. மேல் மாகாண பெருநகர பிரதான திட்டம், கிழக்கு மாகாண மூலோபாய சுற்றுலா வலய அபிவிருத்திக்கான பிரதான திட்டம், ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் அபிவிருத்தி மற்றும் பிரதான அபிவிருத்தித் திட்டத்தை தயாரித்தல், நிலைபேறான சுற்றுலா அபிவிருத்தி நகர அபிவிருத்தித் திட்டம், கொழும்பு நகர புத்துயிர் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஆதரவளிக்கும் திட்டம் மற்றும் அனுராதபுர ஒருங்கிணைந்த நகர அபிவிருத்தித் திட்டம் ஆகியவை இத்திட்டங்களில் அடங்கும்.



மேலும், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் கொழும்பு திண்மக்கழிவு முகாமைத்துவ திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இவற்றில், ஜனாதிபதியின் விசேட கவனத்தைப் பெற்ற 'கந்துகர தசகய' விசேட ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தி வேலைத் திட்டத்திற்காக இவ்வருடம் பத்தாயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம், 97 பிரதேச செயலகப் பிரிவுகளில் 14,088 வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இத்திட்டங்களுக்காக 9,622 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடுகள் விடுவிக்கப்பட்டுள்ளது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ரஜீவ் சூரியாரச்சி:

"கடந்த காலங்களில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்ட பல திட்டங்கள் பொருளாதார நெருக்கடி மற்றும் கொவிட் தொற்று காரணமாக பின்னடைவைச் சந்தித்தன. எனினும் கடந்த 02 வருடங்களில் 18,123 பயனாளி குடும்பங்களுக்கு 10,288 மில்லியன் ரூபா வீடமைப்பு உதவியாக வழங்கப்பட்டுள்ளது. இதன்படி 16,670 குடும்பங்கள் தங்களுடைய வீட்டுக் கனவை நனவாக்கி உள்ளன. உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்ட 50 பேருக்கு 52.05 மில்லியன் ரூபா பெறுமதியான வீடமைப்பு உதவிகளையும் வழங்கியுள்ளோம். மேலும், இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட வீட்டு திட்டத்தின் கீழ் 2,072 வீடுகள் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதோடு, அதில் 732 வீடுகள் முழுமையாக கட்டப்பட்டுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் 2024ஆம் ஆண்டுக்காக முன்மொழியப்பட்ட வரவு செலவுத் திட்ட அறிக்கையின்படி வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான அடுக்குமாடி குடியிருப்புகளில் வசிக்கும் குடும்பங்களுக்கு வீட்டு உரிமைகளை இலவசமாக வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி, இந்த ஆண்டு இறுதிக்குள் கொழும்பு மாநகரசபையில் 1,070 குடும்பங்களுக்கு வீட்டு உறுதிகள் வழங்கப்படவுள்ளன. அதேபோல் யாழ்ப்பாணம் குருநகர் வீடமைப்புத் திட்டத்தின் 160 குடும்பங்களுக்கும் வீட்டு உறுதிகள் இலவசமாக வழங்கப்பட உள்ளன. அத்தோடு, 742 வீடுகளுக்கான உறுதிப் பத்திரங்களும் வழங்கப்படவுள்ளன.

இதுவரை எந்த அரசாங்கத்தாலும், அமைச்சராலும் ஆரம்பிக்கப்பட்ட ஆனால் இதுவரை பூர்த்தி செய்யப்படாத சகல வீட்டுத் திட்டங்களையும் பூர்த்தி செய்து மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பணிப்புரை விடுத்துள்ளார்".

நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் நிமேஷ் ஹேரத்:

"நாட்டின் நகர்ப்புறங்களில் சூழலை முகாமைத்துவம் செய்வதே நகர அபிவிருத்தி அதிகார சபையின் பொறுப்பாகும். கொவிட் தொற்றுநோய் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக இடையில் நிறுத்தப்பட்ட 22 திட்டங்களின் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த 22 திட்டங்களுக்காக திறைசேரி 1,900 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

மேலும், திட்டங்கள் மற்றும் முதலீடுகளுக்கு அனுமதியளிப்பதை விரைவுபடுத்தும் நோக்கில் விரைவு சேவை பிரிவு (ONE STOP UNIT) தொடங்கப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டளவில் இலங்கையின் அனைத்து நகர அபிவிருத்தி எல்லைககளுக்குள்ளும், இந்த Online முறையை நடைமுறைப்படுத்தவும் திட்டமிட்டுள்ளோம்.

மேலும், நகர்ப்புற அபிவிருத்தி பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டுள்ள 276 பகுதிகளுக்கு பொருளாதாரம், சமூகம், சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரம் ஆகிய ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. 87 உள்ளூராட்சி மன்றங்களுக்கான அபிவிருத்தித் திட்டங்கள் வெளியிடப்பட்டுள்ளதுடன், இவ்வருடம் 26 அபிவிருத்தித் திட்டங்கள் வர்த்தமானியில் வெளியிடப்பட உள்ளன. எதிர்வரும் ஆண்டுகளில் 22 அபிவிருத்தித் திட்டங்கள் என்ற அடிப்படையில் வர்த்தமானியில் அறிவிக்கப்படும்".

நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ஆர்.எச். ருவினிஸ்:

"நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை இதுவரை பூர்த்தி செய்யப்பட்ட திட்டங்களுக்காக 200 பில்லியன் ரூபாவிற்கும் அதிகமான தொகையை நிர்மாண ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கியுள்ளது. மேலும், அந்த திட்டங்களை மீண்டும் தொடங்கும் வகையில் இதுவரை இடைநிறுத்தப்பட்டிருக்கு பல சிறப்பு திட்டங்களுக்கு பணம் செலுத்தும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

அத்துடன், நிர்மாண ஒப்பந்ததாரர்களின் பதிவு தாமதக் கட்டணம் அறவிடப்படாமல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன், தேசிய நிர்மாண சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க 2020 ஆம் ஆண்டுக்கு முன்னர் பதிவு செய்ய முடியாது போன ஒப்பந்தக்காரர்களுக்கும் மீள் பதிவு செய்ய வாய்ப்பளிக்கும் வகையில் 03 வருட காலத்திற்கு சிறு மற்றும் மத்திய தர ஒப்பந்தாகாரர்கள் ( C4 – C9) தாமதக் கட்டணத்திலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்".

இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹிரன் பாலசூரிய:

"இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு வரவு செலவுத் திட்டத்தின் கீழ் 2,190 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் இதுவரை 843.91 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. அதன் கீழ், 4 முக்கிய விடயப் பரப்புக்களின் கீழ் 31 திட்டங்கள் செயல்படுத்துகின்றன.

கால்வாய்கள், ஏரிகள் மற்றும் நடைபாதை பராமரிப்புத் திட்டத்தின் கீழ் கொழும்பு தலைநகர வலயம் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் காணப்படும் பிரதான கால்வாய்களில், 44 கிலோற்றர் பிரதான கால்வாய்கள், 52 கிலோமீற்றர் இரண்டாம் நிலைக் கால்வாய்கள் மற்றும் 22 கிலோமீற்றர் நீளமான ஹெமில்டன் கால்வாய் பராமரிப்பு, வெள்ள நீர் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் கீழ் மாதிவெல தெற்கு திசை திருப்பும் திட்டம், கழு பாலம திட்டத்தின் கீழ் முன்மொழியப்பட்ட Gate Mounted Pump திட்டம் உள்ளடங்களாக 9 பிரதான திட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளன".

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் பிரதிநிதிகள் குழுவொன்று கலந்து கொண்டது.

**(ஜனாதிபதி ஊடகப் பிரிவு)**

## அறநெறி மாணவர்களுக்கான கூட்டுப் பிரார்த்தனை பயிற்சி

தமிழர் நற்பணி மன்றம் மற்றும் ஸ்ரீஜயப்பன் அறநெறிப் பாடசாலையுடன் இணைந்து அறநெறி பாடசாலை மாணவர்களுக்காக சமய குரவர்கள் நால்வர் பாடியருளிய திருமுறை பதிகங்களை பண்ணோடு கூட்டுப் பிரார்த்தனை செய்யும் பயிற்சியை வழங்கவுள்ளனர். இப்பண்ணிசை பயிற்சி இன்று காலை மணி முதல் பிற்பகல் 1 மணி வரை கொழும்பு 15, அளுத் மாவத்தையிலுள்ள அகில இலங்கை ஆனந்த ஐயப்பன் தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ளது. கொழும்பு மாவட்டத்தில் உள்ள அறநெறிப் பாடசாலை மாணவர்கள் அனைவரும் இப்பண்ணிசை பயிற்சியில் பங்குபற்றி பயன்பெற அழைக்கப்படுகின்றனர்.

## ஓவியக் கண்காட்சி

(அஷ்ரப் ஏ சமத்)

கிண்ணியாவின் பிரபல ஓவிய ஆசிரிய ஆலோசகர் சகீலின் கைவண்ணத்தில் இயற்கையாக நேரடியாக வரையப்பட்ட ஓவியக் கண்காட்சி கிண்ணியா மத்திய கல்லூரியின் அப்துல் மஜீத் மண்டபத்தில் நாளை 22 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இக் கண்காட்சியை பொதுமக்களும் ஆசிரியர்களும் மாணவர்களும் இலவசமாக கண்டு களிக்க முடியும் ஓவிய ஆசிரியர் தெரிவித்துள்ளார்.

## அபிவிருத்தித் திட்டங்கள்...

மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது.

இதில் கொழும்பிலுள்ள கடற்படைத் தலைமையகத்தில் ஒரு மையம், ஹம் பாந்தோட்டையில் துணை மையம், காலி, அறுகம்பே, மட்டக்களப்பு, திருகோணமலை, கல்லாறு, பருத்தித்துறை, மொல்லிக்குளம் ஆகிய பிரதேசங்களின் ஆளில்லா கட்டுப்பாட்டு மையங்களும் அடங்கும். வெளிவிவகார அமைச்சர் சட்டத்தரணி அலி சப்ரி, தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

## பெண்கள் வலுவூட்டல் சட்டமூலம்...

பாராளுமன்றத்தில் நேற்று பெண்கள் வலுவூட்டல் சட்டமூலம் இரண்டாம் வாசிப்பு விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது இந்த திருத்தத்துக்கு ஆதரவாக 05 வாக்குகளும்,எதிராக 13 வாக்குகளும் அளிக்கப்பட்டன. இந்நிலையில் 09 மேலதிக வாக்குகளினால் கெனிந்து குமாரதுங்க முன்வைத்த திருத்தம் நிராகரிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இந்த சட்டத்தின் ஊடாக ஸ்தாபிக்கப்படும் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் நியமனம் தொடர்பில் எதிரணி சுயாதீன எம்பி சந்திம வீரக்கொடி முன்வைத்த திருத்தத்தை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என மகளிர் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க குறிப்பிட்ட கருத்துக்கு எதிரணியின் உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

பெண்களின் நலனுக்காக முன்வைக்கப்படும் இந்த சட்டத்தில் பல குறைபாடுகள் இருப்பதை உயர்நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.ஆகவே முன்வைக்கப்படும் திருத்தங்களை ஏற்றுக் கொள்ளுங்கள் என பாராளுமன்ற பெண்கள் ஒன்றியத்தின் தலைவர் சுதர்ஷனி பெர்னான்டோ புள்ளே எம்பி சபையில் வலியுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து முன்வைக்கப்பட்ட திருத்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக சபை முதல்வர் சுசில் பிரேமஜயந்த சபைக்கு அறிவித்தார்.

அதனைத் தொடர்ந்து சட்டமூலத்தின் ஏற்பாடுகள் தொடர்பில் எதிரணி உறுப்பினர்கள் முன்வைத்த திருத்தங்கள் வாதப்பிரதி வாதங்களுடன் ஏற்றுக் கொள்ளப்பட்டன. இந்த சட்டமூலத்துக்கு அரசாங்கத்தின் சார்பில் சபை முதல்வர் புதிதாக பல திருத்தங்களை முன்வைத்தார்.அத் திருத்தங்களும் நேற்று சபையில் நிறைவேற்றப்பட்டன.

## 2025 முதல் தரம் 01 மாணவர் அனுமதி...

நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

இதற்கமைவாக கல்வியில் சமத்துவமான , நியாயமான அனுமதியை வெளிப்படைத்தன்மையுடன், முறைகேடுகளைக் குறைக்கும் வகையிலும், பாடசாலைகளில் தரம் ஒன்றுக்கு மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கு இந்த சுற்றறிக்கை வழிவகை செய்வதாக அமைச்சர் தெரிவித்தார்.

கடந்த வருடங்களில் கிடைத்த அனுபவங்களின் அடிப்படையில் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களை திருத்தியமைத்து திருத்தப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் பிள்ளைகளை தரம் ஒன்றுக்கு அனுமதிப்பதற்கு கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவினால் முன்வைக்கப்பட்ட ஆவணத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

வெள்ளம், மண்சரிவு போன்ற அனர்த்தங்களினால் பிறப்புச் சான்றிதழை இழந்த முறையான பிறப்புச் சான்றிதழை முன்வைக்க முடியாவிட்டால், மாணவர்களை பாடசாலைகளில் இணைத்துக்கொள்வதற்கான மாற்று வழிமுறைகள் இதில் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு வருடமும், நாட்டில் 2,50,000 தொடக்கம் 03 இலட்சம் மாணவர்கள் தரம் ஒன்றில் இணைத்துக்கொள்ளப்படுகின்றனர் என்றும் அமைச்சர் கூறினார்.

பெற்றோர்கள் பிள்ளைகளை தரம் ஒன்றில் சேர்ப்பதில்; அதிக ஆர்வம் காட்டுவதுடன், பல்வேறு காரணங்களால் ஒவ்வொரு பாடசாலையிலும் பிள்ளைகளை சேர்ப்பதில் பெற்றோர்கள் பல்வேறு சிரமங்களையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது. மாணவர்களை பாடசாலைகளில் சேர்ப்பதில் கடந்த சில வருடங்களில் பெற்றோர்கள் எதிர்கொண்ட சிரமங்கள் தொடர்பில் முழு கவனம் செலுத்தி, அதற்கேற்ப, தரம் ஒன்றில் மாணவர்களை சேர்ப்பதற்கான சுற்றறிக்கை ஆவணத்தில் தேவையான அக்கப்பூர்வமான திருத்தங்களை மேற்கொள்ள அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இது தொடர்பான விவரங்கள் பத்திரிகைகளில் விரிவாக வெளியிடப்படும் என்றும் அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான கலாநிதி பந்துல குணவர்தன மேலும் தெரிவித்தார்.

## அரச, தனியார் துறை உயர்...

காணப்படுகிறது. அரச துறையில் 05 இலட்சத்து 95 ஆயிரத்து 143 பெண்கள் பணிபுரிகிறார்கள். தனியார் துறையில் 10 இலட்சத்து 74 ஆயிரத்து 607 பெண்களும், சுய தொழில்துறையில் 07 இலட்சத்து 03 ஆயிரத்து 290 பெண்களும் பணிபுரிகின்றனர். பெருந்தோட்டத்துறையில் 01 இலட்சத்து 70 ஆயிரத்து 786 பெண்கள் பணிபுரிகிறார்கள். அந்த வகையில் தொழில் துறைகளில் பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் சபையில் கேட்டுக் கொண்டார். பாராளுமன்ற செயலாளர் நாயகமாக, பெண் ஒருவர் பதவி வகிப்பதையிட்டு மகிழ்ச்சியடைவதாக தெரிவித்த அவர்,ஏனைய அரச நிறுவனங்களிலும் இதனை ஒரு முன்னுதாரணமாகக் கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார். நாட்டின் மொத்த சனத்தொகையில் 52 வீதம் பெண்கள் வாழ்கின்ற நிலையில், 12 பெண் பிரதிநிதிகள் மாத்திரமே பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்வது கவலைக்குரியது என்றும் அவர் தெரிவித்தார்.

## வடக்கு, கிழக்கு காணி...

அமைச்சர் சுட்டிக்காட்டினார். பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் எதிர்க்கட்சி எம். பி இம்ரான் மஹ்ரூப் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் இறக்கக்கண்டி, புல்மோட்டை,கிண்ணியா, முதூர் மற்றும் தோப்பூர் ஆகிய பிரதேசங்களிலுள்ள காணிகள் அவற்றின் உரிமையாளர்களின் அனுமதியுடனும் முன்னறிவித்தலுடனும் நில அளவைத் திணைக்களத்தால் அளவீடு செய்யப்படுகிறது.

## வத்தளையில் 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் இலவச கருத்தரங்கு

வத்தளை நமக்காக நாம் அமைப்பும் MSC விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் கல்விக்கான செயற்பாட்டுப் பணிகளில் அடுத்த பணி ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவ மாணவிகளுக்கான இலவச மாபெரும் கருத்தரங்காகும்.

இந்தக் கருத்தரங்கு வத்தளை நகர சபை மண்டபத்தில் முற்றிலும் இலவசமாக நடைபெறவுள்ளது. இன்று காலை 8.30 மணிக்கு கருத்தரங்கு ஆரம்பமாகவுள்ளது.

தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் ஊடாக அனுசரணையுடன் நடைபெறவுள்ள இந்த கருத்தரங்கு தொடர்பான மேலதிக தகவல்கள் தேவைப்படின், உபசெயலாளர் சிவரூபனுடன் (0777234680) தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## ஜப்பான் சதை உண்ணும் STSS பக்டீரியா...

காணப்படாவிட்டாலும் வெளிநாட்டவர் நாட்டுக்குள் பிரவேசிக்கும் கட்டுநாயக்க விமான நிலையம் உள்ளிட்ட முக்கிய இடங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்களுக்கு இது தொடர்பில் தெளிவூட்டப்பட்டுள்ளதாகவும் அவர் சபையில் தெரிவித்தார். பக்டீரியாவின் பாதிப்பு ஜப்பானில் காணப்பட்டாலும் அது தொடர்பான பாதிப்புகள் இலங்கைக்கு ஏற்படுமா? என பாராளுமன்ற உறுப்பினர் சமன்பிரிய ஹேரத் எழுப்பிய கேள்வி க்குப் பதிலளிக்கும் போதே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

வைரஸாக அன்றி பக்டீரியாவாக இது உருவெடுத்துள்ளதால் மருந்துகள் மூலம் அதனைக் கட்டுப்படுத்த முடியுமென தெரிவிக்கப்படுவதுடன் ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் அதனைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

## இன்று பொசன் பௌர்ணமி தினம்...

ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது. பொசன் பண்டிகையை முன்னிட்டு 20,000 பொலிஸ் உத்தியோகத்தர்கள், 400 பொலிஸ் விசேட அதிரடிப்படையினர், 700 இராணுவத்தினர், நாடு முழுவதும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அத்தோடு 27,000 சமூக பொலிஸ் பாதுகாப்பு உறுப்பினர்கள் பொசன் பண்டிகையை முன்னிட்டு தேவையான ஒத்துழைப்பை வழங்குவதாகவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இன்று ஆரம்பமாகும் ஹோமாகம தம்ம ரஷ்மி பொசோன் பிரதேசத்தை மையப்படுத்தி பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இது தொடர்பில் பொதுமக்களை தெளிவுபடுத்துவதற்கான வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஹோமாகம நகரை மையமாக கொண்டு தம்ம ரஷ்மி பொசன் வலயம் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதில் பெருந்தொகையான மக்கள் கலந்துகொள்வரென எதிர்பார்க்கப்படுவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. இதனால் பொசன் வலயம் நடைபெறும் நாட்களில் மாலை 6:00 மணி முதல் அதிகாலை 1:00 மணி வரை அப்பகுதிகளில் வீதிகள் மூடப்படும். இங்கு வரும் பொதுமக்களின் வசதிக்காக, இப்பகுதியிலுள்ள வீதிகளில் ஒரு நிரல் வீதி மூடப்படுவதால் ஒரு வழி போக்குவரத்து மாத்திரம் இடம்பெறும்.

## சம்பூர் சூரிய மின் உற்பத்தி திட்ட...

அனுசரணையுடன் நடைமுறைப்படுத்தப்படும் வரும் யாழ் விமான நிலையம் மற்றும் கொழும்பு இரத்மலான விமான நிலையம் ஆகியவற்றின் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், இலங்கையில் டிஜிட்டல் மயமாக்கலின் முதற்படியாக, இலங்கைகான தனித்துவமான டிஜிட்டல் அடையாள அட்டைத் திட்டத்தை துரிதப்படுத்துவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

## 'உறுமய'வேலைத்திட்டத்தை விரைவுபடுத்த...

காணி உறுதிகளை பெற்றுக்கொடுக்க எதிர்பார்த்திருப்பதாக, ஜனாதிபதியின் மேலதிகச் செயலாளர் சந்திரா ஹேரத் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (20) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே ஜனாதிபதியின் மேலதிகச் செயலாளர் இதனைத் தெரிவித்தார். இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அவர், "உறுமய திட்டத்தின் கீழ் பெருமளவான காணி உறுதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த வேலைத்திட்டத்தை விரைவுபடுத்தும் நோக்கில் நடமாடும் சேவையொன்றையும் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்படி இம்மாதம் 26 30 திகதி வரையில் இந்த நடமாடும் சேவை நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதன்போது காணி உறுதிகளை மக்களுக்கு வழங்குதற்காக சகல அதிகாரிகளும் நடமாடும் சேவையில் பங்கெடுப்பர். உறுதியை பெற்றுக்கொள்ள வருவோர் அவர்களின் பழைய உறுதிகள் அல்லது அனுமதிப் பத்திரங்களை அதிகாரிகளிடத்தில் ஒப்படைப்பதை மாத்திரமே செய்ய வேண்டும். ஏனைய அனைவயில் பணிகள், பதிவுச் செயற்பாடுகள் என் பவற்றை அதிகாரிகள் முன்னெடுப்பர். இந்த சேவையுடன் பதிவாளர் திணைக்களம், அளவையியல் திணைக்களம், பிரதேச செயலகம், மாவட்டச் செயலக அதிகாரிகளும் கலந்துகொள்வர். இதற்காக சிறிதும் பணம் அறவிடப்படாது என்பதும் குறிப்பிடத்தக்கது. நீர்ப்பாசன அமைச்சின் செயலாளர் சமன் படிகோரல

இதுபற்றித் தெரிவித்ததாவது; இதுவரை மகாவலி வலயத்திற்குள் வசிக்கும் 280,000 அதிகமானோர் காணி அனுமதிப் பத்திரங்களை கொண்டுள்ளனர். மகாவலி வலயத்திற்குள் வசிப்போரின் காணிகளுக்கான நிரந்தர உறுதிகள், உறுமய திட்டத்தின் கீழ் வழங்கப்படும். தற்போதும் 60 ஆயிரம் பேருக்கான காணி உறுதிகளை வழங்குவதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

## எலிக்காய்ச்சல் தீவிரம்: ஐந்து...

இரத்தினக்கல் அகழ்வு போன்ற தொழில்களில் ஈடுபடும் ஆண்களை எலிக்காய்ச்சல் பீடிக்கிறது. ஆனால், பல ஆண்டுகளாக பெண்கள் எலிக்காய்ச்சலால் பாதிக்கப்படுவதை நாங்கள் அவதானித்துள்ளோம். இந்தக் காய்ச்சலால் கடந்த ஆண்டு 9,000 பேர் பாதிக்கப்பட்டிருந்தனர். இவாண்டு இதுவரை 5,000 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலும் இரத்தினபுரி, கேகாலை, காலி, களுத்துறை, மொனராகலை மற்றும் குருநாகல் போன்ற பிரதேசங்களைச் சேர்ந்தவர்களென அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

எலிக்காய்ச்சல் (Leptospirosis) என்பது ஒருவகை பக்டீரியாவின் மூலம் பரவுகிறது. எலிக்காய்ச்சலைப் பரப்பும் பக்டீரியா, பாதிக்கப்பட்ட எலியின் சிறுநீரகத்தில் வாழ்கிறது. எலியின் சிறுநீர், மலத்தில் இந்த பக்டீரியா வெளியேறும். எலியின் கழிவுகள் கலந்த தண்ணீர் அல்லது உணவை உட்கொள்ளும் போது எலிக்காய்ச்சல் ஏற்படும்.

எலியின் கழிவுகளை நாம் மிதித்துவிட்டால், நம் உடலில் உள்ள காயங்கள், சிராய்ப்புகள், உலர்ந்த பகுதிகள், வாய், மூக்கு, அந்தரங்கப் பகுதிகள் வழியாக பக்டீரியாக்கள் உடலுக்குள் சென்றுவிடும்.

கடுமையான மழையைத் தொடர்ந்து தொற்றுநோய்களின் அபாயம் அதிகரிக்கிறது .இது நீர் ஆதாரங்கள் மாசுபடுவதற்கான வாய்ப்பை அதிகரிக்கிறது. இந்த காய்ச்சல், தசை வலி, மஞ்சள் காமாலை, இருமல், மூச்சுத் திணறல் போன்ற அறிகுறிகளுடன் வெளிப்படுகிறது. கடுமையான சந்தர்ப்பங்களில், சிறுநீரகம், இதயம் அல்லது சுவாச செயலிழப்புக்கு வழிவகுக்கும். எலிக்காய்ச்சலுக்கு ஆரம்பத்திலேயே சிகிச்சை அளிக்க வேண்டும்.

பாதுகாப்பான சுகாதார வழிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும், அசுத்தமான தண்ணீருடன் தொடர்பை தவிர்த்தல்,முறையான சுழிவு முகாமைத்துவம் போன்றவற்றால் நோய் பரவலை தடுக்கலாம்.

அத்துடன், எலிக்காய்ச்சலை கட்டுப்படுத்த தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க விவசாயம், கால்நடை வளர்ப்பு மற்றும் இரத்தினக்கல் அகழ்வு போன்ற தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த முயற்சிகள் நடந்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## இன்றைய பலன்கள்

(21.06.2024)

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா (ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)





**மேஷம்:** குடும்பத்தில் ஒரு சில பிரச்சினைகள் தோன்றி மறையும். பழைய கடன் தொல்லைகள் தீரலாம். சுப நிகழ்ச்சிகள் தள்ளிப் போகும்.



**ரிஷபம் :** பிள்ளைகளின் திருமண பேச்சுக்கள் முடிவாகும். பெண்களின் பெரு முயற்சியால் குடும்ப ஒற்றுமை மேலோங்கும்.



**மிதுனம்:** குடும்பத்தில் சிறுசிறு பிரச்சனைகளைச் அதன் பின் நல்ல முடிவு எடுப்பீர்கள். பிள்ளைகளின் திருமணத்தை நடத்துவதில் கவனம் செலுத்துவீர்கள்.




**கடகம்:** வியாபாரத்தில் புதுமையை புகுத்த முயற்சிப் பீர்கள். கூட்டு தொழில் வியாபாரம் நன்கு நடைபெற்று லாபம் அதிகரிக்கும்.



**சிம்மம்:** அலைச்சலும் முயற்சியும் அதிகரிக்கும். குடும்பத்தில் அவ்வப்போது சிறு சிறு பிரச்சினைகள் ஏற்பட்டாலும் அவற்றை சாமர்த்தியமாக சமாளித்து விடுவீர்கள்.




**கன்னி:** இல்லத்தில் நல்ல சம்பவங்கள் நடைபெறும். பெண்களின் திருமணம் முயற்சி வெற்றி அடையும். கலைஞர்களில் சிலருக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கலாம்.




**துலாம்:** சுபகாரிய முயற்சி சிறிய தடைக்கு பின் நடைபெறலாம். கலைஞர்கள் புதிய வாய்ப்புகளை பெறுவார்கள். ஆனால் எதிர்பார்க்கும் வருமானம் இருக்காது.



**விருச்சிகம்:** பணியாளர்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பீர்கள். குடும்பத்தில் விரிசல் ஏற்படாமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள்.




**தனுசு:** குடும்பத்தில் சிறுசிறு பிரச்சினைகள் தோன்றினாலும் பெரிய பாதிப்பு ஏற்படாது. இல்லத்தில் சுப காரியங்கள் நடைபெறுவதற்கான முயற்சி செய்வீர்கள்.



**மகரம்:** இல்லத்தில் சிறு மங்கல நிகழ்ச்சி நடைபெறலாம். பெண்கள் சேமிப்பை நல்ல வழியில் செலவழிப்பீர்கள். கலை துறையினர் புதிய வாய்ப்புகள் பெற்று மகிழ்ச்சி அடைவர்.



**கும்பம்:** கலைஞர்களின் திறமையை பாராட்டி விருது பாராட்டுக்கள் கிடைக்கலாம். எதிர்பாராத வகையில் செலவுகள் அதிகரிக்க கூடும்.



**மீனம்:** கூட்டுத் தொழில் வியாபாரம் சுமாராக இருந்தாலும் லாபம் குறையாது. குடும்பத்தில் சுப காரியம் நடைபெற முயற்சிகளை மேற்கொள்வீர்கள்.

## மூன்று ஜனாதிபதி... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

இந்த தேர்தல் முறைமை 2017 ஆம் ஆண்டு மாற்றப்பட்டு தொகுதி நிர்ணய சபை அமைக்கப் பட்டு ஒரு அறிக்கையையும் வெளியிடப்பட்டது. பாராளுமன்றத்தில் 2019இல், இவ்வறிக்கை கொண்டுவரப்பட்ட போது முழுமையாக நிராகரிக்கப்பட்டது. இதனால்தான் இதுவரை மாகாண சபைகளுக்கான தேர்தல் நடைபெறாமல் உள்ளது.

இதில் வேடிக்கை என்னவென்றால் அந்த தொகுதி நிர்ணய அறிக்கையை சபையில் சமர்ப்பித்த அமைச்சரே, இதற்கு எதிராக வாக்களித்தார். அதன் பின்னர் சுமந்திரன் எம்பி பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்து 2017 ஆம் ஆண்டு திருத்தத்தை நீக்கி விட்டு தேர்தலை நடத்த முடியும் என்ன கேட்டுக் கொண்டார். அதனை உயர் நீதிமன்றம் கூட சிறு திருத்தத்துடன் ஏற்றுக்கொண்டுள்ளது.

இப்போது பிரதமராக பதவி வகிக்கும் அப்போதைய மாகாண சபைகள் அமைச்சர் தினேஷ் குணவர்தன, தலைமை வகித்த ஒரு தெரிவுக்குழுவும் அப்போது அதனை ஏற்றிருந்தது. இப்போது இதற்கான சிறந்த சந்தர்ப்பம் காணப்படுகிறது.

தமிழ் மக்களுக்கு அதிகாரப்பரவலாக்கத்தை வழங்குவ தன்மூலமேதான், நாட்டில் பொருளாதார வளர்ச்சியை எட்ட முடியும்.

எனவே சுமந்திரனின் பிரேரணையை விவாதித்து நிறைவேற்றுவதன் மூலம் தமிழ் மக்களுக்கு ஒரு நம்பிக்கையை கொடுக்க முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கண்டி – யாழ்ப்பாணம்... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பேரூந்தி ஒன்றின் பின்புறத்தில் மோதி கவிழ்ந்ததில் இவ்விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர். விபத்தின் போது லொறியின் சாரதியும் உதவியாளரும் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். யாழ்ப்பாணம் பிரதேசத்தைச் சேர்ந்த இருவரே இவ்வாறு காயமடைந்துள்ளனர். லொறியின் சாரதிக்கு நித்திரை ஏற்பட்டதால், விபத்து நிகழ்ந்திருக்கலாமென பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

## வேதாந்தியின் சிறுகதைகள்... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

இவ்விழா, சர்ஜூன் ஜமால்தீன் தலைமையில் இடம்பெறுகிறது. நூல் விமர்சன உரையை தென்கிழக்கு பல்கலைக்கழக மொழித்துறை சிரேஷ்ட பேராசிரியர் றமீஸ்அப்துல்லாஹ், நூலுரையை சட்டத்தரணி ஏ.எம்.தாஜ் மற்றும் நோக்குரையை பன்னூலாசிரியர் ரமீஷீன் ஜமால் ஆகியோரும் நிகழ்த்துகின்றனர்.

## இலங்கை – இந்தியா... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

காங்கிரஸின் பிரதிநிதிகளுக்கும் டையிலான சந்திப்பு இந்திய இல்லத்தில் நேற்று (20) நடைபெற்றது. இ.தொ.காவின் தலைவரும், கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான், இ.தொ.காவின் பொதுச்செயலாளரும், நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான், இ.தொ.காவின் தவிசாளர் மருதபாண்டி ராமேஷ்வரன் எம். பி. ஆகியோர் இச்சந்திப்பில் பங்கேற்றனர்.

பாரத பிரதமர் மோடி தலைமையிலான அமைச்சரவையில் மீண்டும் வெளிவிவகார அமைச்சராக பதவியேற்றுள்ள ஜெய்சங்கருக்கு இ.தொ. கா பிரதிநிதிகள் வாழ்த்துகள் தெரிவித்தனர். பிரதமர் மோடிக்கும் வாழ்த்துகளை மீண்டும் கூறினர். அதேபோல இலங்கை இந்திய உறவு வலுவாக இருப்பதாகவும் அதனை மேலும் பலப்படுத்துவதற்கு இ.தொ.கா உறவுபாலமாக செயற்படும் எனவும் இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் இ.தொ.கா பிரதிநிதிகள் கூறியுள்ளனர்.

இந்திய வீட்டு திட்டம், மலையகத்துக்கான ஆசிரிய உதவியாளர் சுற்றுலா உட்பட மேலும் பல விடயங்கள் தொடர்பிலும் இதன்போது பேசப்பட்டுள்ளன.

அதேவேளை மலையக மக்களுக்காக இந்தியாவால் முன்னெடுக்கப்பட்டுள்ள திட்டங்களை நினைவுகூர்ந்த வெளிவிவகார அமைச்சர், எதிர்காலத்திலும் உதவிகள் தொடரும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## தனியார் பல்கலை மாணவர்களுக்கு...

தெரிவித்தார். தனியார் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களுக்கு வழங்கப்படும் வங்கிக் கடன்கள், தாமதத்திற்கு உள்ளாகியுள்ளமை தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சபையில் கேள்வி எழுப்பினார். இதற்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்.

வருடந்தோறும் இவ்வாறு 4000 தனியார் பல்கலைக்கழக மாணவர்களுக்கு வங்கிக் கடன் பெற்றுக்கொடுக்கப்படுகிறது. தொடர்ந்து இந்த கடன் வழங்கப்பட்டு வரும் நிலையில், ஏழாவது மாணவர் குழுவுக்கு கடன் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. எட்டாவது மாணவர் குழுவுக்கு இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி ஆகியன கடனை வழங்குகின்றன. மத்திய வங்கியில் எந்த பிரச்சினையும் கிடையாது. எனினும் இலங்கை வங்கி அதனை தாமதப்படுத்தி வருகிறது. கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னர், தனிப்பட்ட ரீதியிலும் அந்த வங்கியின் முகாமையாளருடன் கலந்துரையாடினேன். வங்கியின் புதிய தலைவருடனும் கலந்துரையாடியுள்ளேன்.

நாட்டிலுள்ள பிரதான அரச வங்கிகள் இவை. நானும் கூட கடந்த காலங்களில் அந்த வங்கியில் பணியாற்றியுள்ளேன். இலங்கை வங்கியின் தாமதமே மாணவர்களுக்கு கடன் கிடைப்பதில் தாமதத்தை ஏற்படுத்தி உள்ளது.

இந்த மாணவர்களுக்கு கடன் பெற்றுக் கொடுப்பது அரசாங்கத்தின் கொள்கையாகும்.அந்த வகையில் அமைச்சர் என்ற வகையில் நான் இதில் தலையிடவும் தேவையில்லை. அதிகாரிகளே இதனை மேற்கொள்ள முடியும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இதன் போது குறிப்பிட்ட வேலுசாமி இராதாகிருஷ்ணன் எம்பி, மேற்படி கடனை பெற்றுக் கொள்ள மாணவர்கள் செல்லும்போது வங்கிகளில் கடுமையான நிபந்தனைகளை பிரயோகிக்கப்படுவதாக குறிப்பிட்டார். இதனால் பெரும்பாலான மாணவர்களுக்கு அந்த கடனை பெற்றுக் கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது. அமைச்சர் இது தொடர்பில் கவனம் செலுத்தி அந்த நிபந்தனைகளை தளர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார். இதற்கு பதிலளித்த அமைச்சர், முதலாம் இரண்டாம் மாணவர் குழுக்களுக்கு இவ்வாறு வழங்கப்பட்ட கடனை அந்த மாணவர்கள் முறையாக திருப்பிச் செலுத்தாததும் இதற்கான காரணம் என்று குறிப்பிட்டார்.

## இலங்கையின் கடன்பேண்...

கேள்விக்கு பதிலளிக்கையிலேயே, அவர் இதனை தெரிவித்துள்ளார். இது பற்றி அவர் தெரிவித்ததாவது:

சீனா தன்னால் முடிந்தளவிற்கு இலங்கையின் சமூகபொருளாதார அபிவிருத்திக்கு உதவுமென அவர் குறிப்பிட்டார்.




# பல்லேகலையில் 378 பேருக்கு ஆசிரியர் நியமனம் வழங்கல்

**அக்குறணை குறூப் நிருபர்**



மத்திய மாகாணத்திலுள்ள ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு போட்டி பரீட்சை நடத்தப்பட்டது.

இந்த போட்டி பரீட்சையின் அடிப்படையில் புதிதாக ஆசிரியர் நியமனம் நேற்று முன்தினம் புதன்கிழமை வழங்கப்பட்டன.

கட்டம் கட்டமாக வழங்கப்பட்டு வரும் இந்நியமனங்களில் இம்முறை மூவினங்களையும் சேர்ந்த மொத்தமாக 378 பேர் ஆசிரியர் நியமனம் பெற்றுக் கொண்டனர். பல்லேகலையில் அமைந்துள்ள மத்திய மாகாண சபை கேட்போர் கூடத்தில் மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ.கமகே தலைமையில் ஆசிரியர் நியமனம் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

கண்டி, மாத்தளை, நுவரெலியா மாவட்டங்களுக்கு ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் மற்றும் அழகியல் கலைகள் முதலான பாடங்களின் அடிப்படையில் இந்நியமனம் வழங்கப்பட்டது.

# குளவி கொட்டியதில் 8 தொழிலாளர் பாதிப்பு

**பொகவந்தலாவ நிருபர்**

பொகவந்தலாவை கெர்க்கஸ்வோல்ட் மேல்பிரிவு தோட்ட இரண்டாம் இலக்க தேயிலை மலையில் நேற்று வியாழக்கிழமை காலை 8 பேர் குளவிக் கொட்டுக்கு இலக்காகினர்.

தேயிலை கொழுந்து பறித்துக் கொண்டிருந்த பெண் தொழிலாளர்களே குளவிக் கொட்டுக்கு இலக்கானதாக, பொகவந்தலாவை பொலிஸார் தெரிவித்தனர்.

மரமொன்றிலிருந்த குளவிக் கூட்டை பருந்து வந்து கொத்தியமையால் அக்கூட்டிலிருந்த குளவிகள் கலைந்து வந்து இப்பெண் தொழிலாளர்களை கொட்டியுள்ளது.

இந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்ட பெண் தொழிலாளர்கள், பொகவந்தலாவை மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

# பொசன் பௌர்ணமி தின நிகழ்வுகள்

**மாத்தளை சுழற்சி நிருபர்**

லக்கல பல்லேகம பிரதேச செயலாளர் பிரிவில் பொசன் பௌர்ணமி தின நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை 21ஆம் திகதி முதல் நாளை சனிக்கிழமை 22ஆம் திகதிவரை நடைபெறும்.

இதற்கான நிகழ்வுகள் கலுகங்க நுவரகட சந்தியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

பொசன் பௌர்ணமி தினத்தையிட்டு தான சாலைகள், வெளிச்சக்கூடு போட்டி, மிகிந்து பெரஹரா, தர்ம போதனை உட்பட பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை லக்கல பிரதேச மாணிக்க கல் சங்கத்தின் பிரதிநிதிகள், பிரதேச சபை, பொலிஸார், கிராம சேவை அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
புதன் 2024.06.19
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 5509 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.32,911,376.00
ஆங்கில எழுத்து F — வெற்றி இலக்கங்கள் 1 7 6 8 2 5

**அத சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 084 — ஆங்கில எழுத்து F — வெற்றி இலக்கங்கள் 6 8 2 5

**கொவிசெத** — சீட்டிழுப்பு இலக்கம் 3751 — சீட்டிழுப்பு திகதி 2024.06.19 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.62,054,306.36
ஆங்கில எழுத்து W — வெற்றி இலக்கங்கள் 18 23 25 69 — விசேட எழுத்து W — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 94421

**Mega POWER** — சீட்டிழுப்பு இலக்கம் 1857 — 2024.06.19 — 65128 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.436,378,134.00
ஆங்கில எழுத்து J — சுப்பர் இலக்கம் 16 — வெற்றி இலக்கங்கள் 01 23 30 77
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**VIP** — திகதி 2024.06.19 — சீட்டிழுப்பு இலக்கம் 0335
ஆங்கில எழுத்து V — வெற்றி இலக்கங்கள் 6 6 4 0 6 6 — L7 எழுத்து V
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.. 31,568,863.28

**ராசி சுப பலன்** — திகதி 2024.06.19 — சீட்டிழுப்பு இலக்கம் 818 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,244,884.64
வெற்றி இலக்கினம் மேஷம் — வெற்றி இலக்கங்கள் 11 32 36 55 — தனயோக இலக்கம் 20371 — நாளுக்கான விதி எண் 09

**தன நிதானய** — சீட்டிழுப்பு இலக்கம் 1539 — 2024.06.19 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 97,221,300.56
ஆங்கில எழுத்து Z — வெற்றி இலக்கங்கள் 13 53 65 72 — விசேட எழுத்து Z — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 66532

# 03Kg கஞ்சாவுடன் ஒருவர் கைது

**ஊவா சுழற்சி நிருபர்**



தனமல்வில கித்துல்கொடே சந்தை சதுக்க பகுதியில் அமைந்துள்ள கடையொன்றிலிருந்து மூன்று கிலோ ஐநூறு கிராம் நிறை கொண்ட உலர் கஞ்சா பொதிகளை நேற்று முன்தினம் புதன்கிழமை பொலிஸார் மீட்டுள்ளதுடன், சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

கித்துல்கொடேயைச் சேர்ந்த 64 வயதான வர்த்தகர் ஒருவரையே கைது செய்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

யுக்திய விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கை திட்டத்தின் கீழ் தனமல்வில தலைமையக பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவினர், தனமல்வில பிரதேசத்தில் விசேட சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதன்போதே கஞ்சா பொதிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்த சம்பவம் தொடர்பாக சந்தேக நபரிடம் பொலிஸார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# இருபது வீடுகள் கொண்ட குடியிருப்பில் தீ விபத்து

அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிலாஸ்கோ தோட்டப் பிரிவான நெதஸ்டல் தோட்டத்தில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை திடீர் தீ விபத்து ஏற்பட்டது. இருபது வீடுகள் கொண்ட தொடர் குடியிருப்பு தொகுதியிலேயே தீ விபத்து ஏற்பட்டதுடன், இதன்போது வீடொன்று முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

தீ விபத்தால் பாதிக்கப்பட்ட இந்த வீட்டில் வசித்து வந்த குழந்தை பெற்று சில நாட்களான தாய் உட்பட ஐவர் நிர்க்கதிக்கு ஆளாகியுள்ளனர். இவர்களை தோட்டத்திலுள்ள உறவினர் வீட்டில் தற்காலிகமாக தங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்த தீ பிடிப்பு சம்பவத்தை கண்ட அயலவர்கள் மற்றும் தோட்ட பொது மக்களும், ஏனைய வீடுகளுக்கு தீ பரவாமல் தடுக்கும் நடவடிக்கையில் உடனடியாக ஈடுபட்டதால் பாரிய பாதிப்பு தவிர்க்கப்பட்டுள்ளது. இந்த தீ விபத்துக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில் இது தொடர்பான விசாரணையை அக்கரப்பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



**(ஆ.ரமேஸ்)**

# கிறேட்வெஸ்டன் பாடசாலைக்கு புதிய தொண்டர் ஆசிரியர்

**தலவாக்கலை குறூப் நிருபர்**

அமெரிக்கா பீஸ்கோப் நிறுவனத்தினூடாக தலவாக்கலை கிறேட்வெஸ்டன் பாடசாலைக்கு அமெரிக்காவிலிருந்து ஆங்கில தொண்டர் ஆசிரியர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேற்படி பாடசாலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை விசேட கலந்துரையாடல் நடைபெற்றது. இந்த கலந்துரையாடலில் மேற்படி பாடசாலை அதிபர் எம். ஐ.எம்.பாரிஸ், நுவரெலியா கல்வி வலயத்தின் ஆங்கில கல்வி உதவி கல்விப் பணிப்பாளர் சாந்தகுமார், அமெரிக்கா பீஸ்கோப் நிறுவனத்தின் நிகழ்ச்சி திட்ட முகாமையாளர் சாமிலி விஜேரட்ண, பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோராகிய பலரும் கலந்து கொண்டனர்.







කෘෂිකර්ම අමාත්‍යාංශය
கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture




කෘෂිකර්ම අංශය / விவசாயப் பிரிவு / Agriculture Division

**Democratic Socialist Republic of Sri Lanka**
**Ministry of Agriculture**

## Agriculture Sector Modernization Project

**IDA Credit No: 5873 LK**

## PROCUREMENT NOTICE

### Rehabilitation of Existing Building as the Mango Cluster Processing Center in Vavuniya District, Northern Province

**LK-MOA-PMU-365172-CW-RFB**

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received a Credit from the International Development Association (IDA) in various currencies equivalent to US$ 58.630 Million towards the cost of the Agriculture Sector Modernization Project of the Ministry of Agriculture, and it intends to apply portion of the proceeds of this credit to eligible payments under the Contract for the following works as described in the table below.
2. Chairman, Provincial Project Procurement Committee on behalf of the ASM Project, Ministry of Agriculture, now invites sealed bids from eligible and qualified bidders for the following works as described in the table below.

| Contract No. | Description of Works | Estimated Cost Excluding VAT Rs. (Mn) | Contract Period | Required Grade | Bid Security Amount Rs. | Bid Security Validity | Non-Refundable Cash Deposit Rs. |
|---|---|---|---|---|---|---|---|
| LK-MOA-PMU-365172-CW-RFB | Rehabilitation of Existing building as the mango cluster processing center in Vavuniya District, Northern Province | 27.2 | 3 months | C5 or Above Buildings | 408,000.00 | 18th October 2024 | 5,000.00 |

3. Bidders are allowed to quote for the above work with Bid Security and Bid validity date as mentioned in the Bid document. One bidder is allowed to quote only one bid for each contract. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the field of respective construction for the grade mentioned in the table above with the Construction Industry Development Authority (CIDA)
4. Bidding will be conducted through the National Competitive Bidding (NCB) procedure approved by the World Bank.
5. Qualification requirements are indicated in Section 4 of the Bidding document. Additional details are provided in the Schedule (Section 5) of the bidding document.
6. Interested eligible Bidders may obtain further information from Provincial Deputy Project Director, Agriculture Sector Modernization Project, 286, Nawalar Road, Jaffna, Northern Province (T.P: 021 221 6358) and inspect the bidding documents at the same place on any working day **from 20th June 2024 to 04th July 2024 from 9:00 hrs to 14:30 hrs.**
7. Pre-Bid meeting will be held on **01st July 2024** at 10.00 am at PPMU, Northern Province. There will be a site visit to the proposed project site, after the pre-bid meeting.
8. Bid shall be valid up to **19th September 2024.**
9. Bid shall be accompanied by a Bid security as per the information given in the Table.
10. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written application to the Provincial Deputy Project Director Northern Province, Agriculture Sector Modernization Project, No: 286, Nawalar Road, Jaffna, Sri Lanka from **20th June 2024 to 04th July 2024** from 9:00 hrs to 14:30 hrs upon payment of a non-refundable fee as mentioned in the above Table, within the below mentioned period.
The method of payment should be by cash.
11. Closing date of the bid is **04th July 2024, 14.30 hrs.**
12. Bids must be delivered to the Provincial Deputy Project Director, Northern Province, Agriculture Sector Modernization Project No: 286, Nawalar Road, Jaffna, Sri Lanka at or before 14:30 hrs on the bid closing date as mentioned above.
13. Electronic bidding will not be permitted. Late bids will not be accepted. Bids will be opened immediately after bid closing, in the presence of the bidders' representatives who choose to attend in person at the above-mentioned address.
14. Complete bids should be separately forwarded in two copies as the original and the duplicate. The original and the duplicate should be enclosed separately and marked as the 'original' and 'duplicate' respectively in sealed envelopes. Both envelopes enclosed in a sealed single envelope and marked contract number and name of the contract on top left-hand corner of the envelope.

**Chairman,**
**Project Procurement Committee,**
**Provincial Deputy Project Director,**
**Northern Province,**
**Agriculture Sector Modernization Project,**
**No: 286, Nawalar Road,**
**Jaffna, Sri Lanka.**
20th June 2024.


# கதிர்வேலாயுத சுவாமி ஆலய மண்டலாபிஷேகம்

**லுணுகல நிருபர்**



பசறை கிக்கிரிவத்தை அருள்மிகு ஸ்ரீகதிர்வேலாயுத சுவாமி ஆலய கும்பாபிஷேக பெருவிழாவையிட்டு நடைபெற்று வரும் மண்டலாபிஷேகமும் ஆனி மாத வளர்பிறை பிரதோஷத்தையிட்டு சத்ருசம்ஹார ஹோமமும் மிகவும் பக்திபூர்வமாக நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.

சித்தர்களின் குரல் அமைப்பின் நிறைவான ஆசியுடன் நடைபெற்ற சத்ருசம்ஹார ஹோமத்தில் சித்தர்கள் குரல் அமைப்பின் ஆலோசகர் ஸ்ரீலஸ்ரீ சிவசங்கர் குருஜீ, சிவயோகி மகேஸ்வரன், குரல் அமைப்பின் தலைவர் ஆதித்தன், துணைத் தலைவர் மனோகரன், கஸ்தூரன் கிக்கிரிவத்தை ஸ்ரீகதிர்வேலாயுத சுவாமி ஆலய அறங்காவலர் சபையினர், மெய்யடியார்கள் ஆகியோர் கலந்து கொண்டு அருள் பெற்றனர்.

# பொலிஸாரின் நடவடிக்கையால் குற்றச்செயல்கள் குறைவு

**மத்திய மாகாண ஆளுநர்**

**அக்குறணை குறூப் நிருபர்**

சரியான நேரத்தில் பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக போதைப்பொருள் பாவனை உள்ளிட்ட குற்றச்செயல்கள் குறைவடைந்துள்ளதாக, மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ.கமகே தெரிவித்தார். இது தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொண்ட பொலிஸார் பாராட்டப்பட வேண்டியவர்களெனவும், பொலிஸார் கூறினர். மாத்தளை பேனார்ட் அலுவிகாரை மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற 84ஆவது பொலிஸ் நினைவுதினம் தொடர்பான விளையாட்டுப் போட்டி பரிசளிப்பு வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

# நுவரெலியாவில் யோகா நல்லிணக்க நிகழ்ச்சி

**தலவாக்கலை குறூப் நிருபர்**



சர்வதேச யோகா தினத்தையிட்டு நுவரெலியா சினிசிட்டா உள்ளக அரங்கில் யோகா நல்லிணக்க விசேட நிகழ்ச்சி நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.

சுவாமி விவேகானந்தா கலாசார நிலையம், இந்திய உயர்ஸ்தானிகர் காரியாலயம், ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயம், வெலியா ஸ்ரீசீதையம்மன் ஆலயம், நுவரெலியா மாநகர சபை, பிரம்மகுமாரிகள் யோகா நிலையம் மற்றும் சிவா விஷ்ணு யோகா பீடம் ஆகிவற்றின் ஏற்பாட்டில் இந்த யோகா நல்லிணக்க நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் நுவரெலியா வலய கல்விப் பணிப்பாளர் சுனித்தா பீமேகெதர, ஆங்கில கல்வி உதவிப் பணிப்பாளர் சாந்தகுமார், முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர்களான இராஜாராம், சிவஞானம் மற்றும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# நயினாதீவு நாகபூசணி அம்மன் தேர்த்திருவிழா





(யாழ்.விசேட நிருபர்)

வரலாற்று சிறப்பு மிக்க நயினாதீவு நாக பூசணி அம்மன் ஆலய வருடாந்திர மகோற்சவ தேர்த்திருவிழா நேற்றைய தினம் வியாழக்கிழமை காலை இடம்பெற்றது.

கடந்த 07ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான மகோற்சவ திருவிழாக்கள் தொடர்ந்து 14 நாட்கள் நடைபெற்று, நேற்றைய தினம் தேர்த்திருவிழா இடம்பெற்றது. நாடெங்கிலுமிருந்து பெருந்திரளான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

இன்றைய தினம் வெள்ளிக்கிழமை தீர்த்த திருவிழா இடம்பெற்று, மாலை கொடியிறக்கத்துடன் மகோற்சவ திருவிழாக்கள் நிறைவுபெறும்.

ஆலயத்திற்கு செல்லும் பக்தர்களின் நலன் கருதி இம்முறையும் யாழ்ப்பாணம் குறிகாட்டுவான் இடையில் விசேட பேருந்து சேவைகளும், குறிகாட்டுவான் நயினாதீவு இடையில் விசேட படகு சேவைகளும் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளன.

அத்துடன் அமுதசுரபி அன்னதான மடத்தில் பக்கதர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுவதுடன், ஆலய சூழல்களில் பக்தர்களின் நலன் கருதி சாரணர்கள், சென் ஜோன் அம்புலன்ஸ், சென்சிலுவை சங்கம் மக்கள் நலன்புரி சங்கம் உள்ளிட்டவற்றின் தொண்டர்களும் சேவைகளில் ஈடுபட்டிருந்தனர்.

## ஊடகவியலாளர் வீட்டின் மீது தாக்குதல்; கைதான மூவரும் பிணையில் விடுதலை

(யாழ்.விசேட நிருபர்)

யாழ்ப்பாணத்தின் அச்சுவேலி, பத்தமேனி காளி கோவில் பகுதியில் உள்ள ஊடகவியலாளர் தம்பித்துரை பிரதீபனின் வீட்டின் மீது தாக்குதல் மேற்கொண்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மூவரையும் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்த நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை அச்சுவேலி, மாவிட்டபுரம் மற்றும் கிளிநொச்சி ஆகிய பகுதிகளை சேர்ந்த மூன்று இளைஞர்களை கைதுசெய்து, அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து தீவிர விசாரணைகளை முன்னெடுத்த பின்னர், நேற்றுமுன்தினம் புதன்கிழமை மல்லாகம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தி இருந்தனர்.

நீதிமன்றில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளை தொடர்ந்து, சந்தேகநபர்கள் மூவரையும் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

அதேவேளை ஊடகவியலாளர் வீட்டில் வைத்து தீ மூட்டப்பட்ட மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி என்பவற்றையும் பொலிஸார் மன்றில் பாரப்படுத்தியதை அடுத்து, அவற்றை உரிமையாளர்களிடம் ஒப்படைக்க மன்று அனுமதித்துள்ளது.

## சிறப்பு சொற்பொழிவு

(கோப்பாய் குறூப் நிருபர்)

யாழ்.நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தான சண்முக விலாச மண்டபத்தில் சுக்கிரவார சிறப்பு சொற்பொழிவு சிவநெறி பிரகாசர் கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெற்று வருகிறது.

இதில், இன்று வெள்ளிக்கிழமை (21) மாலை 5.00 மணிக்கு ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாத குருக்களின் ஆசியுரையைத் தொடர்ந்து தலைமையுரையை பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதன் ஆற்றுவார்.

இதைத் தொடர்ந்து சிறப்பு சொற்பொழிவை சைவப்புலவர் சி. கா. கமலநாதன் "சீகர மூர்த்தியான கந்தன்" என்னும் தலைப்பில் ஆற்றுவார்.

## யாழ். விவசாயிகளுக்கு வாயு துப்பாக்கி

(யாழ். விசேட நிருபர்)

யாழ்ப்பாண விவசாயிகளுக்கு துப்பாக்கிகளை வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

குரங்குகளால் விவசாய பயிர்கள் அழிவடைவதால், குரங்குகளை கட்டுப்படுத்த வாயு துப்பாக்கிகளை வழங்குமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்த நிலையில் முதல் கட்டமாக 48 வாயு துப்பாக்கிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# வடக்கின் உதயம்

## யாழில் சிறுவன் உயிரிழப்பு

(யாழ். விசேட நிருபர்)

யாழ்ப்பாணத்தில் உழவு இயந்திரத்துடன், மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில், சிறுவன் உயிரிழந்துள்ளான்.

நீர்வேலி பகுதியை சேர்ந்த வேதரன் கலைப்பிரியன் (வயது 16) எனும் சிறுவனே உயிரிழந்துள்ளான். மோட்டார் சைக்கிள் ஓட்டி வந்த சிறுவன் உழவு இயந்திரத்துடன் மோதியதில், சிறுவன் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளான்

## முல்லைத்தீவு மாவட்டத்தில் காட்டு விலங்குகள் தொடர்பான எச்சரிக்கை பதாகை தேவை





(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் பல்வேறு முதன்மை வீதிகள் காடுகளுக்கு ஊடாகவே காணப்படுகின்றது. இவ்வாறு காடுகள் சூழ்ந்த பிரதேசத்தில் காட்டு விலங்களின் நடமாட்டத்தினை காணக்கூடியதாக இருக்கின்றது.

குறிப்பாக பயணிகளுக்கு ஆபத்தினை ஏற்படுத்தும் காட்டுயானைகள் வீதிகளின் குறுக்கே செல்கின்ற அவைகள் செல்லும் பாதைகளை இனம் கண்டு அவற்றை வீதியில் அடையாளப்படுத்த வேண்டிய தேவை சம்மந்தப்பட்ட திணைக்களத்திற்கு உண்டு.

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு புதிதாக வரும் பயணிகள் குறிப்பாக மாங்குளம் தொடக்கம் கொக்காவில் வரையான ஏ9 வீதி மற்றும் மாங்குளம் தொடக்கம் ஒட்டிசுட்டான் வீதி, ஒட்டுசுட்டான் – முள்ளியவளை வீதி, முள்ளிவளை களிக்காடு ஊடாக நெடுங்கேணி வீதி, நெடுங்கேணி ஊடாக ஒட்டுசுட்டான் வீதிகளில் காட்டுயானைகள் இரவு நேரங்களிலும் பகல் நேரங்களிலும் வீதியினை கடந்து செல்வதை காணக்கூடியதாக இருக்கின்றது.

சில இடங்களில் வீதிகளில் நின்று சண்டைபிடிப்பதனையும் அவதானிக்கமுடிந்துள்ளது இவ்வாறு ஒட்டுசுட்டான் மாங்குளம் வீதியில் ஒரு பகுதியில் மாத்திரம் இங்குள்ள பிரதேசங்களில் வனவிலங்குகள் பாதையினை கடந்து செல்வதால் அவதானமாக வாகனங்களை செலுத்துங்கள் என மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் அறிவித்தல் பதாகை ஒன்ற நாட்டப்பட்டுள்ளது. இந்த இடத்தில் இதனை பார்ப்பவர்களுக்கு மாத்திரம்தான் தெரிகின்றது இது காட்டு யானை பிரதேசம் என்று (யானையின் படத்தினையும் பதாகையில் போட்டுள்ளார்கள்)

இவ்வாறு ஏனைய பகுதிகளான மேற்குறிப்பிட்ட வீதிகளிலும் இந்த அறிவித்தல் பதாகையினை சம்மந்தப்பட்ட திணைக்களத்தினர் நாட்டி வைக்க வேண்டும், குறிப்பாக யானை, புலி, கரடி உள்ளிட்ட காட்டுமிருகங்கள் வாழும் முல்லைத்தீவு மாவட்டத்தின் அடர்ந்த காட்டுப்பகுதிகள் ஊடாக பயணிக்கும் பயணிகள் இவ்வாறான பதாகைகளை இனம் கண்டு குறித்த பகுதியி ஊடாக அவதானமாக பயணிக்க முடியும் என்பது பயணிகளின் எதிர்பார்ப்பாகும்.

## நெடுந்தீவில் இளைஞன் படுகொலை

(யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாணம் நெடுந்தீவு ஏழாம் வட்டார பகுதியில் இளைஞர் ஒருவர் கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார். நெடுந்தீவு 07 வட்டாரத்தைச் சமக்கீன் தேவராஜ் அருள்ராஜ் என்ற 23 வயதானவரே கொலை செய்யப்பட்டார்.

இருவருக்கிடையே காணப்பட்ட முற்பகை காரணமாக நேற்றைய தினம் புதன்கிழமை இரவு மது போதையில் வாய்தர்க்கம் இடம் பெற்றதாகவும் அதன் பின்னர் குறித்த கொலை இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக நெடுந்தீவு வைத்தியசாலையில், ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் என சந்தேகிக்கப்படும் சந்தேக நபர்கள் இருவர் தலைமறைவாகியுள்ளதாகவும் அவர்களை கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொலைச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நெடுந்தீவு பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சுழிபுரத்தில் சாதனை மாணவர்கள் கௌரவிப்பு



(சாவகச்சேரி விசேட நிருபர்)

உயர்தரத்தில் சித்தியெய்திய, பல்கலைக்கழக பட்டத்தை நிறைவு செய்த மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு கடந்த (16/06) ஞாயிற்றுக்கிழமை சுழிபுரம் மேற்கு கலைமகள் இலவசக்கல்வி நிலையத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், அண்மையில் வெளியான க.பொ.த உயர்தர பெறுபேறுகளில் 3 ஏ சித்திகளை பெற்ற ஞானேஸ்வரன் கிந்துஷா, இக்கல்வி நிலையத்தின் பழைய மாணவர்களான அண்மையில் யாழ் பல்கலைக்கழகத்தில், கணக்கியலில் சிறப்பு வணிக நிர்வாகமானி பட்டத்தினை பெற்ற சித்திரசேனன் றாகவன், கலாசார சுற்றுலா துறையில் சிறப்பு பட்டத்தினை பெற்ற இராசரத்தினம் தர்ஷன் ஆகியோர் கௌரவிக்கப்பட்னர்.

சுழிபுரம் மேற்கு கலைமகள் இலவசக்கல்வி நிலையமும் சுழிபுரம் மேற்கு கலைமகள் இலவசக்கல்விப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் இணைந்து ஏற்பாடுசெய்திருந்த இந்நிகழ்வு ஓய்வு நிலை அதிபர் ச.இராமலிங்கம் தலைமையில் இடம்பெற்றது. கல்வி நிலைய மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சங்கானை பிரதேச செயலாளர் கவிதா உதயகுமாரும், கௌரவ விருந்தினர்களாக தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பரா. நந்தகுமார், சங்கானை அ.மி.த.க பாடசாலை முன்னாள் அதிபர் ம.முகுந்தன், கல்வி நிலைய புலம்பெயர் ஒருங்கிணைப்பாளர் த. தேவகுமார், புலம்பெயர் தேச நலன்விரும்பி பு. கமலதாஸ், சுழிபுரம் மேற்கு சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், மாணவர்கள், ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் என பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

## சட்டவிரோத மதுபான உற்பத்தியில் ஈடுபட்ட குற்றத்தில் ஒருவர் கைது

(யாழ்.விசேட நிருபர்)



யாழ்ப்பாணத்தில் சட்டவிரோத மதுபான உற்பத்தியில் ஈடுபட்ட நபர் ஒருவர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

சுன்னாகம் பகுதியில் உள்ள வீடொன்றில் சட்டவிரோத மதுபான உற்பத்தி இடம்பெறுவதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், குறித்த வீட்டை பொலிஸார் சுற்றி வளைத்த வேளை, 200 லீட்டர் கோடா மற்றும் 06 லீட்டர் சட்டவிரோத மதுபானம் மற்றும் சட்டவிரோத மதுபான உற்பத்திக்கு பயன்படுத்திய உபகரணங்கள் ஆகியவற்றை கைப்பற்றியுள்ளனர்.

அத்துடன், குறித்த வீட்டில் சட்டவிரோத மதுபான உற்பத்தியில் ஈடுபட்ட அளவெட்டி பகுதியை சேர்ந்த 31 வயதான நபர் ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

## கட்டுப்பாட்டை இழந்த வான் மோதி 10மோட்டார் சைக்கிள்கள் சேதம்

(யாழ்.விசேட நிருபர்)

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற விபத்து சம்பவம் ஒன்றில் 10 மோட்டார் சைக்கிள்கள் சேதமடைந்துள்ளன.

ஆனைப்பந்தி சந்திக்கு அருகில் உள்ள வாகன திருத்தகம் ஒன்றின் வெளியே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 10க்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிள்களுடன் வீதியில் வேகமாக பயணித்த ஹயஸ் ரக வாகனம் வேக கட்டுப்பாட்டை இழந்து, வீதியை விட்டு விலகி மோட்டார் சைக்கிள்களுடன் மோதி விபத்துக்குள்ளானது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

வட மாகாண மகளிர் விவகார அமைச்சு, யாழ். மாவட்ட செயலக ஏற்பாட்டில்

## யாழ்ப்பாணம் மாவட்ட ஊராட்சி முற்றக் கலந்துரையாடல் நிகழ்வு



(சாவகச்சேரி விசேட நிருபர்)

வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சு மற்றும் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண மாவட்ட ஊராட்சி முற்றக் கலந்துரையாடல் நிகழ்வானது கிறிசலிஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் 20/06 வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் மாவட்டத்தில் அடையாளப்படுத்தப்பட்ட பெண்கள் மற்றும் சிறுவர்கள் எதிர்நோக்கும் சவால்கள், அதற்கு உள்ளடங்கலான தீர்வுகள் மற்றும் எதிர்கால செயற்பாடுகளுடன் முன்னோக்கி செல்லுதல் சம்பந்தமாகவும் கலந்துரையாடப்பட்டது.

இதில் வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் திரு. பொ. வாகீஷன், யாழ் மாவட்ட உதவி செயலாளர் செல்வி உ. தர்சினி, பிரதேச செயலர்கள், பல்துறை சார் அரச உயர் அலுவலர்கள், கிறிசலிஸ் நிறுவன சிரேஷ்ட திட்ட இணைப்பாளர், பால்நிலை கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை ஆலோசகர், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், யாழ் மாவட்ட உள்ளூராட்சி மன்ற பெண் உறுப்பினர்கள், ஒன்றியத்தின் உறுப்பினர்கள், யாழ். மாவட்ட குடிசார் அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## மனைவி தீமூட்டி படுகொலை; கணவனுக்கு மரண தண்டனை

(யாழ். விசேட நிருபர்)

யாழ்ப்பாணத்தில் மனைவியை தீமூட்டி எரித்து படுகொலை செய்த கணவனுக்கு யாழ். மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது.

கடந்த 2015ஆம் ஆண்டு ஜூன் மாதம் 20ஆம் திகதி மானிப்பாய் காக்கை தீவு பகுதியில் குடும்ப பெண்ணொருவர் தீக்காயங்களுக்கு உள்ளான நிலையில் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த மானிப்பாய் பொலிஸார் கணவனை கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்த பின்னர் யாழ். நீதாவன் நீதிமன்றில் முற்படுத்தினர்.

நீதவான் நீதிமன்றில் சுருக்கமுறையற்ற விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, 2019ஆம் ஆண்டு யாழ். மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரினால் குற்றப்பகிர்வு பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட நிலையில் வழக்கு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டது. நேற்றுமுன்தினம் புதன்கிழமை வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, படுகொலை செய்யப்பட்ட பெண்ணின் கணவனை மன்று குற்றவாளியாக கண்டு, மரண தண்டனை விதிக்கப்பட்டது.

## 'அறுவடை – 02' பருவ இதழ் வெளியீடு

(கோப்பாய் குறூப் நிருபர்

வடக்கு மாகாண விவசாய அமைச்சினால் அறுவடை பருவ இதழின் 02 ஆவது இதழ் வெளியீடு செய்யப்பட்டுள்ளது. குறித்த அறுவடை பருவ இதழின் வெளியீட்டு நிகழ்வு, நேற்று (20) வியாழக்கிழமை யாழ்ப்பாணம் மாவட்ட விவசாயப் பயிற்சி நிலைய மாநாட்டு மண்டபத்தில், விவசாய அமைச்சின் சுற்றாடல் பிரிவினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றுச்சூழல் தின நிகழ்வின்போது நடைபெற்றது.

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் மரியதாசன் ஜெகூ தலைமையில் நடைபெற்ற 'அறுவடை' பருவ இதழ் 02 வெளியியீட்டு நிகழ்வில் வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் திருமதி சு.செந்தில்குமரன் மற்றும் நீர்ப்பாசனப் பணிப்பாளர் எந்திரி ந. சுதாகரன் ஆகியோர் இணைந்து வெளியிட்டு வைக்க வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் மற்றும் சுகாதார அமைச்சின் செயலாளர் ஜே.எஸ்.அருள்ராஜ் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

## திருவாசகம் சொற்பொழிவு

(கோப்பாய் குறூப் நிருபர்

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவநெறி பிரகாசர் கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் வாராந்த திருவாசக சிறப்பு சொற்பொழிவு நடைபெறுகிறது.

8ஆவது முறையாக நடைபெறும் சொற்பொழிவு இன்று வெள்ளிக்கிழமை (21) பிற்பகல் 4 மணிக்கு பன்னாலை சிவபூதவராயர் ஆலய பிரதான மண்டபத்தில் மாணிக்கவாசகர் சுவாமிகளின் குரு வணக்கத்தை தொடர்ந்து நடைபெறும்.

சொற்பொழிவை இளம் சைவப்புலவர் ச.நவநீதன் 'மாணிக்கவாசகரும் திருவம்மானையும்' என்ற தலைப்பில் ஆற்றுவார்.

# கிழக்கின் குரல்



அம்பாறையில்

## தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் பொதுமக்கள் நடமாடும் சேவை

ஒலுவில் விசேட நிருபர்

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் 'நாமே ஆரம்பம், வெல்வோம் சிறிலங்கா ஸ்மார்ட் சூறன்களோடு' எனும் வேலைத்திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்துக்கான பொதுமக்கள் நடமாடும் சேவை நாளை சனிக் கிழமை (22), நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை (23) ஆகிய இரு தினங்களிலும் அம்பாறை எச்.எம். வீரசிங்ஹ விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளதாக, அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.ஜெகராஜன் தெரிவித்தார்.

இதன்போது வெளிநாட்டு வேலைவாய்ப்புகள், வெளிநாடுக ளில் பணி புரிவோரின் முறைப்பா டுகளை பொறுப்பேற்றல், தொழில் வங்கியில் பதிவு செய்தல், வெளிநா டுகளில் பணி புரிவோருக்கு உரிய நட்டஈடு, சம்பளம், காப்புறுதி தொடர்பான சேவைகள், ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் தொடர்பான சேவைகள் நடைபெறவுள்ளன.

தொழிற்துறை பாடநெறி பதிவு, அபிவிருத்தி மேம்பாட்டு பயிற்சி யாளர்களுக்கான பதிவு, பயிற்சி ளர்களுக்கான பாராட்டு, புதிதாக சிந்திக்கும் இளைஞர்களுக்கான ஸ்மார்ட் யூத், போதைப்பொருள் ஒழிப்பு நிகழ்ச்சி திட்டம், மகளிர் மற்றும் சிறுவர் உரிமைகள் சட்டம் தொடர்பான விழிப்புணர்வு, உத்தேச தொழில்வாய்ப்புகள், சட்டம் தொடர்பான விழிப்புணர்வு, வெளிநாடுகளில் பணி புரிவோரின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகர ணங்கள் வழங்கல் போன்ற சேவை களும் நடைபெறவுள்ளன. இந்த நடமாடும் சேவையில் தொழி லாளர் திணைக்களம், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், இலங்கை மத்திய வங்கி, ஊழியர் நம்பிக்கை நிதியம், தேசிய தொழிலாளர் கற்கை நிறுவ னம், தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவனம், அரச வெளிநாட்டு வேலைவாய்ப்பு முக வர்கள், அனுமதிப்பத்திரம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்கள், சிறுதொழில் அபிவி ருத்தி பிரிவு, தொழில் அபிவிருத்தி சபை, பெருந்தோட்ட கைத் தொழில் அமைச்சு, அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் தமது சேவைகளை வழங்கவுள்ளதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

## உகந்தை முருகன் ஆலயத்தின் வருடாந்த ஆடிவேல் திருவிழா

### ஜூலை 6 கொடியேற்றத்துடன் ஆரம்பம்; உபயகாரர்களுடன் கலந்துரையாடல்

காரைதீவு குறூப் நிருபர்

வரலாற்று பிரசித்தி பெற்ற உகந் தைமலை முருகன் ஆலயத்தின் வருடாந்த ஆடிவேல் மகோற்சவ திருவிழா எதிர்வரும் ஜூலை மாதம் 6ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி அம்மாதம் 22ஆம் திகதி சமுத்திர தீர்த்தத்துடன் நிறைவடைய வுள்ளது.

இது தொடர்பாக திருவிழா உபய காரர்களுடனான கலந்துரையாடல், லகுகல பிரதேச செயலகத்தின் ஏற் பாட்டில் நேற்று முன்தினம் புதன்கி ழமை நடைபெற்றது. இதன்போது திருவிழா தொடர்பாக ஆலய பிரதம குரு சிவஸ்ரீ க.கு.சீதாராம் குருக்கள் விளக்கமளித்தார்.

உகந்தைமலை முருகன் ஆலய வரு டாந்த ஆடிவேல் விழா மகோற்சவம் இம்முறை ஜூலை 5ஆம் திகதி பூர் வாங்க கிரியைகளுடன் ஆரம்பிக்கப் படும். 6ஆம் திகதி முற்பகல் 11.00 மணியளவில் கொடியேற்ற பூஜை நடைபெறும். ஆலய வண்ணக்கர் சுதுநிலமே சுதா முன்னிலையில் பிரதம குரு சிவ ஸ்ரீ சீதாராம் குருக்கள் கொடி ஏற்றவுள்ளார்.



இதனைத் தொடர்ந்து தினமும் திரு விழாக்கால பூஜைகள் நடைபெற்று இறுதி நாள் 22ஆம் திகதி சமுத்திர தீர்த்தம் நடைபெறும். இதனைத் தொடர்ந்து வைரவர் பூஜை நடைபெ றும். விசேடமாக 12ஆம் திகதி காலை கும்பாபிஷேக தின சங்காபிஷேகமும் நடைபெறவுள்ளதாக கலந்துரையாட லில் தெரிவிக்கப்பட்டது.

## விபத்தில் மீனவர் உயிரிழப்பு

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

புதிய காத்தான்குடி ஏ.எல்.எஸ் மாவத்தை வீதியில் நேற்று முன்தி னம் புதன்கிழமை மாலை இடம் பெற்ற விபத்தில் மீனவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

புதிய காத்தான்குடி அக்பர் பள் ளிவாசல் வீதியில் வசிக்கும் 43 வயதுடைய 7 பிள்ளைகளின் தந் தையான நாகூர் பிச்சை அலியாரே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் இவர் வேகமாக சென்ற போது சுற்று மதிலுடன் மோதுண்டு சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடி பொலிஸ் நிலைய மோட்டார் போக்குவரத்து பொலிஸார், விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

திருகோணமலையில்

## அனுமதியற்ற வீதியோர கடைகளை அகற்ற ஏற்பாடு

அன்புவழிபுரம் தினகரன் நிருபர்

திருகோணமலை நகர சபை எல்லை மற்றும் பிரதேச சபைக்கு உட்பட்ட வீதியோரங்களில் அனு மதியற்ற வகையில் காணப்படும் கடைகளை அகற்றுமாறு கோரி திரு கோணமலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை கவனயீர்ப்பு ஆர்ப் பாட்டம் இடம்பெற்றது.

திருகோணமலை அநுராதபுர சந்தி பொதுச் சந்தை வியாபாரிகள், மரக் கறி பொதுச் சந்தை வியாபாரிகள் மற்றும் பேருந்து தரிப்பிட வியாபா ரிகளே இந்த ஆர்ப்பாட்டத்தை முன் னெடுத்தனர்.

திருகோணமலை பேருந்து நிலை யத்துக்கு முன்பாகவும் திருகோண மலை நகர சபை வளாகத்துக்கு முன் பாகவும் இவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



இது தொடர்பான கலந்துரையா டலொன்றும் திருகோணமலை நகர சபையில் நேற்று முன்தினம் நடை பெற்றது.

உப்புவெளி பிரதேச சபை செயலா ளர், உப்புவெளி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, தலைமை காவல் நிலைய போக்குவரத்து உத்தியோ கத்தர், திருகோணமலை நகர சபை செயலாளர் ஆகியோர் உட்பட வியாபாரிகள் 15 பேர் இந்த கலந்து ரையாடலில் பங்கேற்றனர்.

இந்த கலந்துரையாடலின் போது அனுமதியற்ற வீதிக் கடைகளை அகற்ற தீர்மானிக்கப்பட்டது டன், இதற்காக தனியான குழுவை அமைப்பதற்கும் தீர்மானம் எடுக்கப் பட்டது.

## மண்முனையில் குருதிக் கொடை

பெரியபோரதீவு தினகரன் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை மேற்கு, வவுணதீவு பிரதேச செயலகத்தில் இரத்ததான முகாம் அப் பிரதேச செயலாளர் என்.சத்தியானந்தி தலைமையில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடை பெற்றது.



'இரத்த தானம் வழங்கி உயிரை காப்போம்' எனும் கருப்பொருளின் கீழ் மண்முனை மேற்கு, வவுணதீவு பிரதேச செயலக மாநாட்டு மண்ட பத்தில் நடைபெற்ற இந்த இரத்த தான முகாமில் பிரதேச செயலாளர் உட்பட மண்முனைமேற்கு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் இளைஞர், யுவதிகள், குருதிக் கொடையாளிகள் பலர் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கினர்.

இதன்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கி பிரிவு வைத்தியர் கே.மதனமுகன் மற்றும் தாதிய உத் தியோகத்தர்கள் கலந்து கொண்டு தமது சேவையை வழங்கினர்.

## சமாதான நீதவானுக்கான நியமனம் வழங்கிவைப்பு



பெரியநீலாவணை விசேட நிருபர்

அம்பாறை மாவட்டத்தின் நாவி தன்வெளி பிரதேச செயலாளர் பிரி வுக்குட்பட்ட மத்தியஸ்த சபை உறுப்பினர்களுக்கு அகில இலங்கை சமாதான நீதவான் நியமன கடிதம் வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை நடை பெற்றது.

நாவிதன்வெளி பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் வைத்து ஏழு உறுப்பினர்களுக்கு அகில இலங்கை சமாதான நீதவானுக்கான கடிதம் வழங்கி வைக்கப்பட்டது.


பிரதேச செயலாளர் ராகுலநாயகி சஜீந்திரனின் வழிகாட்டலுக்கமைய வும் மத்தியஸ்த சபை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஐ.எல்.எம்.அன்பா ஸின் ஒருங்கிணைப்பிலும் பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திலக ராணி கிருபைராஜா தலைமையிலும் இந்நிகழ்வு நடைபெற்றது.

மத்தியஸ்த சபை உறுப்பினர்க ளாக சுமார் 10 ஆண்டுகளுக்கும் மேலாக கடமையாற்றும் உறுப்பினர் களின் நன்னடத்தை மற்றும் சமூக சேவை போன்ற விடயங்கள் அவதா னிக்கப்பட்டு, அவர்களுக்கு இந்நிய மனங்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் நிர்வாக உத்தியோ கத்தர், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எஸ்.சிவா, கிராம நிர்வாகிகள் இந்திரஜித், திணைக் கள பிரிவு உத்தியோகத்தர்கள் உள் ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

பொத்துவில்

## மருத்துவமனையில் PHI யினர் சோதனை



பாலமுனை தினகரன் நிருபர்

பொத்துவில் சுகாதார வைத்திய அலுவலகத்துக்கு உட்பட்ட ஆதார வைத்தியசாலைக்கு சுகாதார வைத்திய அதிகாரி உவைஸ் பாறுக் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் புதன்கிழமை விஜயம் செய்து அங்குள்ள நிலைமையை அவதானித்தனர்.

இதன்போது வைத்தியசாலை யின் சிற்றுண்டிச்சாலை மற்றும் சமையலறை மற்றும் சுற்றுச்சூழல் ஆகியவற்றை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் பரிசோதனை செய் தனர். வைத்தியசாலை சிற்றுண் டிச்சாலையானது திருப்திகரமாக காணப்படுகின்ற போதிலும், சிறு சிறு குறைபாடுகள் அவதானிக்கப் பட்டு அவற்றை சீர்செய்ய பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கால அவ காசம் வழங்கினர்.

## கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவு திறப்பு

பாலமுனை விசேட நிருபர்

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் புதிதாக கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு (Monitoring & Evaluation Unit) பிரிவு நேற்று முன்தினம் புதன் கிழமை உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. இதற்கான திறப்பு விழா, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சகீலா இஸ்ஸ டீன் தலைமையில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அனு மதியுடன் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரால் டொக்டர் எம்.சீ.எம்.மாஹிர், கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதி காரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

கல்முனை பிராந்தியத்தில் சுகாதார ரீதியாக மேலும் பல்வேறு பணிகளை முன்னெடுப்பதற்கு இந்த பிரிவு ஒரு சந்தர்ப்பமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக் கது. இந்நிகழ்வில் பிராந்திய பிரிவு தலைவர்கள், பணிமனையின் உத் தியோகத்தர்கள், ஊழியர்களாகிய பலரும் கலந்து கொண்டனர்.



## களைகட்டும் மார்பிள் பீச்

காரைதீவு குறூப் நிருபர்

திருகோணமலை பளிங்கு கடற் கரை (மார்பிள் பீச்) அண்மைக்கா லமாக சுற்றுலாப் பயணிகளால் களைகட்டி வருகிறது.



இந்நிலையில் தினமும் நூற்றுக் கணக்கான சுற்றுலாப் பயணிகள் மார்பிள் பீச்சுக்கு வருகை தந்து நீராடி வருகின்றனர்.

கடந்த ஹஜ் பெருநாள் தினத் தன்று ஏராளமான சுற்றுலாப் பய ணிகள் திருகோணமலை மார்பிள் பீச்சுக்கு வருகை தந்திருந்தனர்.

அங்கு தினமும் சுற்றுலாப் பய ணிகளின் வருகை அதிகரித்து வருவதாக தகவல்கள் தெரிவிக் கின்றன.

## புனித ஹஜ் கடமையை நிறைவேற்ற சென்றவர் மக்காவில் காலமானார்

அட்டாளைச்சேனை குறூப் நிருபர்

புனித ஹஜ் கடமையை நிறைவேற்ற புனித மக்கா சென்ற அக்கரைப்பற்று ஆறாம் குறிச்சியை சேர்ந்த ஆதம் லெப்பை அப்துல் கஃபூர் (67) நேற்று முன்தினம் காலை மக்காவில் காலமா னார். அக்கரைப்பற்று ஹாதீ ட்ரவல்ஸ் முகவரினூடாக ஹஜ் யாத்திரை மேற் கொண்ட ஆதம் லெப்பை அப்துல் கஃபூ ரின் ஜனாஸா, மக்கா கிங் அப்துல் அஸீஸ் வைத்தியசாலையில் ஒப்படைக் கப்பட்ட பின்னர் இவரது மரணம் உறு திப்படுத்தப்பட்டது.



அறஃபா மினாவில் நிறைவேற்றப் பட வேண்டிய ஹஜ் கடமையை பூர்த்தி செய்த பின்னர், இறுதியாக ஹஜ்ஜு டைய தவாஃபுக்காக வேண்டி மக்கா திரும்புகையிலேயே இவருடைய திடீர் மரணம் சம்பவித்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

## அக்கரைப்பற்றில் புதிய மத்ரஸா திறந்து வைப்பு

அட்டாளைச்சேனை குறூப் நிருபர்

அக்கரைப்பற்று பிரதேசத்தில் 'குர்ஆனிய வெளிச்சமுள்ள சந்ததியினரை உருவாக்குவோம்' எனும் கருப்பொருளை நோக்காக கொண்டு இயங்கவுள்ள தாருல் ஹக் ஹிபுளுள் குரான் மத்ரஸா கடந்த செவ்வாய்க்கிழமை திறந்து வைக் கப்பட்டது. அக்கரைப்பற்று ஜின்னா வீதியை அண்டி அமைந்துள்ள கட்டடத்தில் மேற்படி மதரசா திறந்து வைக் கப்பட்டது. மதரசா ஆளுநர் சபைத் தலைவரும் ஓய்வு பெற்ற நீர்ப்பாசன திணைக்களத்தின் மேலதிக நீர்ப்பாசன பணிப்பாளரும் பொறியியலாளருமான அல்ஹாஜ் எஸ். எல்.முஹம்மத் அலியார் தலைமையில் நடைபெற்ற இந்நி கழ்வில் அக்கரைப்பற்று அபூபக்கர் சித்தீக் அறபு கல்லூரி அதிபர் மௌலவி எம்.எல்.அபுல் கலாம் பிரதம அதிதி யாக கலந்துகொண்டார். இந்நிகழ்வில் மார்க்க அறிஞர்கள், உலமாக்கள், சட்டத்தரணிகள், பிரமுகர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் ஆளுநர் சபைச் செயலாளர் சட்ட முதுமாணி ஏ.நப்லி முகமத் வரவேற்புரை ஆற்றினார். மத ரசாவின் அதிபர் மௌலவி சம்சுதீன் ரியாசுதீன் மற்றும் பலரும் இதன்போது உரையாற்றினர்.

## பாக்குநீரிணையை நீந்தி கடந்த மாணவனுக்கு கௌரவிப்பு

மாளிகைக்காடு குறூப் நிருபர்



இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பாக்கு நீரிணையை வெற்றி கரமாக நீந்திக் கடந்து சிறப்பு சாதனையை தனதாக்கிக் கொண்ட இளம் சாதனைப்பு யல் ஹரன் ஸலாமா பாராட்டு கௌரவிக்கப் பட்டுள்ளார்.

திருகோணமலை ஸாஹிரா கல்லூரி மாண வனான ஹரன் ஸலாமா வுக்கு புல்மோட்டையில் மகத்தான வரவேற்பு அளிக் கப்பட்டதுடன், நேற்று முன்தி னம் புதன்கிழமை இம்மாண வனுக்கு கௌரவிப்பு நிகழ்வு நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

## இஸ்லாமிய இலட்சினை கொடியேற்றம்

(அக்கரைப்பற்று நிருபர்)

அக்கரைப்பற்று மஹ்றூத்துல் காதிய் ரியா தைக்கா ஜும்ஆ பள்ளிவாசலின் புனித இஸ்லாமிய இலட்சினை கொடி யேற்ற விழா நேற்று முன்தினம் நடை பெற்றது. தொடர்ச்சியாக 10 நாட்கள், தலைசிறந்த உலமாக்களால் சன் மார்க்க உபந்நியாசங்கள் நிகழ்த்தப் படும். எதிர்வரும் சனிக்கிழமை அஸர் தொழுகையினைத் தொடர்ந்து கத்த முல் குர்ஆன் தமாமும் தூஆப் பிரார்த் தனை இடம்பெறும்.

மறுநாள் 30ஆம் திகதி லுஹர் தொழுகையினைத் தொடர்ந்து கந்தூரி வைபவத்துடன் நிகழ்வு நிறைவுபெறும்.

# ஒற்றுமையாய் ஒன்றிணைவதை கடமையாக்கிய ஹஜ்

மனிதர்களே, நாங்கள் உங்களை ஓர் ஆணிலிருந்தும் பெண்ணிலிருந்தும் படைத்தோம். உங்களைக் கிளைகளாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம் (ஹுஜராத் 13) என மனிதனைப் படைத்த அல்லாஹுத்தஆலா குறிப்பிட்டிருக்கிறான்.

சமூகப் பிராணி என்ற வகையில் அவன் தனித்து வாழ்வதை விட கூட்டத்துடன் வாழ்வது தான் சிறப்பானது என்பதை நபி(ஸல்) அவர்களும் வலியுறுத்திக் கூறியுள்ளார்கள். மனிதன் தனித்து வாழ முடியாது என்ற அடிப்படையிலேயே அவனது படைப்பு அமைந்திருக்கிறது.

மக்களுடன் கலந்து பழகி அசௌகரியங்களைப் பொறுத்துக் கொண்டு வாழ்பவன், மக்களுடன் கலந்து பழகாமல் அசௌகரியங்களைத் தாங்கிக் கொள்ளாமல் வாழ்பவனை விட அல்லாஹ்விடத்தில் சிறந்தவன்' (ஆதாரம்: திர்மிதி) என நபியவர்கள் கூறியிருக்கிறார்கள். தனித்திருக்கும் ஆட்டையே ஓநாய் கௌவிச் செல்கிறது என எச்சரிக்கையும் செய்திருக்கிறார்கள். இந்த வகையில் மனிதன் கூட்டமாக வாழ வேண்டியவன் என்றும் கூட்டத்திலிருந்து ஒதுங்கி வாழ்வது விரும்பத்தகாதது என்றும் இஸ்லாம் கருதுகிறது.

இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட முஸ்லிம்கள் எப்போதும் கூட்டாகவே செயற்பட வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையிலேயே அவர்களது கருமங்களை இஸ்லாம் வழிகாட்டி இருக்கிறது. விதியாக்கப்பட்டுள்ள ஐந்து கடமைகளில் தொழுகை, நோன்பு, ஸக்காத், ஹஜ் அனைத்தும் கூட்டாகச் செயற்படுத்தக் கூடியனவாக விதிக்கப்பட்டுள்ளன.

ஒரு முஸ்லிமைப் பொறுத்தவரை அவன் ஒரு நாளில் ஐந்து தடவைகள் தனது அயலவர்களுடன் பள்ளிவாசலில் ஒன்று சேர வேண்டியவனாக இருக்கிறான். வாரத்தில் ஒரு முறை வெள்ளிக்கிழமை நாளில் ஊரிலுள்ள அனைவருடனும் அவன் ஒன்றாக இணைவது கடமையாக்கப்பட்டிருக்கிறது. வருடத்தில் இரண்டு முறை வருகின்ற பெருநாட்களிலும் ஊருக்கு வெளியில் சென்றவர்களும் வந்து இணைந்து கொள்ளும் வகையிலான ஒன்றுகூடலே பெருநாளின் பிரதான அம்சமாக ஆக்கப்பட்டுள்ளது. அதேபோன்று வருடத்தில் ஒரு தடவை நடைபெறுகின்ற ஹஜ்ஜிலே உலகெங்கிலும் இருந்து வருகை தருகின்ற தனது முஸ்லிம் சமூகத்துடன் அவன் ஒன்று கூடுகின்றான். இப்படியாக அயலவனிலிருந்து தொடங்கி கடல்கடந்து வாழும் மனிதனையும் ஒருங்கிணைப்பதை ஊக்குவிக்கும் வகையிலேயே இஸ்லாம் சொல்லும் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன.

ஹஜ்ஜிலே கடமையான அனைத்துச் செயற்பாடுகளும் ஒரு சமூகமாக இருந்து செய்ய வேண்டியவைகளாக இருக்கின்றன. இந்த இடத்திலே தம்மிடமுள்ள வேறுபாடுகளையும் பேதங்களையும் முன்னிலைப்படுத்தி எந்த மனிதன் செயற்பட்டாலும் ஹஜ்ஜின் கிரியைகளை அது சீர்குலைத்துவிடும். இந்த இடத்தில் நிறத்தாலும், மொழியாலும், கொள்கைகளாலும் வேறுபட்ட எல்லோருமே தமது பேதங்களை விட்டு விட்டு ஒரே இலக்கில் செயற்பட்டு ஹஜ்ஜை வெற்றிகரமானதாக மாற்றுவார்கள்.

மார்க்க விடயங்களில் தமக்கிடையே கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் தனது கருத்துத்தான் சரி என்றோ அடுத்தவர்களுடைய கருத்து பிழை என்றோ நிறுவுவதற்கு அங்கு யாரும் முற்படுவதில்லை. ஒவ்வொருவரும் தாம் கொண்டிருக்கின்ற கொள்கைகளுக்கும் தான் சரி என ஏற்றிருக்கின்ற கருத்துக்களுக்கும் ஏற்ப செயற்பட்டு விட்டுச் செல்கிறார்கள். யாரும் தமது கருத்தை அடுத்தவரில் திணிப்பதற்கு இங்கு முயற்சிப்பதில்லை. இந்த நிலைப்பாடுகளுடன் மில்லியன் கணக்கான மக்கள் நாட்கணக்கில் ஒன்றாக இருந்து முஸ்லிம் சமூகத்தின் ஒற்றுமையை வருடத்துக்கு ஒருமுறை உலகுக்குப் பறைசாற்றிவிட்டுச் செல்கிறார்கள்.

ஹஜ் முஸ்லிம் சமூகத்துக்கு வழங்குகின்ற பல படிப்பினைகளுள் இந்த ஒற்றுமைச் செயற்பாடு என்பது மிகவும் முக்கியமானது. அல்லது அடிப்படையானது. இந்த அடிப்படைச் செயற்பாட்டைத் தான் வருடம் முழுவதும் உலகம் முழுவதும் நடைமுறையாக வேண்டும் என இஸ்லாம் எதிர்பார்க்கிறது. எப்படி ஹஜ்ஜுடைய வெற்றிகரமான இயக்கத்துக்கு இந்த ஒற்றுமை வேராக அமைந்ததோ அதேபோன்று உலகம் வெற்றிகரமாக இயங்குவதிலும் இந்த ஒற்றுமை அச்சாணியாக அமைகிறது. ஒரே இலக்கை நோக்கி மக்கள் தமது கவனத்தைக் குவிக்கின்ற போது இலக்கை அடைவதற்கு அத்தியாவசியமல்லாத விடயங்களில் மக்கள் சர்ச்சைப்படுவது அவசியமற்றதாகிப் போய் விடுகிறது என்பதை ஹஜ் எடுத்துக் காட்டுகிறது.

அல்லாஹுத்தஆலா தன்னை ஏற்றுக் கொண்டவர்களைப் பார்த்து, 'அல்லாஹ்வுடைய ஒற்றுமையாய் வாழ்தல் எனும் கயிற்றைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள், பிரிந்து விடாதீர்கள் என்று ஏவுகின்றான். இங்கு குறிப்பிடப்படும் (ஹப்ல்) கயிறு என்பது பல நார்கள் ஒன்று திரண்டதால் உண்டானதாகும். அதனைப் பிரித்தெடுக்கும் பொழுது அது வெறும் நாராக மாறி பலமிழந்து விடுகிறது. ஆகவே கயிற்றை கயிறாகவே பற்றிப் பிடித்துக் கொள்ளாமல் நார்களாகப் பிரிந்து நிற்பது பலவீனத்தையே ஏற்படுத்துவதாக அமைகிறது என்பதையே இக்குர்ஆன் வசனம் எடுத்துக்காட்டுகிறது.

நபியவர்கள் முஸ்லிம் சமூகத்தை ஒரு கட்டடத்துக்கு ஒப்பிட்டார்கள். அதன் ஒரு பகுதி அடுத்த பகுதியை பூரணப்படுத்தும் என்று கூறினார்கள் (ஆதாரம்: புஹாரி). மற்றுமொரு சந்தர்ப்பத்தில் முஸ்லிம் சமூகத்தை மனித உடலுக்கு ஒப்பிட்டார்கள். அதன் ஒரு பகுதி பாதிக்கப்பட்டால் ஏனைய பகுதிகள் அதற்கு எதிர்வினையாற்றும் என்றார்கள் (ஆதாரம்: புஹாரி). இந்த வகையில் ஒரு கட்டடத்தைப் பூரணமாக்குவதற்கான கல்லைப் பற்றி கருத்து வேறுபாடுபட்டுக் கொண்டிருந்தால் கட்டடத்தைப் பூரணப்படுத்த முடியாது. காலப்போக்கில் அது சரிந்து விழும். கண்ணில் தூசு விழும்போது கை ஒத்துழைக்காவிட்டால் கண்கெட்டுப் போவதைத் தடுக்க முடியாது. பின்னர் முழு உடம்பும் அதற்காக வருந்த வேண்டியிருக்கும். எனவே இங்கு பிரதான இலக்கான கட்டடத்தைப் பூரணப்படுத்தல் அல்லது உடம்பைப் பாதுகாத்தல் என்பது கண்முன்னால் விரியும் பொழுது கிளை விடயங்களில் சர்ச்சைப்பட்டு பிரிந்து சென்று ஒற்றுமையைக் குலைப்பது அருகிப் போய் விடும்.

ஆயிரத்து நானூறு வருடங்களுக்கும் மேலாக கஃபாவிலே வருடாந்தம் ஒன்று கூடுகின்ற மக்கள் இச்செய்தியைத் தான் உலகுக்குச் சொல்கிறார்கள். எங்களுக்குள் கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன, பிரிவுகள் இருக்கின்றன. ஆனாலும் அல்லாஹுத்தஆலா சொன்ன கட்டளையை நிறைவேற்றும் விடயத்தில் நாங்கள் ஒன்றாக இணைந்திருக்கிறோம், ஒன்றாகச் செயற்படுகிறோம், ஒரே திசையை நோக்கி தலைமைகளுக்குப் பின்னால் வழிநடக்கிறோம் என்ற செய்தியைத் தான் ஹஜ் எடுத்துச் சொல்கிறது. ஹஜ்ஜிலே முஸ்லிம் சமூகம் தத்தமது கொள்கைகளையும் கருத்துக்களையும் சரியென நிறுவுவதற்கான வாக்குவாதங்கள், விவாதங்கள், பட்டிமன்றங்கள் நடத்துவதில்லை. தவிரவும் ஹஜ்ஜின் போது வாதம் புரிவதை, தர்க்கிப்பதை அல்லாஹ்தஆலாவே தடுத்தும் இருக்கின்றான். ஹஜ்ஜை தம்மீது கடமையாக்கிக் கொண்டால் உடலுறவு, கெட்ட வார்த்தைப் பிரயோகங்கள், தர்க்கித்தல் கூடாது (பகரா 197) என அல்லாஹ்தஆலா குறிப்பிடுவதன் ஊடாக மக்கள் ஒன்றுபடுவதைக் குலைக்கின்ற விடயமாக தர்க்கித்தல் (ஜிதால்) எடுத்துக் காட்டப்படுகிறது.



தர்க்கித்தல் என்பது ஒற்றுமையைக் குலைப்பதில் முக்கியமான அம்சம் என்பதனால் கருத்து வேறுபாடு உள்ள விடயங்களில் வாதங்களையும் தர்க்கங்களையும் தவிர்த்து அவரவர் கருத்துக்கேற்ற வகையில் அவர்கள் ஏற்றுக்கொண்ட விடயங்களில் அவர்களைச் செயற்படவிடுவது ஒற்றுமையாய் ஒன்றிணைவற்கான வழியாக அமைய முடியும் என்பதை வருடாவருடம் ஹஜ் நமக்கு உணர்த்தி விட்டுச் செல்கிறது. ஹஜ் ஒரு கடமை என்ற வகையில் அதனை வெற்றிகரமாகச் செய்வதற்கு பேதங்களை மறந்து ஒன்றாய்ச் செயற்படுவதும் கடமையாகும் என்பதே ஹஜ் நமக்குக் கற்றுத் தரும் பாடமாகும். இந்த ஒற்றுமை என்பது முஸ்லிம் சமூகத்துக்குள்ளால் நிலவுவதாக மட்டுமன்றி ஹஜ்ஜுக்குக் காரணமாய் அமைந்த இப்ராஹீம் (அலை) அவர்களின் பின்னால் வந்த இப்ராஹிமிய மதங்களான யூத, கிறிஸ்தவ சமூகங்களுடனும் ஒற்றுமையாய் இணைந்து வாழ்வதற்கான முன்னெடுப்புக்களை எடுக்க வேண்டியதன் அவசியத்தையும் ஹஜ் எடுத்துக் காட்டுகிறது என்றால் அது மிகையாகாது.

**பியாஸ் முஹம்மத்**

## ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# கல்விக்கு இஸ்லாம் அளித்துள்ள முக்கியத்துவம்



கற்பதும், கற்பிப்பதும் இறை நம்பிக்கை என்றுள்ளது இஸ்லாம். இறைநம்பிக்கை என்பது 70க்கும் மேற்பட்ட கிளைகள் கொண்டது. அதில் கல்வி கற்பது, கல்வியை கற்றுக்கொடுப்பதும் ஒன்றாகும். இஸ்லாத்தில் கல்வி கற்பதும், கற்ற கல்வியைப் பிறருக்கு கற்றுக்கொடுப்பதும் சிறந்ததொன்றாக விளங்குகிறது. இந்த இரண்டும் 'நாவு சார்ந்த இறைநம்பிக்கை' என்ற அந்தஸ்தைப் பெற்றுள்ளது.

தொழுகை, நோன்பு, ஸகாத், ஹஜ் போன்ற இஸ்லாமிய இறை வணக்கங்கள் வரிசையில் சிறப்பான இடத்தைப் பெறுவது கல்வியே. ஆதலால்தான் முஹம்மது (ஸல்) அவர்களைப் பார்த்து இறைவன் முதன்முதலாக கூறிய வார்த்தையே 'ஓதுவீராக' என்பதாக விளங்குகிறது. கல்வி கற்கும் போது அல்லாஹ்வை உரிய ஒழுங்கில் அறிந்து அவன் மீது நம்பிக்கை கொள்வதோடு உயிரோட்டம் மிக்க வகையில் இறைவணக்கங்களையும் மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும். கல்வி இன்றி இறை நம்பிக்கையும், இறைவணக்கமும் செயல்வடிவம் பெறுவது சிரமசாத்தியமானது. அதனால் தான் நபி (ஸல்) அவர்கள், 'தான தர்மங்களில் சிறந்தது ஒரு முஸ்லிம் தானும் கல்வி கற்று, பிறகு அதை தமது சகோதர முஸ்லிமுக்கும் கற்றுக் கொடுப்பதே ஆகும் எனக் கூறியுள்ளார்கள்'.

**(ஆதாரம்: இப்னுமாஜா)**

கல்வி கற்பது, கற்பிப்பது, சிந்திப்பது, சிந்திக்கத் தூண்டுவது, அறிவைத் தேடுவது, அதை மற்றவருக்கு வழங்குவது, ஆராய்ச்சி செய்வது ஆகிய அனைத்தும் இஸ்லாத்தின் பார்வையில் வணக்கமாகும்.

அந்த வகையில் கல்வி கற்பது இறையச்சம் (தக்வா), கல்வியைத் தேடுவது வணக்கம் (இபாதத்), கல்வி ஞானம் பற்றி பேசுவது இறை துதி (தஸ்பீஹ்), கல்வி ஞானம் பற்றி உரையாற்றுவது அறப்போர் (ஜிஹாத்), கல்வியை கற்பிப்பது தர்மம் (ஸதகா) ஆகும்.

அல் குர்ஆன் வசனங்களில் ஆராய்தல், சிந்தித்தல், யோசித்தல், உணர்தல், அறிதல், படிப்பினை பெறுதல், பாடம் பெறுதல், அறிவுரை பெறுதல், உற்று கவனித்தல் போன்ற கல்வி மற்றும் அறிவியல் சம்பந்தமான வார்த்தைகளைக் கொண்ட வசனங்கள் மட்டும் பத்து சதவீதம் உள்ளன. கல்வியைத் தேடி பயணிக்குமாறு தூண்டும் படியான ஐம்பதுக்கும் மேற்பட்ட வசனங்கள் அல் குர்ஆனில் இடம் பிடித்துள்ளன.

வணக்க வழிபாடுகளில் இருக்கும் மோகத்தை விட கல்வி கற்பதிலும், அதை கற்பிப்பதிலும் தான் அதிகம் இருக்க வேண்டும் என்று பின்வரும் நபிமொழி வலியுறுத்துகிறது.

'நபி (ஸல்) அவர்கள் மஸ்ஜித் நபவியில் இரண்டு சபையினரை கடந்து சென்றார்கள். அப்போது, 'அவர்கள் இரு சாராருமே நன்மையான காரியத்தில்தான் உள்ளனர் (என்றார்கள்). எனினும் அவ்விருசாராரில் ஒரு சாரார் மிகவும் சிறப்பு வாய்ந்தவர் என்றார்கள். இதோ ஒரு சாரார் இறைவனிடம் பிரார்த்தனை செய்கின்றனர். மேலும் அவனிடம் அருளை எதிர்பார்க்கின்றனர். இறைவன் நாடினால் அவன் அவர்களுக்கு கொடுப்பான், அல்லது கொடுக்காமலும் இருப்பான். மற்றொரு சாராரோ அவர்கள் கல்வி ஞானத்தை தானும் கற்று, அதை அறியாத மக்களுக்கு கற்றுக்கொடுக்கிறார்கள். எனவே இவர்கள் தாம் மிகச் சிறந்தவர்கள். நானும் கல்வி கற்றுக்கொடுக்கும் ஆசிரியராகத்தான் இறைவனால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளேன்' என்று கூறிவிட்டு, அந்த சபையினரிலேயே அமர்ந்து விட்டார்கள்'. (ஆதாரம்: தாரமீ)

மேலும் பத்ர் போரின் முடிவில் நபி (ஸல்) அவர்கள் கல்வியில் பலவிதமான புரட்சிகளை ஏற்படுத்தினார்கள். பத்ர் போரின் இறுதியில் இறைமறுப்பாளர்களில் 70 பேர் சிறைபிடிக்கப்பட்டார்கள். அப்போதைய வழக்கப்படி, சிறை படிக்கப்பட்டவர்களில் வசதி வாய்ப்புள்ளவர்கள் பிணைத்தொகை கொடுத்து விடுதலை பெற்றனர். கைதிகளில் வசதியில்லாத ஒருவர் 10 முஸ்லிம் சிறுவர்களுக்கு எழுத, வாசிக்க கற்றுக் கொடுத்தால் அவர்களை விடுதலை செய்யலாம் என்று நபி(ஸல்) அவர்கள் குறிப்பிட்டார்கள்.

இதன்படி, சிறுவர்களுக்கு இலவசகல்வி சேவையை முதன்முதலாக உலகிற்கு அறிமுகப்படுத்தியவர் முஹம்மது நபி (ஸல்) அவர்களேயாவார். இந்த இலவசக்கல்வி மூலம் கற்றவர்களில் ஒருவர் தான் ஸைத் பின் ஸாபித் (ரழி) ஆவார். இவர் மதீனாவில் இருக்கையில், நபியவர்களுக்கு இறை செய்தி வரும்போது, அதை எழுதும் எழுத்தாளராக செயற்பட்டார். இவர் பத்ர் யுத்த கைதிகளிடமிருந்து கல்வி கற்றுக்கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் நபி (ஸல்) அவர்கள், மஸ்ஜித் நபவி பள்ளிவாசல் திண்ணையில் வைத்து பரம ஏழைகளான எழுபதுக்கும் அதிகமான தோழர்களுக்கு இலவசக்கல்வியை இலவச உணவுடன் கற்றுக்கொடுத்தார்கள். இவர்கள் 'திண்ணைத் தோழர்கள்' என்று அழைக்கப்பட்டனர். கல்வி கற்பவர்களுக்கு இலவச உணவையும், இலவச விடுதியையும் முதன்முதலாக வழங்கியவர் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் தான். இவ்வாறு திண்ணையில் இலவச கல்வி கற்றவர்களில் ஒருவர் தான் அபூஹுரைரா (ரலி) அவர்கள் ஆவார். இவர் நபிகளாரிடமிருந்து 5374 நபிமொழிகளை அறிவித்திருக்கிறார். அதிகமான நபிமொழிகளை அறிவித்தவர்களில் இவரே முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

அதேநேரம் நபி (ஸல்) அவர்கள் பெண் கல்விக்காகவும், அடிமைப் பெண்களின் கல்விக்காகவும் பாடுபட்டுள்ளார்கள். அண்ணலாரின் அன்பு மனைவியான அன்னை ஆயிஷா (ரழி) அவரகள் கல்வியின் பல துறைகளில் விற்பன்னராக சிறந்து விளங்கினார்கள். இவர்கள் 1) குர்ஆன் வழிக்கல்வி, 2) வாரிசுரிமைக் கல்வி, 3) கவிதை ஞானம், 4) வரலாற்று அறிவு, 5) மருத்துவம் ஆகிய ஐந்து துறைகளில் சிறந்து விளங்கினார்கள் என்று பதிவுகள் உள்ளன. மேலும் நபிகளாரிடமிருந்து 2210 நபிமொழிகளை அறிவித்த பெருமையும் ஆயிஷா (ரழி) அவர்களுக்கு உள்ளது.

மேலும், நபியவர்கள் இளைஞர், முதியோர், குடும்பத் தலைவர் ஆகியோரின் கல்வி திட்டத்தையும் உலகில் முதன் முதலாக நபி (ஸல்) அவர்கள் தான் தொடக்கி வைத்தார்கள்.

'மூவருக்கு (இறைவனிடம்) இரண்டு கூலிகள் உண்டு. அவர்களில் ஒருவர் தம்மிடமுள்ள ஓர் அடிமைப் பெண்ணுக்கு ஒழுக்கப் பயிற்சி அளித்து, அந்தப் பயிற்சியை அழகுறச் செய்து, அவளுக்கு மார்க்கச் சட்டங்களை கற்பித்து, கற்பிப்பதையும் அழகுறச் செய்து, பின்னர் அவளை அடிமைத் தளையிலிருந்து விடுவித்து, அவளை மணந்தவர் ஆவார் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்'

**(ஆதாரம்: புஹாரி)**

ஆகவே இஸ்லாமிய வழிகாட்டல்களுக்கு அமைய கல்வியைக் கற்பத்திலும் அதனைக் கற்றுக் கொடுப்பதிலும் கவனம் செலுத்துவோம்.

**அப்துர் ரஹ்மான்**

# உண்மையான இறையச்சம்



சர்வ வல்லமை படைத்த அல்லாஹ்தஆலா நாம் எங்கிருந்தாலும் எம்மைக் கவனிக்கிறான். கண்காணிக்கிறான் என்பது ஒவ்வொருவரிலும் ஆழஅகலமாக வேரூன்றி இருக்க வேண்டிய ஒன்றாகும்.

அதனால் தான் அல் குர்ஆன், 'திண்ணமாக அறிந்து கொள்ளுங்கள். அல்லாஹ் உங்களைக் கண்காணித்துக் கொண்டிருக்கிறான்'. (அல் குர்ஆன் 4:11) என்று குறிப்பிட்டுள்ளது.

ஒரு தடவை உமர் (ரழி) அவர்கள், 'பாலைவனப் பாதையினூடாக நடந்து செல்லும் போது ஆடு மேய்க்கும் சிறுவர் ஒருவரைச் சந்தித்தார். பாலைவனத்தில் ஆடுகளை மேய்க்கும் இச்சிறுவர் மதீனாவை விட்டும் வெகுதூரத்தில் இருந்தார். அதனால் அச்சிறுவனிடம் அல்லாஹ் குறித்த அச்சம் உள்ளதா என சோதிக்க உமர் (ரழி) விரும்பினார்.

அதனால் அச்சிறுவனிடம் சென்ற உமர் (ரழி) அவர்கள், 'சிறுவரே! ஓர் ஆட்டை உன்னிடமிருந்து விலைக்கு வாங்க விரும்புகிறேன்' என்றார். அதற்கு அச்சிறுவர், 'இது எனக்குச் சொந்தமான ஆடுகள் அல்ல. எனது எஜமானருக்குச் சொந்தமானது' என்ற போது உமர் (ரழி). 'அதற்கென்ன...? உன்னிடம் அவர் இதுபற்றி விசாரித்தால் ஓநாய் சாப்பிட்டு விட்டது என்று கூறு' என்றார். அப்போது சிறுவர்,

உடனே பயந்தவராக, 'அல்லாஹ் அக்பர்' எனது எஜமானர் இங்கு இல்லாவிட்டால் என்ன...? அல்லாஹ்வுமா இல்லை...? அல்லாஹ் பார்த்துக் கொண்டல்லவா இருக்கிறான் என்றார் அச்சிறுவர்.

அவ்வளவுதான்... உடனே உமர் (ரழி) அவர்கள் அழத் தொடங்கியதோடு அங்கிருந்து மதீனா நோக்கி புறப்பட்டார். வரும் வழி நெடுகிலும் 'அல்லாஹ்வுமா இல்லை...? அல்லாஹ்வுமா இல்லை...?' என்ற அச்சிறுவரின் வார்த்தைகளையே திரும்பத் திரும்ப கூறியவராக நடந்து வந்தார்.

பாலைவனத்தில் எங்கோ ஒரு மூலையில், மனிதர்களின் பார்வையில் பட்டுவிடாமல் தனிமையில் ஆடுகளை மேய்க்கும் ஒரு சிறுவனுக்கு இருக்கும் அச்ச உணர்வு, இறை வணக்க வழிபாடுகளில் ஈடுபடுவதோடு, நான் ஒரு முஸ்லிம் என்று அடையாளத்தை வெளிப்படுத்தும் பெரும்பாலான முஸ்லிமுக்கு ஏன் ஏற்படுவதில்லை என்ற கேள்வி நிலவவே செய்கிறது.

ஆனால் அல்லாஹ் ஒவ்வொருவரதும் வெளித்தோற்றத்தை அன்றி உள்ளத்தையே பார்ப்பவன் என்பதை மறந்து விடலாகாது.

தொகுப்பு: **உம்மு பாத்திமா அஸ்கா**

# சுவர்க்கத்திற்கான பாதை



ஏக இறைவன் அல்லாஹ் மீது நம்பிக்கை கொண்ட நல்லடியார்களின் விருப்பம், இந்த உலக வாழ்க்கையின் நன்மைகளை விட மறுமை வாழ்க்கையில் இறைவனின் திருப்பொருத்தத்தை பெற்று சுவர்க்கத்தில் வாழ வேண்டும் என்பது தான்.

மனிதர்கள் விரும்பும் அந்த சுவர்க்கத்தின் பாதை எளிதாக இருப்பதில்லை. இறைவனின் சோதனையுடன், உலக வாழ்வில் காணப்படும் தற்காலிக இன்பங்களின் சோதனைகளும் நிறைந்தது. அதனால் அல் குர்ஆன், 'அல்லாஹ் எந்த மனிதரையும் அவரது சக்திக்கு அதிகமாக (பொறுப்புகளை சுமத்தி) சிரமப்படுத்துவதில்லை. அவர் சம்பாதித்த நன்மையின் பலனும் அவருக்கே. அவர் சம்பாதித்த தீமையின் விளைவும் அவருக்கே'. (2:286) என்று குறிப்பிட்டுள்ளது. இவ்வசனத்தின் படி, இறைவனிடம் இருந்து நமக்கு சோதனைகள் வரும். அவை நமது சக்திக்கு மீறியதாக இருக்காது. அது இறைவனின் உறுதிமொழியாகும். எனவே, நமக்கு இறைவன் தரப்பில் இருந்து வரும் சோதனைகளைக் கண்டு நாம் கலங்காமல் இறைவனிடமே சரணடைந்து அந்த சோதனைகளில் வெற்றி பெற வேண்டும்.

`யார் என்ன நன்மை சம்பாதித்தார்களோ அதன் பலன் அவருக்கே, அதே போன்று அவர் தீமைகளை சாம்பாதித்திருந்தால் அதன் விளைவும் அவருக்கே' என்றும் அல்லாஹ் அல் குர்ஆனில் குறிப்பிட்டுள்ளான்.

இதன்படி, நாம் நன்மைகள் செய்யும் போது, அதன் பலனைக்கொண்டு நமக்கு வரும் சோதனைகளில் வெற்றி பெறலாம். அதே நேரத்தில் தீமைகள் செய்யும் போது அதற்குரிய பிரதிபலன்களை அனுபவிக்கவும் நேரிடும். அதுவே இறைவனின் நியதியாகும்.

அதனால் இறைவனின் தரப்பில் இருந்து வரும் சோதனைகளை வென்று வாழ்வில் முன்னேற விரும்பும் மனிதன், இறைவனிடம் எவ்வாறு பிரார்த்தனை செய்யவேண்டும் என்பதையும் அல் குர்ஆன் எடுத்தியம்பியுள்ளது. "எங்கள் இறைவனே...! நாங்கள் மறந்து போயிருப்பினும், பிழை செய்திருப்பினும் நீ எங்களை குற்றம் பிடிக்காதே.... எங்கள் இறைவனே..! மேலும், எங்களுக்கு முன் சென்றோர் மீது நீ பாரத்தை சுமத்தியது போன்று எங்கள் மீதும் பாரத்தை சுமத்தி விடாதே... எங்கள் இறைவனே..! மேலும் நாங்கள் தாங்க இயலாத பாரத்தை எங்கள் மீது சுமத்தி விடாதே... எங்களைப் பொறுத்தருள்வாயாக..! எங்களுக்கு மன்னிப்பு வழங்குவாயாக...! எங்கள் மீது கருணை பொழிவாயாக..! நீயே எங்கள் பாதுகாவலனாவாய்..! (சத்தியத்தை) நிராகரிக்கும் மக்களுக்கு எதிராக வெற்றிகொள்ள எங்களுக்கு உதவி செய்வாயாக...!".

அதேநேரம் பாவம் செய்த மனிதர்கள் இறைவனிடம் சரணடைந்து வணங்கி மன்னிப்பு கேட்க வேண்டும். அப்போது அல்லாஹ் அவனது மாபெரும் கருணையின் மூலம் பாவங்களை மன்னிக்கின்றான் என்று அல் குர்ஆன் குறிப்பிட்டிருக்கிறது.

"நன்கு அறிந்து கொள்ளுங்கள். அறியாமையின் காரணமாக, ஏதேனும் பாவச்செயலை செய்துவிட்டாலும், உடனடியாக எவர்கள் பாவமன்னிப்புக் கோருகின்றார்களோ அவர்களின் பாவ மன்னிப்பை ஏற்றுக்கொள்வதே அல்லாஹ்வின் பொறுப்பாகும். ஆகவே அத்தகையோரை நோக்கி அல்லாஹ் தன் கருணைப் பார்வையை மீண்டும் திருப்புகின்றான். மேலும், அல்லாஹ் அனைத்தையும் நன்கறிந்தவனாகவும், நுண்ணறிவுடையவனாகவும் இருக்கின்றான். (அல் குர்ஆன் 4:17).

மேலும் அவர்கள் எத்தகையோர் எனில், மானக்கேடான செயலைச் செய்துவிட்டால் அல்லது (ஏதேனும் பாவங்கள் செய்து) தமக்குத்தாமே அநீதி இழைத்துக் கொண்டால், உடனே அவர்கள் அல்லாஹ்வை நினைத்து, தம் பாவங்களுக்காக அவனிடம் மன்னிப்புக் கோருவார்கள்.

**அப்துல்லாஹ்**



# புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
உதவி அதிபர், கொ/ புனித அன்னம்மாள் மகளீர் மகாவித்தியாலயம், கொழும்பு 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

**I. கீழே தரப்பட்ட பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

வேலி எங்கும் பச்சோந்திதான்
சுற்றி வருகுது – கீழே
வீழ்ந்திடாமல் கால்களினால்
பற்றி வருகுது!

நீலம்! மஞ்சள்! பச்சை! செம்மை!
நிறமும் மாறுது – செடி
நிறத்திற்கேற்ப வண்ணம் பல
நிதமும் சேருது!

வாலை ஆட்டித் தலையை ஆட்டி
வந்து போகுது – பூச்சி
வாயில் கௌவிப் பிடித்துத் தின்று
வாழ்க்கை ஆவுது!

நூலைக் கட்டிச் சிறுவர்கள்
நோக வைக்கிறார்கள் - அவை
நோக்கிச் சிலர் கல்லை எறிந்து
சாக வைக்கிறார்!

ஐயோ! பாவம் பச்சோந்தி
அழகை ரசிக்கணும் - இதை
அடிப்பதும் வீண்! பிடிப்பதும் வீண்!
அன்பாய் நேசிக்கணும்!

01. பாடலில் குறிப்பிடப்பட்ட பிராணியின் பொதுவான பண்பு யாது? ………………..….

02. இதில் இடம்பெற்றுள்ள வர்ணங்களைத் தருக. ……………………………………..

03. பச்சோந்தியின் உணவு எதுவென பாடல் குறிப்பிடுகின்றது? ……………..…………

04. மடக்கேறும் அரவும் கொண்ட சொல் எது? ………………………………………...

05. ஒவ்வொருநாளும் எனும் கருத்தைத் தரும் சொல் எது? ……………………………

06. இதில் காணப்படும் சினைப் பெயரை எழுதுங்கள். …………………………………

07. எழுத்துப் பிழைகள் அற்ற சொல்லின் கீழ் கீறிடுங்கள்

i. வெள்ளம் / வெள்லம்  ii. தீவாளி / தீபாவளி
iii. பாவற்காய் / பாகற்காய்  iv. இங்கனம் / இங்ஙனம்  v. தேனீர் / தேநீர்

08. ஒத்தகருத்து. எதிர்கருத்துச் சொற்களை எழுதுங்கள்

| சொல் | ஒத்தகருத்து | எதிர்கருத்து |
|---|---|---|
| i. இன்பம் | …………………. | ……………………. |
| ii. காடு | …………………. | ……………………. |
| iii. பெரிய | …………………. | ……………………. |
| iv. அழகான | …………………. | ……………………. |
| v. சென்றனர் | …………………. | ……………………. |

09. தொடர்புபடுத்துங்கள்

ய்
ல்
ற்
ட்
ன்
ந்
ஞ்
ம்

வல்லினம்
மெல்லினம்
இடையினம்

10. பொருத்தமான இரட்டைக்கிளவியை தெரிந்து எழுதுங்கள்.

i. கழுத்தில் தங்கச் சங்கிலி ……………. என மின்னியது. (குளுகுளு / பளபள)

ii. கல்லில் மோதிய கால் …………………. என வலித்தது. (கமகம / விறுவிறு)

iii. பலத்த சூறாவளியால் மரங்கள் ……………………. என முறிந்து விழுந்தன. (குடுகுடு / சடசட)

11. வாக்கியங்களில் காணப்படும் அடுக்குத் தொடர்களின் கீழ்க் கோடிடுங்கள்
i. கற்கள் குவியல் குவியல்களாக கொட்டிக் கிடந்தன.
ii. திராட்சைப் பழங்கள் குலை குலையாக பந்தலில் தொங்கின.
iii. எறும்புகள் தரையில் சாரை சாரையாக ஊர்ந்து சென்றன.

12. வாக்கியங்களில் காணப்படும் இடப்பெயர்களின் கீழ் கோடிடுக.
i. சிங்கத்தின் வீட்டில் கொண்டாட்டம்.
ii. எனது பாடசாலை கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ளது.
iii. வீட்டுத் தோட்டம் அழகானது.

**II. பொருத்தமான நிறுத்தற்குறிகளை இடுங்கள்.**

13. கடற்கரையில் சிறுவர்கள் கூடி விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

……………………………………………………………………………………

14. வேடுவத் தலைவரே தாங்கள் வந்ததிற்கான காரணத்தை அறிய ஆவலுடன் உள்ளேன்.

……..………………………………………………………………………….

15. தோட்டத்தில் சிவப்பு நீலம் மஞ்சள் வெள்ளை நிற மலர்கள் காணப்படுகின்றன

……………………………………………………………………………………

16. இறந்தகாலச் சொற்களை நிகழ்காலச் சொற்களாக மாற்றி எழுதுங்கள்

i. வந்தான் - …………………………  ii. ஆடினாள் - ………………………

iii. அழுதாள் - ………………………

- **கீழே தரப்பட்டுள்ள பழமொழிகளைப் பூரணப்படுத்துக.**

17. அடம்பன் ………………….. திரண்டால் …………………..


18. காற்றுள்ள ………………… தூற்றிக் ……………………

19. கீழே கொடுக்கப்பட்ட சொற்களின் சிங்கள கருத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.
i. நூறு - ……………………….……..  ii. நெற்றி - ……………….………..…

iii. வியாழக்கிழமை - ……………..……..  iv. சித்தி - ……………………………

20. பின்வரும் படங்கள் குறிப்பிடும் ஆங்கில கருத்தை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.





i. …………………..………..  ii. …………..…………….…….

**III.**

21. படத்தை அவதானித்து விடை எழுதுங்கள்.

| | | |
|---|---|---|
| பாடசாலை | கோயில் | சந்தை |
| பொலிஸ் நிலையம் |  | வைத்தியசாலை |
| வங்கி | பஸ் தரிப்பிடம் | தபாற் கந்தோர் |

i. மரத்திற்கு கிழக்குத் திசையில் ……………………….…… அமைந்துள்ளது.

ii. வங்கி இருப்பது மரத்திற்கு ……………………………………….. ஆகும்.


iii. வைத்தியசாலைக்கு மேற்குத் திசையில் ………………….. அமைந்துள்ளது.

iv. ……………..…….. ற்கு வடமேல் திசையில் பாடசாலை அமைந்துள்ளது.

v. பாடசாலைக்கு வலது பக்கமாகவும் பஸ் தரிப்பிடத்திற்கு வடக்கு திசையிலும் ……………………..…. அமைந்துள்ளது.

22. இரண்டு கடைகளுக்கு 590 முட்டைகளை சமமாகப் பகிர்ந்து கொடுக்கப்படின் ஒரு கடைக்குக் கிடைக்கும் முட்டைகளின் எண்ணிக்கை யாது? ……………………..

23. புகையிரதம் ஒன்றில் 620 பயணிகளுக்குப் பயணம் செய்ய முடியும் எனின், அவ்வாறான 5 புகையிரதங்களில் பயணம் செய்யக்கூடிய பயணிகளின் மொத்த எண்ணிக்கை யாது? ……………………………………………………..……….




24. A மற்றும் B தராசுகளில் நிறுக்கப்பட்ட மீனின் மொத்த நிறை எவ்வளவு?


……………………………………………………………………………….…

25. A தராசிலுள்ள மீனைவிட B தராசிலுள்ள மீனின் நிறை எவ்வளவு அதிகமாகும்?

………………………………………………………………………………..

26. இரண்டு தராசுகளிலும் உள்ள மீன்களின் நிறை சமமாகுவதற்கு A தராசினுள் இன்னும் எவ்வளவு நிறை கொண்ட மீனை இட வேண்டும்? ……………………..

27.




A யிலிருந்து D இற்கான தூரம் 519m ஆகும். மோகன் A யிலிருந்து B வரையிலான தூரத்தை நடந்து சென்றான்.
i. அவன் பயணம் செய்த மொத்த தூரம் யாது? …………………………………..

ii. அவன் இன்னும் பயணம் செய்ய வேண்டிய தூரம் யாது? ………………..….

iii. C இலிருந்து D வரையான தூரம் எவ்வளவு? ……………………….....…..

iv. AB இற்கும் CD இற்கும் இடையிலான தூரம் எவ்வளவு? …………………..…


28. அட்டவணையைப் பூரணப்படுத்துங்கள்

| எண் | எண் பெயர் |
|---|---|
| i. …………………….. | மூவாயிரத்து ஐந்து |
| ii. 2400 | ……………………………………… |
| iii. 7036 | …………………………..……….. |
| iv. ……………………. | ஏழாயிரத்து முந்நூற்று அறுபது |

29. பிள்ளையொன்று தன்னிடமிருந்த பணத்தில் அரைவாசியைக் கொடுத்து கதைப் புத்தகங்களை வாங்கினார். எஞ்சிய பணத்தில் ¼ ஐக் கொடுத்து பென்சில் பெட்டியொன்றை வாங்கிய பின்னர் அவரிடம் ரூபாய் 75.00 கையிருப்பில் இருந்தது. அவரிடமிருந்த பணத்தொகை எவ்வளவு? ………………………………………..…….


**IV. சரியான விடையின் கீழ் கோடிடுக.**

30.



உருவில் காட்டப்பட்டுள்ளது,
i. கப்பி
ii. நெம்புகோல்
iii. சாய்தளம்

31. இவ் உலர் மின் கலங்கள் இரண்டினதும் கொள்ளளவு
i. A யை விட B அதிகமாகும்
ii. A யும் B யும் சமமானவை
iii. B யிலும் A அதிகம்





32. ஏலேலோ ஐலசா… ஏலேலோ ஐலசா எனும் பாடல்
i. உழவர் பாடல்  ii. மீனவப் பாடல்  iii. குயவர் பாடல்

(12ஆம் பக்கம் பார்க்க)

(11 ஆம் பக்கத் தொடர்)

# புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

33. நீருள்ள பாத்திரத்தில் றெஜிபோம் துண்டின் மீது சட்டக்காந்தத் துண்டு வைத்து, நீரில் மிதக்க விடப்பட்டுள்ளது. காந்தத்துண்டு ஓய்வுக்கு வந்த பின் அதன் வடமுனை எத்திசைக் காட்டி நிற்கும்

i. தெற்கு
ii. வடக்கு
iii. கிழக்கு

34. வீட்டைச்சுற்றி அமைக்கப்படும் வேலி மற்றும் வாயிற் கதவினால்
i. வீடு தூய்மையாகும் ii. வீடு அழகுறும் iii. வீடு பாதுகாப்பு பெறும்

35. பூங்கன்று ஒன்றை நடுவதற்கு மண்ணை கிளறுவதற்கு பொருத்தமான உபகரணம் எது?
i.  ii.  iii. 

36. 
மஞ்சள் நிறப் பின்னணியில் கறுப்பு நிறத்தால் காணப்படும் இவ்வுருவில் காட்டப்படும் வீதிசமிக்ஞை யாது?
i. இடது பக்கத்தினூடாக வாகனங்கள் பிரதான வீதியில் ஒன்றிணையும் சந்தி முன்னால்
ii. முதலில் இடது பக்கத்திற்கு செல்லும் பெரிய சந்தி முன்னால்
iii. இடது பக்கத்திலிருந்து வரும் வாகனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

37. பெரும் வீதிகளிலுள்ள ஒளிச் சமிக்ஞைத் தூணில் மஞ்சள் நிற விளக்கு ஒளிர்வதன் கருத்து
i. வாகனங்கள் பயணிக்கலாம்
ii. வாகனங்கள் பயணிக்க ஆயத்தமாகலாம்
iii. வாகனத்தை வலது பக்கம் திருப்பலாம்

38. சூழலில் ஏதாவது ஒரு தாவரமோ அல்லது விலங்கோ தேவையான அளவைவிட அதிகரிக்குமானால் அது சுற்றுப்புறச் சூழலில் ஏற்படுத்தும் தாக்கம்
i. நீர்ப் பற்றாக்குறை ii. சமநிலை தன்மை இல்லாமல் போகும்
iii. வெப்பநிலை அதிகரிக்கும்

39. புத்தாண்டு காலத்தில் மருத்துநீரைப் பயன்படுத்துபவர்கள்
i. இந்துக்கள் ii. முஸ்லிம்கள் iii. சிங்களவர்

40. பெருக்க மரம் அமைந்துள்ள இடம்
i. கண்டி ii. மன்னார் iii. கதிர்காமம்

41. கிரி கொரங்ஹா நடனத்தை நிகழ்த்தும் மக்கள் இனம் எது?
i. முஸ்லிம்கள் ii. ஆதிவாசிகள் iii. தமிழர்கள்

42. இவ்விடம் பிரசித்தி பெறக் காரணம்,

i. மரவேலைப்பாடுகளுக்கு
ii. கற்சிற்ப வேலைப்பாடுகளுக்கு
iii. சுவர் ஓவியங்களுக்கு

43. பிராணிகளின் வரிசையை சிற்பமாகக் கொண்ட கலைப்படைப்பு காணப்படுவது
i. இரட்டைக் குளம் ii. சந்திரவட்டக்கல் iii. எம்பக்க தேவாலயம்

44. இலங்கையின் வரலாறு பற்றிய தகவல்கள் உள்ளடக்கிய பிரதான நூல்,
i. மகாவம்சம் ii. சலலீஹினி காவியம் iii. காதக்கதை

45. ருவன் வெலிசாய, தூபாராமை ஆகியவற்றை கட்டுவித்த மன்னர்கள் முறையே
i. துட்டைகைமுனு, பண்டுகாபய மன்னன்
ii. தேவநம்பியதீச மன்னன், மகாசேன மன்னன்
iii. துட்டைகைமுனு மன்னன், தேவநம்பியதீச மன்னன்

46. கெப்டன் டோசன் கோபுரம் அமையப்பெற்ற பிரதான வீதி
i. கொழும்பு, காலி பிரதான வீதி ii. கொழும்பு, கண்டி பிரதான வீதி
iii. கொழும்பு, புத்தளம் பிரதான வீதி

47. பின்வரும் மலர்களில் நறுமணம் வீசாத மலர்
i. மல்லிகை ii. பவள மல்லிகை iii. நந்தியாவட்டை

48. வருடம் முழுவதும் பூக்கும் தாவரம்
i. வில்வம் ii. முருங்கை iii. தென்னை


49. இலங்கைக்கு மட்டும் உரித்தான தாவரம்
i. சாத்தாவாரிய ii. பலா iii. இலுப்பை

50. பாதுகாப்புக்காக தலை, கால் என்பனவற்றை ஓட்டினுள்ளே இழுத்துக் கொள்ளும் பிராணி
i. நத்தை ii. எலி iii. முள்ளம் பன்றி

51. யானைகள் சரணாலயம் அமைந்துள்ள இடம்
i. தெஹிவளை ii. பின்னவலை iii. கண்டி


52. ஒலி அலைகள் எழுப்புவதன் மூலம் தனது உணவைத் தேடிக் கொள்ளும் பிராணி
i. கங்காரு ii. தவளை iii. வௌவால்

53. ஆபத்தானது ஆனாலும் தொற்று நோய் அல்லாதது
i. பெரியமுத்து ii. நீரிழிவு iii. சின்னமுத்து


54. கொத்தன் பயன்படுத்தும் உபகரணம்
i.  ii.  iii. 

55. நோயில் இருந்து பாதுகாக்கும் உணவு
i. மீன் ii. முட்டை iii. பசளி

56. ஏப்ரன் பாவிக்கும் சந்தர்ப்பம்
i. வயல் வேலையின் போது ii. சமையலின் போது
iii. சாப்பிடும் போது

57. 
படத்தில் காட்டப்பட்டுள்ள தையல்
i. கம்பளித் தையல்
ii. நரம்புத் தையல்
iii. சிறுநூலோடி

58. பிள்ளையொன்று பிரச்சினைகள் எதும் ஏற்பட்டால் அறிவித்தல் வழங்க வேண்டிய சிறுவர் உதவி சேவையின் தொலைபேசி இலக்கம்
i. 119 ii. 1919 iii. 1929

59. படத்தில் காட்டப்பட்டுள்ள உபகரணத்தைப் பயன்படுத்தி அளக்கப்படுவது

i. காற்றின் வேகம்
ii. மழையின் வேகம்
iii. காற்று வீசும் திசை

60. "வாகன விபத்துக்களைத் தவிர்ப்போம்" தரப்பட்ட தலைப்பில் கருத்துள்ள 3 வாக்கியங்கள் எழுதுங்கள். ஒவ்வொரு வாக்கியமும் 5 சொற்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகள் சரியாகவும் எழுத்துப் பிழைகள் இல்லாதிருத்தல் வேண்டும்.

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

## கடந்த வார (14.06.2024) வினாத்தாள் l இற்கான விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 01. 3 | 11. 1 | 21. 2 | 31. 2 |
| 02. 3 | 12. 2 | 22. 2 | 32. 2 |
| 03. 3 | 13. 1 | 23. 2 | 33. 3 |
| 04. 1 | 14. 1 | 24. 2 | 34. 2 |
| 05. 3 | 15. 3 | 25. 2 | 35. 3 |
| 06. 2 | 16. 3 | 26. 1 | 36. 3 |
| 07. 2 | 17. 2 | 27. 3 | 37. 1 |
| 08. 1 | 18. 2 | 28. 3 | 38. 2 |
| 09. 2 | 19. 3 | 29. 1 | 39. 3 |
| 10. 1 | 20. 3 | 30. 2 | 40. 3 |

அ /நாச்சியாதீவு

## முஸ்லிம் மகாவித்தியாலயத்துக்கு இரண்டு மாடிக் கட்டடம் நிர்மாணம்

**திறப்பனை தினகரன் நிருபர்**

அ /நாச்சியாதீவு முஸ்லிம் மகா வித்தியாலய மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்கு உதவும் முகமாக குவைத் அரசாங்கத்தின் நிதி உதவித் திட்டத்தின் கீழ் புதிதாக இரண்டு மாடிகளை கொண்ட கட்டடம் ஒன்றை அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு எதிர்வரும் 23ஆம் திகதி நாச்சியாதீவு முஸ்லிம் மகா வித்தியாலய வளாகத்தில் அதிபர் றொஹான் ஆப்தீன் தலைமையில் நடைபெறவுள்ளது.

அல் ஹிமா இஸ்லாமிய சமூக சேவைகள் நிறுவனத்தின் இலங்கை பணிப்பாளர் அஷ் ஷெய்க் நூறுல்லா (நளீமி) முயற்சியால் கட்டப்படும் இக்கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வின் பிரதம அதிதியாக இலங்கைக்கான குவைத் தூதுவர் கலாப் எம்.எம்.புத்ஹைர் கலந்து சிறப்பிக்கவுள்ளதோடு சிறப்பு விருந்தினர்களாக அநுராதபுர மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான், இஸ்லாமிய சமூக சேவைகள் நிறுவனத்தின் இலங்கை பணிப்பாளர் நூறுள்ளா (நளீமி), ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக நாச்சியாதீவு பிரதேச கல்விப் பணிப்பாளர் எம்.கே.எம். ஜாபர், ஜாமியா நளீமியா சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷெய்க் எஸ்.எச். எம்.பளீல் (நளீமி), நாச்சியாதீவு ஜும்மா பள்ளிவாசல்கள் சம்மேளன தலைவர் தேசமான்ய ஏ.ஆர்.எம். தாரிக் உட்பட பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பாடசாலையின் பழைய மாணவர் சங்கம், அதிபர் ஆசிரியர்கள் பெற்றோர், நலன் விரும்பிகள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொள்ளனர்.

# ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் பேராளர் மாநாடும் பெருந்தலைவர் கனவும்

**நாச்சியாதீவு பர்வீன்**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் 33 ஆவது பேராளர் மாநாடு நாளை 22ஆம் திகதி சனிக்கிழமை காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீமின் தலைமையில் நடைபெறவுள்ளது. பேராளர் மாநாடுகள் வெறுமனே ஒரு சிறுபான்மையினரின் நலனோம்பும் விடயங்களில் அந்த இனம் சார்ந்த ஒரு கட்சியின் அவசியத்தை கடந்த கால வரலாறுகள் நினைவுபடுத்துகின்றன.

பன்முக கலாசாரத்தையும், பல்லின இனக்குழுமத்தையும் கொண்ட ஒரு நாட்டில் பெரும்பான்மை சமூகத்தை பிரநிதிப்படுத்தும் கட்சிகளின் செயற்



பாடுகளே சிறுபான்மை கட்சிகளின் அவசியத்தையும், தேவைப்பாடுகளையும் தீர்மானிக்கின்றன எனலாம் அந்தவகையில் இலங்கையில் சிறுபான்மையான முஸ்லிம் சமூகத்திற்கான தனியான ஒரு கட்சியின் தேவைப்பாட்டை உணர்ந்தே பெருந் தலைவர் அஷ்ரப் இக்கட்சியை உருவாக்கினார் எனலாம்.

பெருந்தலைவரின் அகால மரணத்தின் பின்னர் பெருந்தலைவரால் அடையாளப்படுத்தப்பட்ட, அவரின் அருகாமையிலேயே அவரது ஆசுவாசத்துடன் கலந்து வாழ்ந்த இன்றைய தலைவர் ரவூப் ஹக்கீமுக்கு அந்த இடம் கிடைத்தது எனலாம்.

முஸ்லிம்கள் பாதிக்கப்படுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அச்சமூகத்தின் நேரடி பிரதிநிதிகளான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் களத்தில் நின்று செயற்பட்டு வருகிறது.

மிகவும் கடுமையான காலகட்டத்தில்ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் 33 ஆவது பேராளர் மாநாடு நடைபெறுகிறது.

இந்த மாநாடு கட்சியில் ஏற்கெனவே உள்ள பிழைகள் சரிசெய்யப்பட்டு போராளிகளின் எதிர்பார்ப்புகளையும், பெருந்தலைவர் அஷ்ரப்பின் கனவுகளையும் நிறைவேற்றுவதாக அமையுமா?



கெக்கிராவ கல்வி வலயத்திற்குட்பட்ட மடாட்டுக்கம முஸ்லிம் வித்தியாலயத்தில் புதிய வகுப்பறை கட்டடம் ஒன்றை அமைப்பதற்காக அனுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹுமான் அடிக்கல் நட்டபோது பிடிக்கப்பட்ட படம்

(படம் : அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

## தீமிதிப்பில் பங்கேற்ற சிறுவனுக்குக் காயம்

**(உடப்பு குறூப் நிருபர்)**

முந்தல் ஸ்ரீ திரௌபதியம்மன் ஆலயத்தில் கடந்த 19ஆம் திகதி நடை தீமிதிப்பில் பங்கேற்ற சிறுவன் கால் இடறி தீயில் விழுந்துள்ளார்.

காயமடைந்த நிலையில் அங்கு நின்றவர்களினால் காப்பாற்றப்பட்டு முந்தல் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

மார்புப் பகுதியில் ஏற்பட்ட தீக்காயம் காரணமாக அவர் மேலதிக சிகிச்சைக்காக சிலாபம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

## முந்தலில் விபத்து; இருவர் படுகாயம்

**உடப்பு குறூப் நிருபர்**

முந்தல் பகுதியில் நேற்று வியாழக்கிழமை (20)காலை இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் படுகாயமடைந்த நிலையில் முந்தல் ஆம்புலன்ஸ் வண்டி மூலம் மேலதிக சிகிச்சைக்காக சிலாபம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக முந்தல் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கணவனும் மனைவியும் முந்தலில் உள்ள தமது கடைக்கு தேவையான பொருட்களை வாங்கி விட்டு வீடு திரும்பும் வழியில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. புத்தளத்தில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற முச்சக்கர வண்டி இவர்கள் மீது மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

ஒருவரின் கால் முறிந்த நிலையில் வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணையை முந்தல் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கண்டி பதியுதீன் மஃமூத் மகளிர் கல்லூரியில்

# 25 இலட்சம் ரூபா செலவில் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட வகுப்பறைக் கட்டடம் திறப்பு!

### ஆரம்பப் பிரிவு மாணவிகளின் பெற்றோரின் பாராட்டத்தக்க பணி



கண்டி பதியுதீன் மஃமூத் மகளிர் கல்லூரியின் ஆரம்பப் பிரிவு கட்டடம் அப்பிரிவு மாணவிகளின் பெற்றோரினால் 25 இலட்சம் ரூபா செலவில், மீள் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு அதிபர் தலைமையில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

சுமார் 80 வருடம் பழைமை வாய்ந்த கட்டடத்தின் கூரையினை பாடசாலை நிர்வாகத்தின் வேண்டுகோளுக்கு இணங்க கல்வி அமைச்சின் அனுமதியுடன் இப்பாடசாலை மாணவிகளின் பெற்றோர் மீளவும் திருத்தியமைத்தனர். இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட அதிபர் நதீரா இஸ்மாயில், இக்கட்டடத்தை உத்தியோகபூர்வமாக திறந்து மாணவிகளின் பயன்பாட்டுக்காக கையளித்தார்.

இதில் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர் ஹிதாயத் சத்தார். பாடசாலை அபிவிருத்திக் குழுவின் செயலாளர் கமல் ஹஸன், அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள், பழைய மாணவிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட அதிபர் நதீரா இஸ்மாயில் உரையாற்றும் போது,

இன்றைய நாளை நாம் எல்லோரும் மிகவும் மகிழ்ச்சிகரமான நாளாகக் கொள்ளலாம். இன்று பெரிய வெற்றியினைக் கொண்டாடக் கூடிய நாளென்று நான் கருதுகின்றேன். எங்களுடைய நிர்வாக குழுவினருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இது தனியாக செய்யக் கூடியது அல்ல. நான் இந்தப் பாடசாலைக்கு கடந்த வருடம் ஒக்டோபர் 26 ஆம் திகதி வந்தேன்.

இங்கு வந்து இரு நாட்களுக்குள் ஆரம்பப் பிரிவு பாடசாலையின் பக்கம் சென்று அங்குள்ள நிலவரம் குறித்து அறியவேண்டிய தேவை எனக்கு இருந்தது. ஆரம்பப் பிரிவு அதிபர் தமது பிரிவை எவரும் வந்து பார்ப்பதில்லை என்று என்னிடம் கவலை தெரிவித்தார்.

அத்துடன் இந்தப் பிரிவில் பௌதிக வளப் பற்றாக்குறைகள் அதிகளவில் காணப்படுவது குறித்து முறைப்பாட்டை முன்வைத்தார்.

அந்த சின்னஞ் சிறிய பிள்ளைகளைப் பார்த்தவுடன் எனக்கு மிகவும் கவலை தோன்றியது. இந்தப் பிள்ளைகள் கற்பதற்கு போதிய இடவசதிகள் இருக்கவில்லை. சரியான வகுப்பறை வசதிகள் இல்லை. பாடசாலைக்குரிய பௌதிக வளத்துக்கு பாரிய பற்றாக் குறை நிலவியது. இதில் இருந்து மாற்று நடவடிக்கையை மேற்கொள்ள எந்த வழியுமில்லை. இச் சூழ்நிலையில் வகுப்பறைக் கட்டடம் அவசியமாகத் தென்பட்டது.

எமது பாடசாலை சவ்லதியா மகா வித்தியாலம் என்றுதான் எல்லா ஆவணங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. பழைய மாத்தளை வீதியில் அமைந்துள்ள இடம் எமது பாடசாலையின் ஆரம்பப் பிரிவுக்கு உரியது என்பதற்கான சான்றுகள் குறைந்தளவிலேயே காணப்பட்டன.

எனினும் இந்தச் சந்தர்ப்பத்தில் சவுலதியா பாடசாலை என்று அழைக்கப்படும் எமது பதியுதீன் மகளிர் கல்லூரியின் ஆரம்பப் பிரிவை ஒன்றிணைத்து இயங்குவதற்கு நடவடிக்கையினை மேற்கொண்ட ஹமீட் சாகுல் லெப்பை இதற்காக கடுமையாக உழைத்துள்ளார். இவர் இதனை கண்டி பதியுதீன் மஃமூத் மகளிர் கல்லூரியின் ஒரு பகுதியாக இணைத்துக் கொள்ள மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டுள்ளார். அவருக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இங்கே காணப்படும் வகுப்பறைக் கட்டிடங்கள் சுமார் 80 வருடங்கள் பழைமை வாய்ந்த கட்டடங்களாகும். உண்மையிலே இங்குள்ள வகுப்பறைக் கட்டடங்களில் மீள் நிர்மாணப் பணிகளை மேற்கொண்டு திருத்தியமைப்பது இயலாத காரியம். சிறந்த பொறியியலாளர்களின் திட்டமிடலுடன் மாடி வகுப்பறைகளைக் கொண்ட கட்டடத் தொகுதிகளைப் பெற்றுக் கொள்ள முடியுமாயின் அது பெரிய வெற்றியாகும். அது எங்களுடைய முழுமையான எதிர்பார்ப்பாக இருந்தது.

எனினும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் ஆரம்பப் பிரிவுக்கு இங்கு பெரியளவில் செலவு செய்ய முடியாது. அவ்வாறு செலவு செய்தால் நாங்கள் சிரமத்தை எதிர்நோக்க வேண்டி வரும் என்று ஆரம்பப் பிரிவு அதிபரிடம் தெரிவித்தேன். ஆனாலும் கடந்த வருடம் ஒக்டோபர் மாத இறுதியில்தான் அங்கு சென்றேன். தொடர்ந்து ஆரம்பப் பிரிவுக்கு சென்று பார்க்கும் போதெல்லாம் கூரை ஓடுகள் உடைந்து சிறிய சிறிய துண்டுகள் கீழே விழுந்து காணப்பட்டன. அதனால் பிள்ளைகளுக்கு ஆபத்து ஏற்படலாம் என்று நாங்கள் உணர்ந்தோம். இது தொடர்பில் பெற்றோரும் ஆலோசனை முன்வைத்தார்கள்.

இது அரசாங்க கட்டடம் நாங்கள் விரும்பியபடி செலவு செய்யவோ விரும்பியபடி கட்டவோ முடியாது. வீட்டில் கட்டுவது போன்று கட்ட முடியாது. அரசாங்கத்தின் சட்ட திட்டங்களுக்கு இணங்கவே செயற்பட வேண்டும். விசேடமாக பெற்றோருக்கு நன்றி தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். அதற்காக குழுவொன்றை







நியமித்துக் கொண்டார்கள். அந்த குழுவினர் இந்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் இன்று வரையிலும் பெரும் பங்காற்றியுள்ளனர்.

இதன் முதுகெலும்பாக பெற்றோரே உள்ளார்கள். பிரமாண்டமாக செலவு செய்து புனரமைக்க முடிந்தமையிட்டு பெருமையடைகின்றேன். எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே. எல்லோரும் ஒன்றிணைந்து செயற்பட்டதை, இங்குபோல நான் எங்கும் கண்டதில்லை. பெற்றோரின் நன்கொடைகள் மூலமே இந்த கூரையை செய்து கொள்ள முடிந்தது. அதே வேளையில், ஒரு ரூபாயாக இருந்தாலும் அது எவ்வாறு, எதற்கு செலவு செய்யப்பட்டது என்பதை அறிந்து கொள்ளும் உரிமை அன்புளிப்பு செய்த அனைவருக்கும் உள்ளது. பெற்றோர் இதனை மேற்கொண்டனர். இவர்களுடைய இந்த சேவைக்கு சாட்சியாக நான் இருக்கின்றேன். நாங்கள் ஆரம்பத்தில் வேலையை ஆரம்பிக்கின்ற போது 18 இலட்சம் மதிப்பீடு செய்யப்பட்டது.

ஆனாலும் மத்திய மாகாண கட்டடப் பொறியியலாளர் பிரிவு மற்றும் தொழில்நுட்ப அதிகாரி ஆகியோருடைய ஆலோசனையின் பிரகாரமே இந்த கூரையின் வேலைகள் நிறைவு பெற்றன. இந்த தொழில்நுட்ப அறிவைப் பெற்றுக் கொள்வதற்காக அதிகளவு செலவு செய்யப்பட்டது. இதற்காக 6 இலட்சம் மேலதிக செலவு ஏற்பட்டது. பெற்றோர் இதற்காக வழங்கிய நன்கொடைகளுக்கு மேலதிகமாக எங்களுடைய பாடசாலை அபிவிருத்திக் குழவின் நிதியில் இருந்து 3 இலட்சம் ரூபா வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு இந்த வேலையை நிறைவு செய்ய வேண்டும் என்ற முடிவுக்கு வந்து, எங்கள் பாடசாலையில் இவ்வாறான பெரியதொரு வேலைத் திட்டத்தை நாங்கள் முடித்துள்ளோம்.

ஆரம்பப் பிரிவு அதிபர் கையினி மிகவும் பொறுப்புணர்வுடன் செயற்பட்டு வருகின்றார். சிறந்த முறையில் எல்லாவகையிலான வேலைத் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கி வந்தார். அதேபோன்று வகுப்பாசிரியைகளும் பங்களிப்பு நல்கினார். கூரை வேலைக்கு மட்டுமல்ல அதற்கப்பால் சென்று பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளுக்குரிய சூழலை உருவாக்க வேண்டும். அந்த சூழலை உருவாக்குவதற்குத் தான் அதிபரும் ஆசிரியைகளும் மிகுந்த சிரமத்தோடு ஊண், உறக்கமில்லாமல் உழைத்துள்ளார்கள்.

இரவு பன்னிரண்டு மணிக்கு தொலைபேசி எடுத்தாலும் பெற்றோர் ஒத்துழைப்பு வழங்க தயாராக இருந்தார்கள். நேற்று கல்வி அமைச்சின் தேசிய பாடசாலைப் பிரிவின் பணிப்பாளர் இக்கட்டடத்தை பார்வையிட வருகை தந்திருந்தார். அவர் இதனைப் பாராட்டிச் சென்றார். இதேபோன்று இப்பாடசாலைப் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளிலும் முன்னேற்றத்தை ஏற்படுத்த பாடசாலை ஆசிரியர் சமூகம் தயாராக இருக்கின்றது. அதே போன்று பெற்றோரும் தயாரானால் ஒரு சிறந்த கல்வி இலக்கை நோக்கிப் பயணிக்க முடியும்.

எல்லாவற்றிற்கும் மேலாக இதற்காக பங்காற்றிய அனைவருக்கும் என்னுடைய உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பெற்றோர் சார்பில் நன்றியுரை நிகழ்த்திய மத்திய மாகாண முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஹிதாயத் சத்தார் .

முதலாம் ஆண்டு பிள்ளைகளை காலையில் பாடசாலைக்கு கொண்டு வந்து விட்டுச் செல்லும் போதும் பாடசாலை விடும் வரையிலும் எமது மனதில் சஞ்சலம் இருந்தது. இந்த இடத்தில் கல்வி கற்பது எங்களுடைய பிள்ளைகள். இங்கு கல்வியை வழங்குவதில் பாடசாலையும் கண்டி பதியுதீன் மஃமூத் மகளிர் கல்லூரி ஆசிரியர் குழாமும் உள்ளனர். கல்விக்கு உதவி செய்யக் கூடிய பாக்கியம் இப்பாடசாலையின் கல்வி பயிலும் பிள்ளைகளின் பெற்றோருக்கு கிடைக்கப் பெற்றது.

எமது பிள்ளைகள் படிக்கும் வகுப்பறையில் ஓடுகள் உடைந்து விழுகின்றன. அதற்குரிய பாதுகாப்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற அறிவுறுத்தல்கள் எங்களுக்கு கிடைக்கப் பெற்றன.

அந்த வகையில் பாதுகாப்பு என்ற விடயத்தை விட இப்பாடசாலையில் உள்ள இரு வகுப்பறைக் கட்டடத் தொகுதிகளையும் முற்றாக அழித்து புதிய நிர்மாணப் பணிகளுக்குச் செல்வதுதான் பெரிய செயற் திட்டம் ஆகும் என்று நாங்கள் கருதினோம். எனினும் அதற்காக ஆரம்ப கட்ட வேலைகளுக்கு பாரிய செலவு ஏற்படும் என்ற கருத்துகள் முன்வைக்கப்பட்டன.

பாடசாலை நிர்வாகத்தின் ஆலோசனையின் படி தற்காலிகமாக கூரையினை புனரமைத்து பயன்படுத்துவோம் என்ற அடிப்படையில் எல்லா பெற்றோரும் இதற்கு முன்வந்து பங்களிப்பு நல்கியுள்ளார்கள். அவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்பாடசாலையின் அதிபர் தினந்தோறும் இவ்வேலைத் திட்டம் தொடர்பில் மேற்பார்வை மேற்கொண்டு எங்களுக்கு ஆலோசனை வழங்கியதோடு மட்டுமல்லாமல் இது தொடர்பில் கல்வித் திணைக்களத்துடன் பல தடவைகள் தொடர்பினை மேற்கொண்டு அதன் ஊடாகப் பெற்றுக் கொள்ள வேண்டிய சகல ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் சலுகைகளையும் பெற்றுக் கொள்வதில் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டார். அதேபோன்று ஆரம்பப் பிரிவு அதிபர் கையினியும் பாரிய அளவில் ஒத்துழைப்பையும் நல்லாதரவையும் வழங்கினார். இதில் விசேடமாக பாடசாலை அபிவிருத்திக் குழுவின் செயலாளர் கமல் ஹசன் உள்ளிட்ட குழுவினர் பெரும் உந்து சக்தியாக இருந்தார்கள். ஆசிரியர் குழாத்தினரும் ஆதரவு வழங்கினார்கள். தொழில்நுட்ப உதவியாளர்கள், பொறியியலாளர்கள் அனைவருக்கும் பெற்றோர் சார்பாக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றார்.









இக்பால் அலி...

# பெறுகை அறிவித்தல்

## தரக்கட்டுப்பாட்டு சாம்பிள்களை கொள்வனவு செய்தல் வைத்திய ஆராய்ச்சி நிலையம்

01. கீழே குறிப்பிடப்படும் தரக்கட்டுப்பாட்டு சாம்பிள்களை வழங்குவதற்காக கொழும்பு -08, டொக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை, இல. 357 எனுமிடத்தில் வைத்திய ஆராய்ச்சி நிலையத்தின் பிரதேச பெறுகைக் குழுத் தலைவரால் 2024.07.11 பி.ப. 2.00 வரை பொறியிடப்பட்ட கேள்வி ஆவணங்கள் ஏற்கப்படும். கேள்வி ஆவணங்களை மேற்படி முகவரியில் கணக்காளர் பணிமனையில் உள்ள கேள்விப் பெட்டியில் கொண்டு வந்து உள்ளிடலாம். அவ்வாறு இல்லையெனில் 2024.07.11 இற்கு முன்பு அம்முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம்.
    01. Internal Quality Control Samples - NEQAS Clinical Chemistry Programm in Biochemistry Laboratory
02. கேள்வி திறக்கப்படும் வேளையில் வழங்குநர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.
03. மீளளிக்கப்படாத ரூ. 1000/- வைப்புத் தொகையை வைத்திய ஆராய்ச்சி நலையத்தின் பணிப்பாளரின் பெயரில் மேற்படி உருப்படிக்காக செலுத்தி பெற்றுக் கொண்ட கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
04. பொறியிடப்பட்ட கேள்விகளை சமர்ப்பிக்கும் போது விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் மாதிரித் தொகுதிகள் இரு பிர7திகளுடன் சமர்ப்பித்தல் வேண்டும். இது பற்றிய ஆர்வம் காட்டுகின்ற வழங்குநர்கள், முகவர்கள், பிரதிநிதிகள் அல்லது பெயர் குறிப்பிடுபவர்கள் கீழ்க்காணும் தேவைப்பாடுகளை நிறைவேற்றிய பின்னர் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
    a) வியாபார பதிவுச் சான்றிதழுடன் கொழும்பு -08 வைத்திய ஆராய்ச்சி நிலையம், பணிப்பாளருக்கு எழுத்துமூல வேண்டுதலைச் சமர்ப்பித்து மற்றும்
    b) மீளளிக்கப்படாத வைப்புத் தொகை (ரூ. 1000.00) செலுத்தி
05. 2024.06.24 மு.ப. 10.00 முதல் 2024.07.11 பிற்பகல் 2.00 வரை வேலை நாட்களில் வைத்திய ஆராய்ச்சி நிலையத்தின் அலுவலகத்திலிருந்து கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
(தொ.பே. இல. 011-2693532/3/4 பெக்ஸ் 011-2691495)

**தலைவர்,**
**வைத்திய ஆராய்ச்சி நிலையம்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**டொக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு -08.**

## அறிவிப்பு

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 9 (1) இன் அடிப்படையில் பின்வரும் நிறுவனம் இணைக்கப்பட்டுள்ளது.

**நிறுவனத்தின் பெயர்:**
க்ளோபல் கிறீன் மார்ட் எஸ்எல் பிரைவேட் லிமிடெட்
**நிறுவனத்தின் எண்:**
P V 00301826
**பதிவு செய்யப்பட்ட அலுவலகம்:**
74, ஆராமய வீதி, கிரிந்த, ஹொண்டியாதெனிய
**இணைக்கப்பட்ட திகதி:**
27-05-2024

**இயக்குனர்**

## அறிவிப்பு

2007 ஆம் ஆண்டின் 07ஆம் நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 9 (1) இன் அடிப்படையில் பின்வரும் நிறுவனம் இணைக்கப்பட்டுள்ளது.

**நிறுவனத்தின் பெயர்:**
கொன்வொகிரிட் பிரைவேட் லிமிடெட்
**நிறுவனத்தின் எண்:**
P V 00302899
**பதிவு செய்யப்பட்ட அலுவலகம்:**
507/3A, வீரரோதர மாவத்தை, அர்ராவல, பன்னிப்பிட்டிய
**இணைக்கப்பட்ட திகதி:**
11-06-2024

**இயக்குனர்**

### மரணசாசனமில்லா சொத்தை உரிமை கோருவதற்கான அறிவித்தல் 1998ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டம் பிரிவு 55

கொழும்பு மாவட்டத்தின் ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவில் மாகம்மன ஒரு பகுதி எனும் கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல. 520004 கண்ட இல. 03 துண்ட இல. 0272 ஐக் கொண்ட காணியை உடைமை கொண்டிருந்த 306/78, முனசிங்ஹகம, மாகம்மன, ஹோமாகம எனும் விலாசத்தைக் கொண்ட ஹெட்டிஆரச்சிகே சுனில் எனும் ஆள் 2024.03.06 திகதி மரணமடைந்துள்ளார். அவரது உரித்தாளர் எவரேனும் இல.6 முதலாம் லேன், ரயில் நிலைய வீதி, ஹோமாகம என்ற இடத்தில் அமைந்துள்ள காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்துக்கு 2024.07.21 ஆந் திகதிக்கு முன்னர் சமுகம்தரவும்.

**ஆணையாளர் நாயகம்**
**காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்.**

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams

# இலங்கை பரீட்சைத் திணைக்களம்
# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை – 2024

2024 ஆம் ஆண்டிற்குரிய க.பொ.த. (உ.தர)ப் பரீட்சை 2024 நொவம்பர் மாதம் 25 ஆம் திகதி தொடக்கம் டிசெம்பர் மாதம் 20 ஆம் திகதி வரை நடாத்துவதற்கான ஒழுங்கமைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கமைய க.பொ.த. (உ.தர)ப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்குரிய விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தலை இத்துடன் அனுப்பி வைக்கின்றேன். விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2024.07.10 ஆகும்.

இப் பரீட்சைக்காக நிகழ்நிலை **(Online)** முறைமையில் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்களை பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் (www.doenets.lk) அல்லது நிகழ்நிலை பரீட்சை இணையதளத்தில் (https://onlineexams.gov.lk/eic) அல்லது பரீட்சைத் திணைக்களத்தின் செல்லிடத் தொலைபேசி செயலிக்குள் ("DoE" Mobile app) நுழைவதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன் விண்ணப்பங்களையும் சமர்ப்பிக்க முடியும்.

இப்பரீட்சைக்கு தனிப்பட்ட பரீட்சார்த்தியாக தோற்றவுள்ளவர்களின் விண்ணப்பங்கள் 2024 ஜூன் 20 ஆம் திகதியிலிருந்து ஜூலை 10 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். சகல விண்ணப்பதாரிகளும் இவ் அறிவித்தலை முழுமையாக நன்கு வாசித்து விளங்கிக்கொண்டு மேற்படி இணையதளத்தினுள் நுழைந்து நிகழ்நிலை (Online) முறைமையில் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தெரிவு செய்த நகரத்தையும் பாடங்களையும் குறிப்பிடும் போது சரியாகக் குறிப்பிட வேண்டுமென்பதில் விசேட கவனஞ் செலுத்த வேண்டும். ஒரு பரீட்சார்த்திக்கு ஆகக்கூடியது பிரதான பாடங்களில் 03 பாடங்களுக்கு மட்டுமே பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்படும். அதற்கு மேலதிகமாக அவசியமேற்படுமிடத்து பாட இலக்கம் 12 - பொதுச் சாதாரண பரீட்சைக்கும், பாட இலக்கம் 13 - பொது ஆங்கிலம் பாடத்திற்கும் விண்ணப்பிக்க முடியும்.

**பரீட்சைக்காக விண்ணப்பிக்கும்போது இரண்டு பிரதான படிமுறைகளை பின்பற்றல் வேண்டும்.**

**1வது படிமுறை** - விவரங்களை உள்ளடக்கி 'குறிப்பு இலக்கத்தை' (Reference number) பெற்றுக்கொள்ளல். உங்களது தனிப்பட்ட விவரங்களையும் பரீட்சை தொடர்பான விவரங்களையும் பாடங்கள் தொடர்பான விவரங்களையும் கட்டணம் செலுத்தும் முறை தொடர்பான விவரங்களையும் உள்ளடக்குக. நீங்கள் அஞ்சல் அலுவலகம் மூலம் கொடுப்பனவு செய்யின் குறிப்பு இலக்கம் (Reference number) ஒன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**2வது படிமுறை** - பரீட்சைக் கட்டணம் செலுத்துதலும் விண்ணப்பத்தை தரவிறக்கம் (Download) செய்தலும் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள 'குறிப்பு இலக்கத்தை' (Reference number) அஞ்சல் அலுவலகத்தில் வழங்கி பரீட்சைக் கட்டணத்தை செலுத்திய பின்னர் உங்களுக்கு கிடைக்கப்பெறும் குறுஞ்செய்தியில் (SMS) உள்ள இணைப்பை (link) செயற்படுத்தியோ அல்லது மீண்டும் வலைதளத்தில் நுழைந்தோ உங்களுக்கு கிடைக்கப்பெறும் "Download AL 2024 Application" ஐத் தெரிவு செய்து (Click) உங்களது விண்ணப்பப்படிவத்தை தரவிறக்கம் (Download) செய்து கொள்ள முடியும்.
நீங்கள் வங்கி அட்டை மூலம் கட்டணம் செலுத்துவதாயின் அது சரியாக நிறைவுற்ற பின்னர் மேலேயுள்ள icon ஐ பயன்படுத்தி விண்ணப்பத்தை தரவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

**பரீட்சைக் கட்டணத்தை அஞ்சல் அலுவலகம் மூலம் அல்லது எந்தவொரு வங்கி அட்டைகள் மூலமாகவும் செலுத்த முடியும்.**

**02. விண்ணப்பப்படிவம்**

**அறிவுறுத்தல்களுக்கமைய நிகழ்நிலை (Online) முறைமையில் விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்தி அதன் PDF வடிவத்தை அச்சுப்பிரதியெடுத்துக் கொள்ளவும். அச்சுப் பிரதியை தங்கள் பொறுப்பில் பாதுகாப்பாக வைத்துக் கொள்வதுடன் அவசியமேற்படுமிடத்து அதனை சமர்ப்பிப்பதற்கு தயாராகவும் இருத்தல் வேண்டும்.**

**அரச பாடசாலையில் கற்றுக்கொண்டு தனிப்பட்ட முறையில் விண்ணப்பிப்பது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு விண்ணப்பிக்குமிடத்து பரீட்சைப் பெறுபேற்றை இரத்துச் செய்து எதிர்வரும் காலங்களில் பரீட்சைகளுக்குத் தோற்றத் தடை விதிக்கப்படும்.**

**2.1 முறைமைக்குள் பிரவேசித்தல் - 1வது படிமுறை**

(i) விண்ணப்பங்களை பூர்த்தி செய்வதற்காக இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின்,
- உத்தியோகபூர்வ (www.doenets.lk) எனும் இணையதளத்தில் நுழைந்து "எமது சேவை" என்பதின் கீழுள்ள "Exam Information Centre" என்பதை Click செய்க. அல்லது
- பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ செல்லிடத் தொலைபேசி செயலியைப் (mobile application) பயன்படுத்தி "DoE" இற்குள் நுழைந்து "நிகழ்நிலை விண்ணப்பங்கள் (பாடசாலைப் பரீட்சைகள்)" ஐ Click செய்க. அல்லது
- https://onlineexams.gov.lk/eic ஐ Click செய்து நுழைக.

(ii) "G.C.E. AL – 2024 Application for student Registration" (Private) எனும் நிகழ்ச்சியைத் தெரிவு செய்வதன் மூலம் தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

(iii) உங்களின் தனிப்பட்ட தகவல்கள், தோற்றவுள்ள நகரம், மொழிமூலம் என்பவற்றை தெரிவு செய்த பின்னர் தோற்றவுள்ள பாடங்களை தெரிவு செய்து உள்ளடக்க முடியும்.

(iv) **(அ) (13) பொது ஆங்கிலம்:**
மூன்று பிரதான பாடங்களுடன் பொதுச் சாதாரண பரீட்சைக்கு மேலதிகமாக பொது ஆங்கில பாடத்திற்கும் விண்ணப்பிக்க முடியும். இப்பாட பெறுபேறு பல்கலைக்கழகப் பிரவேசத்திற்கு பயன்படுத்தப்படமாட்டாது. இப் பாடத்திற்காகப் பெறும் தரம் க.பொ.த. (உ.தர)ப் பரீட்சைப் பெறுபேற்று சான்றிதழில் குறிப்பிடப்படும்.

**(ஆ) (12) பொதுச் சாதாரண பரீட்சை:**
எவராயினும் ஒரு விண்ணப்பதாரி இலங்கையின் பல்கலைக்கழகமொன்றிற்கு அனுமதி பெற எதிர்பார்த்திருப்பின் கட்டாயமாக குறைந்தது 30 புள்ளிகளைப் பெறல் வேண்டும். இதற்கு முன்னர் (உ.தர)ப் பரீட்சைக்குத் தோற்றி அவர் 30 புள்ளிகளுக்கு அதிகம் பெற்றிருப்பாராயின் மீண்டும் தோற்ற வேண்டிய கட்டாயமில்லை.

**(இ) செய்முறைப் பரீட்சையுடன் கூடிய பாடங்கள்**
பாட இலக்கம் 28, 52, 53, 54, 55, 56, 57, 58, 59, 65, 66 ஆகிய பாடங்களுக்கு எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றுகின்ற சகல விண்ணப்பதாரிகளும் செய்முறைப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். இவ்விரு வகைப் பரீட்சைகளுக்கும் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு மாத்திரம் இப்பாடங்களுக்கான பரீட்சைப் பெறுபேறுகள் வழங்கப்படும். செய்முறைப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் அனுமதி அட்டையில் குறிப்பிட்ட திகதியில் செய்முறைப் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். உரிய தினத்தில் தோற்றத் தவறும் பரீட்சார்த்திகளுக்கு செய்முறைப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு வேறு ஒரு சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது என்பதுடன் செய்முறைப் பரீட்சை முழுமையாக நிறைவுற்ற பின்னர் மீண்டும் ஒருமுறை செய்முறைப் பரீட்சை நடாத்தப்படமாட்டாது.

(ஈ) கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள 2016/13 இலக்கமும் 2016.4.26 ஆம் திகதியுடைய சுற்றுநிருபத்திற்கமைவாக பாடங்கள் தெரிவுசெய்யப்பட வேண்டும். அச் சுற்றுநிருபத்திலுள்ள பாடத்துறைகளுக்கமைவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பாடத்துறைகளுடன் இணைந்தொழுகாத ஏனைய பாடச்சேர்மானங்களைத் தெரிவுசெய்யும் பட்சத்தில், விண்ணப்பதாரிகள் 'குறித்த பாடத்துறைகளில் எதிலும் அடங்காத' (Non stream) என அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுகையில் நாடளாவிய தரம் (Island Rank) மற்றும் 'மாவட்ட தரம்' (District Rank) வெளியிடப்பட மாட்டாது. அச்சுற்றுநிருபத்துக்கு இணைந்தொழுகாத பாடச்சேர்மானங்களைத் தெரிவு செய்வதால் பரீட்சார்த்திகள் முகங்கொடுக்க வேண்டியேற்படும் பிரச்சினைகள் தொடர்பான எந்த பொறுப்புக்களையும் இத்திணைக்களம் ஏற்றுக்கொள்ளாது என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

2.2 2024.07.10 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணிக்குப் பின்னர் இப்பரீட்சைக்காக விண்ணப்பிக்க முடியாது. குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் நிகழ்நிலை முறைமையில் விண்ணப்பிக்க முடியாது.

2.3 ஒரு விண்ணப்பதாரி ஒரு விண்ணப்பப்படிவத்தை மாத்திரமே அனுப்ப முடியும். தகவல்களை மாற்றி ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பப்படிவங்கள் அனுப்பும் சந்தர்ப்பத்தில் அவரது சகல விண்ணப்பப்படிவங்களும் இரத்துச் செய்யப்படும் என்பதுடன் அப்பரீட்சார்த்தி தொடர்பாக சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படும். பரீட்சைப் பெறுபேறுகளை வழங்கிய பின்னராயினும் இப்படியான முறைகேடான செயல் தெரியவரின் பெறுபேறு இரத்துச் செய்யப்படுவதுடன் சட்ட நடவடிக்கைக்கமைவாக தண்டணைக்குள்ளாவார்.

03. **பரீட்சைக் கட்டணம் செலுத்துதலும் விண்ணப்பப்படிவத்தை தரவிறக்கம் (Download) செய்தலும் - 2வது படிமுறை**
பரீட்சைக் கட்டணம் அஞ்சல் தபால் அலுவலகத்தின் மூலமோ வங்கி அட்டைகள் (Credit / Debit Payment) மூலமோ மேற்கொள்ள வேண்டும்.

3.1 அஞ்சல் அலுவலகத்தின் மூலம் கொடுப்பனவு மேற்கொள்வீர்களாயின் 'Payment method' இன் கீழுள்ள "Pay by postal Department" எனும் இணைப்பைத் தெரிவு செய்க. உங்களுக்கு அங்கு கிடைக்கப்பெறும் 'குறிப்பு இலக்கத்தை' **(Reference number)** தபால் அலுவலகத்தில் வழங்கி உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை உங்கள் வசம் வைத்துக்கொள்ள வேண்டும்.
செலுத்திய பின்னர் பரீட்சைகள் திணைக்கள உத்தியோகபூர்வ இணையதளத்தில் நுழைந்து உங்கள் விண்ணப்பத்தை தரவிறக்கம் (download) செய்ய முடியும்.

**கொடுப்பனவு பூர்த்தியடைந்த பின்னர் உங்களுக்கு கிடைக்கப்பெறும் குறுஞ்செய்தியிலுள்ள இணைப்பை (Link) செயற்படுத்துவதன் மூலம் உரிய விண்ணப்பத்தை தரவிறக்கம் (Download) செய்து கொள்ள முடியும்.**

3.2 வங்கி அட்டைகள் (Credit / Debit card) மூலம் பணம் செலுத்துவதற்காக "Payment method" இன் கீழுள்ள "Pay by credit / debit" நிகழ்ச்சியைத் தெரிவு செய்தல் வேண்டும்.

| பாட எண்ணிக்கை | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| **கட்டணம் (ரூபா)** | 150/- | 200/- | 250/- | 350/- | 400/- |

04. உங்கள் விண்ணப்பத்திலுள்ள தகவல்களுக்கு அமையவே பரீட்சை அனுமதிஅட்டை உங்களுக்கு கிடைக்கப்பெறும். பரீட்சை அனுமதி அட்டையில் ஏதேனும் மாற்றம் செய்ய வேண்டியிருப்பின் பரீட்சை அனுமதிப்பத்திரம் கிடைத்த பின்னர் பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ வலைதளத்தினுள் நுழைந்து (07) நாட்களுக்குள் உரிய மாற்றங்களை மேற்கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.

05. உங்களால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் விவரங்களுக்கும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தங்களுக்கு கிடைக்கப்பட்டுள்ள அனுமதி அட்டைக்குமிடையே வேறுபாடுகள் இருப்பின் அது தொடர்பாக ஏதேனும் விசாரணைகள் இருப்பின் உங்களுக்கு அனுமதிப்பத்திரம் கிடைத்தவுடன் உடனடியாக கீழுள்ள தொலைபேசி இலக்கங்கள் மூலமாக பரீட்சைகள் திணைக்களத்தின் பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேறு கிளையுடன் தொடர்பு கொள்ள வேண்டும்.

06. **சகல தனிப்பட்ட விண்ணப்பதாரிகளும் தமது நிரந்தர வதிவிட முகவரியையும் தமது தொலைபேசி இலக்கத்தையும் குறிப்பிட வேண்டுமென்பதுடன் தாம் கல்வி கற்ற தனியார், சர்வதேச பாடசாலைகள், தனியார் நிறுவனங்களால் நடாத்தப்படும் பாடசாலைகளின் பெயர், முகவரியையோ, தொலைபேசி இலக்கத்தையோ குறிப்பிடலாகாது.**

07. **ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்**
பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றும் எல்லா சந்தர்ப்பத்திலும் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டையை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டை அல்லது செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரத்தை கட்டாயமாகச் சமர்ப்பிக்க வேண்டும்.
இதுவரை தேசிய அடையாள அட்டை பெற்றுக்கொள்ளாத விண்ணப்பதாரிகள் இதற்குரிய விண்ணப்பப்படிவத்தை கிராம அலுவலர் ஊடாக ஆட்பதிவு திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கு தாமதமின்றி சமர்ப்பித்து தமது தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

**கவனிக்கவும் :-**
இப் பரீட்சைக்காக விண்ணப்பம் கோரப்படும் சந்தர்ப்பத்தில் தேசிய அடையாள அட்டை இல்லாத விண்ணப்பதாரிகள் பரீட்சைத் திணைக்களத்திற்கு நேரடியாக வருகை தந்து எங்களால் வழங்கப்படும் தற்காலிக அடையாள எண்ணைப் பெற்றுக் கொள்வது கட்டாயமாகும். இது தொடர்பில் வெளிநபர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைப் பயன்படுத்துவது முற்றாக தடை செய்யப்படுவதுடன் அவரது விண்ணப்பம் நிராகரிப்பதற்கான காரணமாகவும் இது அமையும்.

08. இப் பரீட்சை தொடர்பாக அரச பாடசாலைகளிலிருந்தும் / கட்டணம் அறவிடும் / அறவிடாத அரச அனுமதி பெற்ற தனிப்பட்ட பாடசாலைகளிலிருந்தும் / அனுமதி வழங்கப்பட்ட பிரிவெனாக்களிலிருந்தும் முதலாவது, இரண்டாவது முறையாகப் பரீட்சைக்குத் தோற்றும் சகல விண்ணப்பதாரர்கள் தவிர்ந்த ஏனைய அனைவரும் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தல் வேண்டும். அவ்வாறு கட்டணம் செலுத்தப்படாத விண்ணப்பப்படிவம் இரத்துச் செய்யப்படும்.

09. இப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு விசேட தேவையுடைய விண்ணப்பதாரிகள் இருப்பின் "Candidats with Special Education Needs " இன் கீழே தகவல்களை பூர்த்தி செய்வது கட்டாயமானது.
**குறிப்பு:** இப்பரீட்சை தொடர்பாக செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் முழுமையாகவோ, பகுதியாகவோ மீளளிக்கப்படமாட்டாதென்பதுடன் வேறு பரீட்சைகளுக்கு மாற்றப்படவும் மாட்டாது.

**இப்பரீட்சைக்கு விண்ணப்பித்து எந்த ஒரு வினாப்பத்திரத்திற்கோ அல்லது ஒரு வினாப்பத்திரத்தின் ஒரு பகுதிக்கோ தோற்றாத பரீட்சார்த்திகள் மட்டுமே, பரீட்சைக்குத் தோற்றாத பரீட்சார்த்திகளாகக் கருதப்படுவார்கள். அத்தகைய பரீட்சார்த்திகளின் பல்கலைக்கழக அனுமதி தொடர்பான பரீட்சை எத்தனம் (Attempt) செல்லுபடியற்றதாகிவிடாது என்பதால் அதற்காக எந்த வைத்திய அத்தாட்சிப் பத்திரமும் அவசியமற்றது. இவர்கள் தமது அனுமதி அட்டையைப் பாதுகாப்பாக வைத்திருப்பதே எந்த ஒரு பாடத்திற்கும் பரீட்சார்த்தி தோற்றவில்லை என்பதனை நிரூபிப்பதற்கான ஒரே ஆதாரமாகும். இது தொடர்பாக வைத்திய சான்றிதழ்களையோ வேண்டுகோள்களையோ திணைக்களத்திற்கு அனுப்புவது அவசியமற்றது.**

மேற்படி விடயங்கள் தொடர்பாக ஏதேனும் விசாரணைகள் இருப்பின் கீழுள்ள தொலைபேசி இலக்கங்கள் மூலமாக தொடர்பு கொள்ளவும்.
தொலைபேசி இலக்கம் : 011- 2784208 / 011-2784537 / 011-2786616
தொலைநகல் இலக்கம் : 011 - 2784422

**தொடர்பு எண் : 6/3/AL/2024**
**பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளை,**
**இலங்கை பரீட்சைத் திணைக்களம்**
**த.பெ.1503, கொழும்பு.**

**எச்.ஜே.எம்.சீ.அமீத் ஜயசுந்தர**
**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்**

2024.06.21

කෘෂිකර්ම අමාත්‍යාංශය
கமத்தொழில் அமைச்சு
**Ministry of Agriculture**
කෘෂිකර්ම අංශය / விவசாயப்பிரிவு / Agriculture Division
**Democratic Socialist Republic of Sri Lanka**
**Ministry of Agriculture**
**Agriculture Sector Modernization Project**
**IDA Credit No: 5873 LK**

# PROCUREMENT NOTICE

## Construction of Dry Chilli & Pomagranate Collection and Processing Center in Kilinochchi District, Northern Province

**LK-MOA-PMU-365179-CW-RFB**

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received a Credit from the International Development Association (IDA) in various currencies equivalent to US$ 58.630 Million towards the cost of the Agriculture Sector Modernization Project of the Ministry of Agriculture, and it intends to apply portion of the proceeds of this credit to eligible payments under the Contract for the following works as described in the table below.
2. Chairman, Project Procurement Committee on behalf of the ASM Project, Ministry of Agriculture, now invites sealed bids from eligible and qualified bidders for the following works as described in the table below.

| Contract No. | Description of Works | Estimated Cost Excluding VAT (Rs.) (Mn.) | Contract Period | Required Grade | Bid Security Amount (Rs.) | Bid Security Validity | Non Refundable Fee (Rs.) |
|---|---|---|---|---|---|---|---|
| LK-MOA-PMU-365179-CW-RFB | Construction of Dry Chilli & Pomagranate Collection and Processing Center in Kilinochchi District, Northern Province | 29.2 | 3 Months | C5 or above Buildings | 438,000.00 | 18th October 2024 | 5,000.00 |

3. Bidders are allowed to quote for the above work with Bid Security and Bid validity date as mentioned in the Bid document. One bidder is allowed to quote only one bid for each contract. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the field of respective construction for the grade mentioned in the table above with the Construction Industry Development Authority (CIDA)
4. Bidding will be conducted through the National Competitive Bidding (NCB) procedure approved by the World Bank.
5. Qualification requirements are indicated in Section 4 of the Bidding document. Additional details are provided in the Schedule (Section 5) of the bidding document.
6. Interested eligible Bidders may obtain further information from Provincial Deputy Project Director, Agriculture Sector Modernization Project, 286, Nawalar Road, Jaffna, Northern Province (T.P: 021 221 6358) and inspect the bidding documents at the same place on any working day **from 20th June 2024 to 04th July 2024 from 9:00 hrs to 14:30 hrs.**
7. Pre-Bid meeting will be held on **01st July 2024** at 10.00 am at PPMU, Northern Province. There will be a site visit to the proposed project site, after the pre-bid meeting.
8. Bids shall be valid up to **19th September 2024.**
9. Bids shall be accompanied by a Bid Security as per the information given in the Table.
10. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written application to the Provincial Deputy Project Director, Northern Province, Agriculture Sector Modernization Project, No: 286, Nawalar Road, Jaffna, Sri Lanka from **20th June 2024 to 04th July 2024** from 9:00 hrs to 14:30 hrs upon payment of a non-refundable fee as mentioned in the above Table, within the below mentioned period. The method of payment should be by cash.
11. Closing date of the bid is **04th July 2024, 14.30 hrs.**
12. Bids must be delivered to the Provincial Deputy Project Director, Northern Province, Agriculture Sector Modernization Project No: 286, Nawalar Road, Jaffna, Sri Lanka at or before 14:30 hrs on the bid closing date as mentioned above.
13. Electronic bidding will not be permitted. Late bids will not be accepted. Bids will be opened immediately after bid closing, in the presence of the bidders' representatives who choose to attend one person at the above-mentioned address.
14. Complete bids should be separately forwarded in two copies as the original and the duplicate. The original and the duplicate should be enclosed separately and marked as the 'original' and 'duplicate' respectively in sealed envelope. Both envelopes enclosed in a sealed single envelope and marked contract number and name of the contract on top left-hand corner of the envelope.

**Chairman,**
**Project Procurement Committee,**
**Provincial Deputy Project Director,**
**Northern Province,**
**Agriculture Sector Modernization Project,**
**No. 286, Nawalar Road, Jaffna, Sri Lanka.**
20th June 2024

## நெல்லியடியில் கௌரவிப்பு விழா ஆளுநர் பிரதம அதிதி



நெல்லியடி வாணிப கழகத்தின் ஏற்பாட்டில் தனியார் விடுதியொன்றில் நடத்தப்பட்ட கௌரவிப்பு விழாவில் பிரதம அதிதியாக வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் கலந்து சிறப்பித்தார்.

இந்நிகழ்வில் நெல்லியடியை சேர்ந்த 15 வர்த்தகர்கள் கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் கல்வி, மருத்துவம், சமயம் மற்றும் சமூக சேவைகளில் ஈடுபடும் 04 பேரும் இதன்போது கௌரவிக்கப்பட்டனர். இவர்களுக்கான நினைவுக் கேடயங்கள் கௌரவ ஆளுநரால் வழங்கப்பட்டதுடன், அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

நெல்லியடியைச் சேர்ந்த 12 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன.



இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய வெளிவிவகார அமைச்சர் டொக்டர். எஸ். ஜெய்சங்கர், இலங்கை வெளி விவகாரத்துறை அமைச்சர் அலி சப்ரியை கொழும்பில் சந்தித்துப் பேசினார்.



இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய வெளிவிவகார அமைச்சர் டொக்டர். எஸ். ஜெய்சங்கர், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை கொழும்பில் சந்தித்துப் பேசினார்.



இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய வெளிவிவகார அமைச்சர் டொக்டர்.எஸ். ஜெய்சங்கர், எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவைச் சந்தித்துப் பேசினார்.



கிண்ணியா பிரபல ஓவிய ஆசிரிய ஆலோசகர் சகீலின் கைவண்ணத்தில் உருவான ஓவியங்களின் கண்காட்சி கிண்ணியா மத்திய கல்லூரியின் அப்துல் மஜீத் மண்டபத்தில் நாளை ஜுன் 22 முதல் 25ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இக் கண்காட்சியை பொதுமக்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், இலவசமாக கண்டுகளிக்க முடியும் என ஓவிய ஆசிரியர் அழைப்பு விடுத்துள்ளார். **அஷ்ரப் ஏ சமத்**



வணக்கஸ்தலங்களுக்கு நல்லிணக்க விஜயங்களை மேற்கொண்டு வரும் தென் மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன, மாத்தறை குமாரதுங்க வீதியில் அமைந்திருக்கும் மீரான் ஜும்ஆப் பள்ளிவாசலுக்கு அண்மையில் விஜயம் செய்தார். இந்நிகழ்வில் மாத்தறை மின்னதுல் பாஸிய்யா அரபுக் கல்லூரி அதிபர் மௌலவி எம்.எஸ்.இஸ்திகார் (பாரி) மௌலவி பஹ்த் (பாஸி) பள்ளிவாசலின் நம்பிக்கையாளர்கள், மத்ரஸா நிர்வாகிகள், அருகிலுள்ள பள்ளிவாசல் நிர்வாகிகள் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், ஊர் ஜமாஅத்தினர்கள், என பலரும் கலந்து கொண்டனர்.


**வெலிகம தினகரன் நிருபர்**

## முடிவுறுத்தல் அறிவித்தல்

காலி, கித்துலம்பிட்டிய, தென் மாகாணம், சமூக நலன்புரி, மேம்படுத்தல் மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவை திணைக்கள ஆணையாளரினால் அறிவுறுத்தப்பட்டவாறு 2021 மார்ச் 24 ஆம் திகதியிலிருந்து மக்கள் சேவை மன்றமானது அதனது செயற்பாடுகளை மூடியுள்ளதென தயவு செய்து அறிந்து கொள்ளவும்.

**முகாமைத்துவம்,**
**மக்கள் சேவை மன்றம்.**


## 'சைவசமயத் தலையாய நூல்கள் – திருமுறை மெய்கண்ட சாத்திரம் போற்றுதும்' அருள்விழா



சைவசமயத் தலையாய நூல்கள் திருமுறை மெய்கண்ட சாத்திரம் போற்றுதும் அருள்விழா இன்று மாலை 4.00 மணிக்கு (21 06 – 2024) பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி முதன்மை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு சைவசமயப் பொது அறிவுத் தேர்வும் இடம்பெறும். இலங்கைக்கு வருகைதரும் வீரசைவ பேரூராதீன இருபத்தைந்தாம் குருமகா சந்நிதானப் பெருமானார் கயிலைப் புனிதர்,முதுமுனைவர், திருப்பெருந்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளாரை வரவேற்று நடத்தும் இந்நிகழ்வில் அன்னாரது ஆசிகளைப் பெற்றுக் கொள்ளுமாறு இலங்கை சைவப்பெருமக்கள் அனைவரையும் ஸ்ரீலஸ்ரீஆறுமுகநாவலர் சபை அன்போடு வரவேற்கின்றது

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் ஸ்ரீலஸ்ரீஆறுமுகநாவலர் சபை ஏற்பாட்டில் அகில இலங்கை இந்து மாமன்றம், உலக சைவப் பேரவை இலங்கைக் கிளை, இந்து வித்தியா விருத்தி சங்கம், கொழும்பு விவேகானந்த சபை, இலங்கை சைவநெறிக் கழகம், ஈழத்து திருநெறித் தமிழ் மன்றம், வடகொழும்பு இந்து பரிபாலன சங்கம், கதிர்காமம் யாத்திரிகர் தொண்டர் சபை, காக்கைதீவு இந்து மன்றம், இலங்கை சைவநெறித் தொண்டர் கழகம், இலங்கை சைவ சித்தாந்தத் திருமன்றம்,வத்தளை அகரம் சைவப் பொதுப்பணி மன்றம், வத்தளை மாணிக்கவாசகர் அறப்பணி மன்றம், உலகெலாம் சிவமயம் ஆன்மீக பீடம் இலங்கை, அருள்மிகு பொன்னம்பலவாணேசுவர் திருக்கோயில் நிர்வாகசபை, மோதர அருள்மிகு வெங்கடேசுவர மகாவிஷ்ணு கோயில் நிர்வாகசபை, அருள்மிகு மயூராபதி பத்திரகாளி அம்மன் கோயில் நிர்வாகசபை, பம்பலபிட்டி சம்மாங்கோடு அருள்மிகு மாணிக்க விநாயகர் கோயில் நிர்வாகசபை உட்பட பல அமைப்புக்கள் ஒத்துழைப்பு வழங்குகின்றன.

## ஜனரஞ்சகப் பாடகர் கலைஞர் கலைக்கமலின் "கீத்ராத் 6"



**தினகரன், தினகரன் வாரமஞ்சரி ஊடக அனுசரணையில் "ஜனரஞ்சகப் பாடகர் கலைஞர் கலைக்கமலின் " கீத்ராத் 61 " எதிர்வரும் ஜூலை மாதம் 07 ஆம் திகதி மாலை 7 மணிக்கு கொழும்பு 7 ஜே.ஆர். ஜெயவர்த்தன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.**

**பிரபல இசைக் கலைஞர்கள் பஸால் ஜின்னாஹ், அயாஸ் சவாஹிர், ஹாரிஸ் மாஸ்டர், சுப்பர் டியூனர்ஸ் பௌமி, அஸார் கௌஸ் இசையில் கலைக்கமலுடன் சிறப்புப் பாடகராக சிங்கப்பூர் பிரபல கலைஞர், சுங்கத் திணைக்கள அதிகாரி ஹாஜி ப.ஃரிஹூல்லாஹ், பிரபல பாடகி மொறின் ஜெனற் இணைந்து பாடவுள்ளனர். தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில் வேலவர் தலைமையில் பிரபல தொழிலதிபர், சமூகசேவையாளர் ALLIED TRADING INTERNATIONAL (PVT) LTD இப்திகார் அஹ்மத் , RANAR MIGRATION CENTER இயக்குநர் முஹம்மத் நஸீர் , சமுக சேவகி பாத்திமா ஸீனியா முன்னிலையில் நடைபெறவுள்ளது.**

பிரபல வானொலி அறிவிப்பாளர் கவிதாயினி கலையழகி வரதராணி நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்குவார். இசையபிமானிகள் இலவசமாக பார்த்து ரசிக்கலாம்.


## INVITATION FOR BIDS (IFB)

### DEPARTMENT OF LOCAL GOVERNMENT, NORTHERN PROVINCE

### VALIKAMAM SOUTH WEST PRADESHIYA SABHA, MANIPAY

### LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received **Loan & Grant** from the **World Bank & European Union** towards the cost of **Local Development Support Project (LDSP)**, and intends to apply part of the proceeds of this credit to payments under the Contract for the works stated in the Table below.
2. The **Chairman, Local Authority Procurement Committee, Local Development Support Project (LDSP)** on behalf of the **Valikamam South West Pradeshiya Sabha, Manipay** now invites sealed bids from eligible and qualified bidders for the works & goods stated in the Table below.

**Works**

| No. | Contract No. | Contract Name | Estimate of Cost (Rs. Mn) without VAT | Required CIDA Grade & Specialty | Contract Period (Days) | Bid Validity Period | Bidding Document Fee (Rs.) | Bid Security Amount (Rs.) | Bid Security Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | LDSP/NP/JAF/VSWPS/2024/PT2/04 Balance work-1 | Balance work of Children Park at Koolavady | 7.36 | C7or above Building Constructions | 45 | 27-Sep-2024 | 3,500.00 | 73,700.00 | 25-Oct-2024 |
| 02 | LDSP/NP/JAF/VSWPS/2024/BT4/01 Balance work-1 | Construction of two row Box culvert at Hospital Road Vadaliyaddaipu | 5.46 | C7or above Highway Constructions | 45 | 27-Sep-2024 | 3,500.00 | 54,600.00 | 25-Oct-2024 |

**Goods**

| No. | Contract No. | Contract Name | Estimate of cost (Rs. Mn) without VAT | Contract Period (Days) | Bid Validity Period | Bidding Document Fee (Rs.) | Bid Security Amount (Rs.) | Bid Security Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | LDSP/NP/JAF/VSWPS/2024/BT4/02 Balance work-01 | Purchasing of Animals models for Improvement work for Children's Park at Koolavady | 0.940 | 30 | 30-Aug-2024 | 1,500.00 | 9,500.00 | 27-Sep-2024 |
| 02 | LDSP/NP/JAF/VSWPS/2024/BT4/02 Balance work-02 | Purchasing of children's vehicles & Internal play equipment for Improvement work for Children Park at Koolavady | 1.612 | 30 | 13-Sep-2024 | 1,500.00 | 16,500.00 | 11-Oct-2024 |

3. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** procedure.
4. For the works, to be elgible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the specialty mentioned in Schedule for grade mentioned in table above with the Construction Industry Development Authority (CIDA).
5. Qualification requirements to qualify for contract award are included in Section 4 (Qualification Information) and Section 5 (Schedule) in the Bidding Document for the works and Volume 2 in the Bidding Document for the goods.
6. Interested bidders may obtain further information from **Secretary, Valikamam South West Pradeshiya Sabha, Jaffna Road, Manipay. (T.P No: 021 225 5381 , Fax No: 021 225 6643)** and inspect the bidding documents at Valikamam South West Pradeshiya Sabha, Jaffna Road, Manipay from **20-June-2024 until 11-July-2024 between 09:00 Hrs and 15:00 Hrs** on normal working days.
7. A complete set of Bidding Documents in English Language may be purchased by interested bidders on submission of a written application to the **Secretary, Valikamam South West Pradeshiya Sabha, Jaffna Road, Manipay from 20-June-2024 until 11-July-2024 between 09:00 Hrs and 15:00 Hrs** on normal working days.
8. Bids (Original and Copy) shall be delivered to **Chairman, Local Authority Procurement Committee, Valikamam South West Pradeshiya Sabha, Jaffna Road, Manipay, Jaffna** at or before **10:30 Hrs on 12-July-2024.** Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
9. All bids shall be accompanied by a **Bid Security** as stated in the Table above.
10. The Pre-Bid Meeting will be held at **Valikamam South West Pradeshiya Sabha , Jaffna Road, Manipay, Jaffna** on 27th June-2024 at 11:00 hrs. Interested bidders may participate in this meeting at their own expense.

**Chairman,**
**Local Authority Procurement Committee (LAPC),**
**Valikamam South West Pradeshiya Sabha,**
**Jaffna Road, Manipay, Jaffna.** **20.06.2024**

# இங்கிலாந்து, தென்னாபிரிக்க அணிகளுடன் சுப்பர் 8 சுற்று வெற்றிகரமாக ஆரம்பம்

## போட்டியை நடத்தும் நாடுகளுக்குத் தோல்வி




டி20 உலகக் கிண்ணத்தில் சுப்பர் 8 சுற்றை ஆரம்பித்து இங்கிலாந்து மற்றும் தென்னாபிரிக்க அணிகள் போட்டியை நடத்தும் முறையே மேற்கிந்திய தீவுகள் மற்றும் அமெரிக்காவை வீழ்த்தின.

செயின்ட் லூசியாவில் இலங்கை நேரப்படி நேற்று (20) நடைபெற்ற போட்டியில் நடப்புச் சம்பியன் இங்கிலாந்து அணி மேற்கிந்திய தீவுகளை 8 விக்கெட்டுகளால் இலகுவாக வீழ்த்தியது.

சுப்பர் 8 சுற்றில் குழு இரண்டுக்காக நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட மேற்கிந்திய தீவுகள் அணி 20 ஓவர்களுக்கும் 4 விக்கெட்டுகளை இழந்து 180 ஓட்டங்களைப் பெற்றது. குறிப்பாக அணித்தலைவர் ரோமன் பவல் 17 பந்துளில் 5 சிக்ஸர்களுடன் 36 ஓட்டங்களை விளாசினார்.

இந்நிலையில் பதிலெடுத்தாடிய இங்கிலாந்து அணி சார்பில் ஆரம்ப வீரர் பில் சோல்ட் 47 பந்துகளில் 7 பௌண்டரிகள் மற்றும் 5 சிக்ஸர்களுடன் ஆட்டமிழக்காது 87 ஓட்டங்களை விளாசி அந்த அணியின் வெற்றியை உறுதி செய்தார்.

இங்கிலாந்து அணி 17.3 ஓவர்களிலேயே 2 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை எட்டியமை குறிப்பிடத்தக்கது. மத்திய வரிசையில் ஜொன்னி பெஸ்டோ 26 பந்துகளில் 5 பௌண்டரிகள் மற்றும் 2 சிக்ஸர்களுடன் ஆட்டமிக்காது 48 ஓட்டங்களை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

முன்னதாக நடைபெற்ற சுப்பர் 8 சுற்றின் முதல் போட்டியில் முதல் முறை உலகக் கிண்ணத்தில் களமிறங்கி சிறப்பாக செயற்பட்டு வரும் அமெரிக்க அணி தென்னாபிரிக்காவுக்கு கடுமையாக சவால் கொடுத்தபோதும் அந்த அணி 18 ஓட்டங்களால் தோல்வியை சந்தித்தது.

அன்டிகுவாவில் குழு 2 இற்காக நடந்த இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட தென்னாபிரிக்க அணி 20 ஓவர்களுக்கும் 4 விக்கெட்டுகளை இழந்து 194 ஓட்டங்களை பெற்றது. ஆரம்ப வீரர் குவின்டன் டி கொக் 40 பந்துகளில் 74 ஓட்டங்களை விளாசினார்.

பதிலெடுத்தாடிய அமெரிக்க அணி 76 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியபோதும் 6 ஆவது விக்கெட்டுக்கு அன்ட்ரீஸ் குயிஸ் மற்றும் ஹார்மீத் சிங் 91 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்றனர்.

இதன்மூலம் அமெரிக்க அணி கடைசி 12 பந்துகளுக்கும் 28 ஓட்டங்களை பெற வேண்டி ஏற்பட்டது. எனினும் பந்துவீச வந்த ககிசோ ரபாட முதல் பந்தில் ஹார்மீத்தின் (38) விக்கெட்டை வீழ்த்தியதோடு அந்த ஓவரில் 2 ஓட்டங்களை மாத்திரமே விட்டுக் கொடுத்ததை அடுத்து தென்னாபிரிக்காவின் கை ஓங்கியது.

இறுதியில் 20 ஓவர்கள் முடிவில் அமெரிக்க அணி 6 விக்கெட் இழப்புக்கு 176 ஓட்டங்களையே பெற்றது. அபாரமாக துடுப்பெடுத்தாடிய குயிஸ் 47 பந்துகளில் 5 பௌண்டரிகள் மற்றும் 5 சிக்ஸர்களுடன் ஆட்டமிழக்காது 80 ஓட்டங்களை பெற்றார்.

## வலைப்பந்தாட்ட சம்பியனானது அன்னமலை மகா வித்தியாலயம்

காரைதீவு குறூப் நிருபர்



சம்மாந்துறை வலய வலைப்பந்தாட்ட சாம்பியனாக நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலய அணி வெற்றியீட்டியது.

சம்மாந்துறை வலய மட்ட விளையாட்டுப் போட்டியின் வலைப்பந்தாட்ட போட்டி நேற்று முன்தினம் (19) சம்மாந்துறை அல் மல்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது .

இதில் 16 வயதுக்குட்பட்ட வலைப்பந்தாட்ட போட்டியில் வீரமுனை ராமகிருஷ்ணா மகா வித்தியாலயம், சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம், சம்மாந்துறை அல் மல்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலை அணிகளைத் தோற்கடித்து நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலய அணி சாம்பியனாக தெரிவானது.

சம்மாந்துறை வலய திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி நுஸ்ரத் நிலோபரா முன்னிலையில் இந்தப் போட்டி நடைபெற்றது.

## மாகாண மட்ட கால்பந்து தொடர்: மாத்தளை ஸாஹிரா முன்னேற்றம்

மாளிகைக்காடு குறூப் நிருபர்



மாத்தளை மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற 20 வயதுக்கு உட்பட்டோருக்கான வலய மட்ட கால்பந்து தொடரில் மாத்தளை ஸாஹிரா தேசிய பாடசாலை அணி வெற்றியீட்டியது.

மாத்தளை ஹிந்து தேசிய பாடசாலை மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இந்தத் தொடரில் இறுதிப் போட்டியில் மாத்தளை அஜ்மீர் தேசிய பாடசாலை அணியை எதிர்கொண்ட மாத்தளை ஸாஹிரா தேசிய பாடசாலை 1–0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

இந்தமூலம் மாத்தளை மாவட்ட சம்பியனான அந்தப் பாடசாலை அணி மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவானது.

## கனடிய பயங்கரவாத பட்டியலில் ஈரானிய புரட்சிப் படை சேர்ப்பு



ஈரானின் இஸ்லாமிய புரட்சிக் காவல் படையை கனடா பயங்கரவாத அமைப்பு ஒன்றாக அறிவித்துள்ளது. எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மற்றும் புலம்பெயர் ஈரானிய உறுப்பினர்கள் பல ஆண்டுகளாக செய்து வந்த அழுத்தத்தை அடுத்தே இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

இந்த அறிவிப்பை கடந்த புதன்கிழமை (19) வெளியிட்ட கனடா பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டொமினிகா லேபிலன்க், 'சர்வதேச பயங்கரவாதத்திற்கு எதிரான போரில் முக்கிய அம்சமாக இது உள்ளது' என்று தெரிவித்துள்ளார்.

இதனால் ஆயிரக்கணக்கான ஈரானிய அதிகாரிகள் கனடாவுக்குள் நுழைவது தடை செய்யப்படுகிறது.

இதனைக் கண்டித்திருக்கும் ஈரானிய வெளியுறவு அமைச்சின் பேச்சாளர், 'விவேகமற்ற மற்றும் வழக்கத்திற்கு மாறான' செயற்பாடு என்று ஈரானின் பார்ஸ் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

ஈரானின் புரட்சிக் காவல் படை ஈரானில் பிரதான இராணுவ, அரசியல் மற்றும் பொருளாதார சக்தியாக இருப்பதோடு அது ஈரான் உயர்மட்டத் தலைவர் ஆயதொல்லா அலி கமனெயுடன் நெருக்கம் கொண்டுள்ளது.

சொந்தமான தரைப்படைகள், கடற்படை மற்றும் விமானப் படையை கொண்ட ஈரான் இஸ்லாமிய புரட்சிக் காவல் படையில் 190,000க்கும் அதிகமான படையினர் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் அமெரிக்கா 2019 ஆம் ஆண்டிலேயே இஸ்லாமிய புரட்சிக் காவல் படையை பயங்கரவாதப் பட்டியலில் சேர்த்ததோடு பிரிட்டன் இவ்வாறான ஒரு நடவடிக்கை பற்றி அண்மைக் காலமாகக் கூறி வருகிறது.

# சர்வதேச செய்திகள்

## போர் வெடித்தால் பரஸ்பரம் உதவ ரஷ்யா – வட கொரியா ஒப்பந்தம்



ஒரு நாட்டின் மீது தாக்குதல் நடந்தால் மற்ற நாடு உடன் அனைத்து இராணுவ உதவிகளையும் வழங்கும் வகையில் 24 ஆண்டுகளுக்குப் பின்னர் வட கொரியாவுக்கு விஜயம் மேற்கொண்ட ரஷ்யஜனாதிபதி விளாடிமிர் புட்டின், அந்த நாட்டுடன் ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளார்.

எட்டப்பட்டிருக்கும் இந்தப் பாதுகாப்பு உடன்படிக்கை 1961 இல் பனிப்போர் கூட்டணிகளான சோவியட் ஒன்றியம் மற்றும் வட கொரியா இடையில் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையை புதுப்பிப்பதாக பார்க்கப்படுகிறது. 1990இல் சோவியட் ஒன்றியம், தென் கொரியாவுடன் இராஜதந்திர உறவை ஏற்படுத்தியதை அடுத்து முந்தைய உடன்படிக்கை கைவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

விரிவான மூலோபாய கூட்டணி ஒன்றாக விளாடிமிர் புட்டின் மற்றும் வட கொரியத் தலைவர் கிம் ஜொங் உன் கடந்த புதன்கிழமை (19) இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

'இரண்டில் ஒரு தரப்பு ஆயுதப் படையெடுப்பு மற்றும் போர் ஒன்றை எதிர்கொண்டால் ஐ.நாவின் உறுப்புரை 51 மற்றும் இரு நாட்டினதும் சட்டங்களுக்கு அமைய மற்றத் தரப்பு இராணுவ மற்றும் பிற உதவிகளை வழங்குவதற்கு அனைத்து வழிகளையும் உடனடியாகப் பயன்படுத்த வேண்டும்' என்று இந்த ஒப்பந்தத்தின் உறுப்புரை 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

ரஷ்யா உக்ரைனுடன் போரில் ஈடுபட்டிருப்பதோடு வட கொரியா தனது அண்டை நாடான தென் கொரியாவுடன் போர் பதற்றத்தை எதிர்கொண்டிருக்கும் நிலையிலேயே இந்த ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளது.

கிழக்காசியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் புட்டின் வட கொரியாவில் இருந்து நேற்று (20) வியட்நாமை சென்றடைத்தார்.

## காசாவின் ரபா நகருக்குள் உயிர் சேதங்களுடன் இஸ்ரேலிய டாங்கிகள் முன்னேற்றம்: எண்மர் பலி



இஸ்ரேலிய டாங்கிகள் கடுமையான வான் தாக்குதல்களின் உதவியோடு தெற்கு காசாவில் ரபா நகரின் மேற்குப் பக்கமாக ஆழ ஊடுவி வருவதோடு இந்தத் தாக்குதல்களில் எட்டு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

புதன்கிழமை (19) நள்ளிரவுக்குப் பின்னர் ஐந்து சுற்றுப்புறங்களுக்குள் இஸ்ரேலிய டாங்கிகள் நுழைந்ததாக குடியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். மேலும் மேற்காக கடற்கரைப் பகுதியான அல் மாவாசியில் உள்ள இடம்பெயர்ந்த குடும்பங்கள் தங்கி இருக்கும் கூடாரங்கள் மீது கடும் செல் குண்டுகள் மற்றும் துப்பாக்கிச் சூடுகள் நடத்தப்பட்டதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ரபாவின் மேற்கு மற்றும் மத்திய பகுதிகளில் கடுமையான மோதல் இடம்பெற்று வருவதாகவும் இங்கு இஸ்ரேலிய தரைப் படை மற்றும் டாங்கிகள் பல நாட்களாக உக்கிர தாக்குதல்களை நடத்தி வருவதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதில் அதிக சன நெரிசல் மிக்க அல் ஷுபுரா அகதி முகாமில் இதுவரை இல்லாத அளவில் மோதல் உக்கிரமடைந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

எகிப்து எல்லையை ஒட்டிய ரபா பகுதி காசாவில் உள்ள பலஸ்தீனர்களின் கடைசி அடைக்கலமாக இருந்து வந்த நிலையிலேயே சர்வதேச எச்சரிக்கைக்கு மத்தியில் இஸ்ரேல் அங்கு படை நடவடிக்கையை முன்னெடுத்து வருகிறது.

இந்த நகரில் தொடர்ந்தும் 65,000க்கும் அதிகமான பலஸ்தீனர்கள் இருப்பதாக ஐக்கிய நாடுகள் நிவாரண மற்றும் பணிகள் நிறுவனம் மதிப்பிட்டுள்ளது.

'தற்போது ரபாவில் 65,000க்கும் மேற்பட்டோர் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது ஆறு வாரத்திற்கு முன்னர் இருந்ததில் இருந்து முற்றாக மாறுபட்ட நிலையாகும். இஸ்ரேலிய வெளியேற்ற உத்தரவு மற்றும் படை நடவடிக்கைக்கு முன்னர் அப்போது அங்கு 1.4 மில்லியன் இடம்பெயர்ந்த மக்கள் இருந்தனர்' என்று ஐ.நா. செயலாளர் நாயத்தின் பிரதிப் பேச்சாளர் பர்ஹான் ஹக் தெரிவித்தார்.

மோதல்கள் மற்றும் குண்டுத் தாக்குதல்களுக்கு மத்தியில் பலஸ்தீனர்கள் தொடர்ந்தும் இடம்பெயர்ந்து வருகின்றனர் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

மத்திய காசாவின் நுஸைரத் அகதி முகாமில் நேற்றுக் காலை சரமாரி வான் தாக்குதல்கள் இடம்பெற்றதோடு அங்குள்ள ஜதல்லா குடும்ப வீட்டின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இரு பெண்கள் கொல்லப்பட்டு மேலும் 12 பேர் காயமடைந்ததாக மருத்துவ வட்டாரங்களை மேற்கோள்காட்டி பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா தெரிவித்துள்ளது.

மேலும் வடக்காக காசா நகரில் உள்ள செய்தூன் பகுதிக்கு இஸ்ரேலிய டாங்கிகள் நுழைந்திருப்பதோடு டாங்கிகள் மற்றும் போர் விமானங்கள் கடும் தாக்குதல்களை நடத்தி வருவதாகவும் ஹமாஸ் போராளிகளுடன் துப்பாக்கிச் சண்டை இடம்பெற்று வருவதாகவும் குடியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

காசா நகரின் மற்றொரு புறநகர் பகுதியான ஷெய்க் ரத்வானில் வீடொன்றின் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் சிறுவர்கள் உட்பட நால்வர் கொல்லப்பட்டதாக மருத்துவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஹமாஸ் ஆயுதப் பிரிவு மற்றும் இஸ்லாமிய ஜிஹாத் போராளிகள் டாங்கி எதிர்ப்பு ரொக்கெட்டுகள் மற்றும் மோட்டார் குண்டுகளை பயன்படுத்தி இஸ்ரேலிய படையுடன் சண்டையிட்டு வருவதோடு சில இடங்களில் முன்கூட்டியே வெடிபொருட்களை புதைத்து வைத்து தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

காசா போரில் இதுவரை கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 37,400ஐ தாண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எட்டு மாதங்கள் தாண்டி நீடித்து வரும் இந்தப் போர் தணிவதற்கான சமிக்ஞைகள் இன்னும் தெரியவில்லை. அமெரிக்க ஆதரவிலான சர்வதேச மத்தியஸ்தர்களின் போர் நிறுத்த முயற்சிகள் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் அமைப்பை இணங்கச் செய்ய தவறி வருகிறது.

காசா பகுதியை சின்னாபின்னமாக்கி அந்த நிலத்தின் பெரும் பகுதியை இஸ்ரேலியப் படை கைப்பற்றியபோதும் ஹமாஸ் அமைப்பை ஒழிக்கும் அதன் பிரதான இலக்கை வெற்றி பெறத் தவறி வருகிறது.

### ஹமாஸை ஒழிக்க முடியாது



ஹமாஸ் அமைப்பை ஒழிக்க முடியாது என்று இஸ்ரேல் மூத்த இராணுவப் பேச்சாளர் கருத்து வெளியிட்டதை அடுத்து அதற்கு பதிலளித்த இஸ்ரேலிய அரசு ஹமாஸை ஒழிப்பதில் உறுதியாக உள்ளதாகத் தெரிவித்துள்ளது.

காசாவில் கடந்த எட்டு மாதங்களுக்கு மேலாக போரிட்டு வரும் இஸ்ரேல் அங்கு பெரும் அழிவுகளை செய்தபோதும், காசாவில் ஆட்சி புரியும் ஹமாஸை அகற்றுவதில் தோல்வி கண்டு வருகிறது.

இந்நிலையில் இஸ்ரேலின் 'சென்னல் 13' தொலைக்காட்சிக்குப் பேட்டி அளித்த இராணுவப் பேச்சாளர் ரியர் அட்மிரல் டானியல் ஹகரி கூறியாவது,

'ஹமாஸ் அமைப்பை அழிப்பது, மக்களின் கண்களில் மண் வீசுவதற்கு சமம். இறுதியில் சரியான மாற்று வழியை வழங்காத பட்சத்தில், ஹமாஸ் மீண்டும் அச்சுறுத்தலாக உருவாகலாம். ஹமாஸ் ஒரு சித்தாந்தம். அதனை ஒழிக்கவே முடியாது' என்றார்.

இந்தக் கருத்து இஸ்ரேலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய நிலையில் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அலுவலகம் உடன் பதிலளித்திருந்தது.

ஹமாஸை ஒழிப்பது தான் இந்தப் போரின் மிக முக்கிய குறிக்கோள் என்றும் அதற்கு இஸ்ரேலிய பாதுகாப்புப் படை முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அதில் வலியுறுத்தப் பட்டது.

### ஹிஸ்புல்லா எச்சரிக்கை



ஹிஸ்புல்லாவுக்கு எதிராக போரைத் தொடுத்தால் இஸ்ரேலின் எந்த இடமும் விட்டுவைக்கப்பட மாட்டாது என்று எச்சரித்த ஹிஸ்புல்லா தலைவர் ஹசன் நஸ்ரல்லா, இஸ்ரேலுக்கு விமானநிலையத்தை வழங்கினால் சைப்ரஸ் நாடும் இலக்கு வைக்கப்படும் என்று கண்டித்தார்.

'நாம் மோசமான நிலைக்கு தயாராகி வருகிறோம் என்பது எதிரிக்குத் தெரியும் என்பதோடு எமது ரொக்கெட்டுகள் எந்த இடத்தையும் விட்டு வைக்காது' என்று கடந்த புதன்கிழமை தொலைக் காட்சியில் உரையாற்றிய நஸ்ரல்லா குறிப்பிட்டார்.

இஸ்ரேல் எம்மை நிலம், கடல் மற்றும் வான் மார்க்கமாக எதிர்பார்க்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

லெபனானில் முழு அளவில் போர் ஒன்றை நெருங்கி இருப்பதாக இஸ்ரேல் அறிவித்த நிலையிலேயே நஸ்ரல்லாவின் இந்த எச்சரிக்கை வெளியாகியுள்ளது. கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி காசாவில் போர் வெடித்தது தொடக்கம் இஸ்ரேல் மற்றும் லெபனானின் ஹிஸ்புல்ல அமைப்பு பரஸ்பரம் தாக்குதல்களை நடத்தி வருவதோடு அண்மைய நாட்களில் பதற்றம் தீவிரம் அடைந்துள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜூன் மாதம் 21ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.